அறைவு 04 இயம் 17 Nov 14-20, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

சிங்கங்கள் தமது வரலாற்றைத் தாமாகவே வெளிவந்து சொல்லும் வரைக்கும் அச் சிங்கங்களை வேட்டையாடுபவர்கள் சொல்லும் சிங்கங்கள் தொடர்பான புனைவுகளைத்தான் நம்பவேண்டி இருக்கும்

கூ.கி.வா தியாங்கோ

HELLO MOBILE WORLD

122, NC Road Trincomalee

0777154663 - 0712674050

# இனப்படுகொலை ஆதாரமே திருமலை வதை முகாம்




## "அரசின் கட்டுப்பாட்டில் வதைமுகாம்கள் இல்லை"

ஸ்ரீலங்கா வெளி விவகார அமைச்சு

## "கடற்படைத் தளத்தினுள் ஐ.நா – கடற்படை அதிருப்தி"

– சிங்கள ஊடகம்

**தமிழர்களைக்** கடத்தி அல்லது கைது செய்து நிலத்தடிச் சுரங்க வதை முகாம்களில் வைத்திருந்தமைக்கான சான்றுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றிருப்பதாக ஐக்கியநாடுகள் சபையின் குழுவினர் வெளிப்படுத்தியதை அடுத்து இவ்வதை முகாம் தொடாபான கண்டனங்கள் தமிழ்நாட்டின் தலைவர்களால் வெளியிடப் பட்டுள்ளன.

இலங்கையின் திருகோணமலை பகுதியில் வதைக் கூடங்கள் இயங்கியமை இனப்படுகொலை - க்கான ஆதாரம் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு... 17

## நல்லாட்சியின் முதலாவது பாதீடு

**ந**ல்லாட்சி அரசின் புதிய பாதீட்டில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

- திறமையான கலைஞர்கள் தங்களின் அர்ப்பணிப்பின் ஊடாக உருவாக்கப்படும் ஓய்வூதிய

### 11 அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைப்பு

சம்பள முறைமைக்கு 15 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன தொழிற்சங்கங்களின் இணக்கப்பாட்டுடன் மட்டுமே இணைக்கப்படும்.

- குழந்தைப் பால்மாவின் விலை 100 ரூபாவினால் குறைக்கப்படும்.

- 11 அத்தியாவசியப்பொருட்களின் விலை 04

## வதைமுகாம் விசாரணை கடற்படையினர் கைது?

**ஐ**க்கிய நாடுகள் அமைப்பு பகிரங்கப் - படுத்திய திருகோணமலை கடற்படை முகாமில் இயங்கி வந்த சித்திரவதை முகாம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இரண்டு அதிகாரிகள் உட்பட மூன்று கடற் படையினர் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேசத் தமிழ் ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொடரும் இச் செய்தியானது குறித்த சித்திரவதை கூடம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் நடத்தும் விசாரணைக்கு கடற்படையினர் ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டுள்ள கடற்படை அதிகாரிகளின் பெயர்களை வெளியிட அந்த அதிகாரி மறுத்துள்ளதுடன் புலனாய்வுப் பிரிவு விசாரணைகள் பற்றி தகவல்களை வெளியிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை துறைமுகத்திற்கு

## அனல் மின்நிலைய நடவடிக்கை ஆரம்பம்

### காணியை விட்டு வெளியேறுமாறு சம்பூர்வாசிக்கு அறிவித்தல்


**க**டற்கரைச்சேனை கிராம பிரிவிலுள்ள மாரிமுத்து கணேசமூர்த்தி என்பரின் சொந்தக் காணியிலிருந்து வெளியேறுமாறு மூதூர் பிரதேசச் செயலாளர் எழுத்து மூல அறிவிப்பை விடுத்துள்ளார்.

நேற்று (20) ஆம் திகதி வெளியேறுமாறு தனக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த காணியானது அரசாங்கத்திற்குச் சொந்தமானது எனவும் அதனடிப்படையில் அக்காணியை விட்டு வெளியேறுமாறு அவ் எழுத்து மூல அறிவிப்பு தனக்கு அறிவுறுத்துவதாகத் தெரிவித்த கணேசமூர்த்தி, அனல் மின்நிலையத்திற்கு நிலக்கரி எடுத்துச் செல்வதற்கான பாதையாகவே தனது காணி பயன்படுத்தப்படப் பொவதாகத் 17

## நாம் அரசியல் ரீதியாகவும் ஏமாற்றப்படப் போகின்றோம்

### 2016ல் தீர்வு கிடைக்காது



**2016ம் ஆண்டு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்க் கூடிய அரசியல் தீர்வு கிடைக்கப்போவதில்லை. நாம் அரசியல் ரீதியாகவும் ஏமாற்றப்படப் போகிறோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

கனடா உறங்கா விழிகள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மண்டபத்தில் யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கான உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# இணைவில் தனித்துவத்தைப் பேணமுடியாது தவிப்பது ஏன்?

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் அறவழிப் பட்டினிப் போராட்டமானது இரண்டாவது தடவையாகவும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

முடிவற்றுத் தொடரும் இப் போராட்டத்தில் இடைநிறுத்தல்கள் இன்றியமையாதவையாகக் காணப்படுவதற்கு மிக முக்கியமான காரணம் ஸ்ரீலங்காவில் மனித உயிருக்கு இருக்கும் பெறுமதி மிகக் கீழ் நிலையில் இருப்பதேயாகும். ஆசிய நாடுகளிலும் மேலைத்தேய நாடுகளிலும் பட்டினிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் போது அவற்றிற்கான பெறுமானம் வித்தியாச-மானதாகவே அமைகின்றது.

அந்த அடிப்படையில் ஸ்ரீலங்கா போன்ற கீழைத்தேய நாடுகளில் தற்போதைய காலகட்டத்தில் பட்டினிப் போராட்டங்களைப் பெறுமதி மிக்க போராட்டமாகக் கருதவோ அல்லது அப்பட்டினிப் போராட்டம் ஊடாக இழக்கப்படும் மனித உயிருக்கு இருக்கும் பெறுமதியை ஏற்றுக்கொள்ளவோ அரசுகள் தயாராக இல்லை என்பதே உண்மை! நிற்க.

அரசியல் கைதிகளின் போராட்டமானது புனர்வாழ்வு என்ற மு(ம)டிவிற்குள் அமிழ்த்தப்பட்டுள்ள நிலையில் அரசுடன் இணைந்து தமிழருக்கான நலன்களை முன்னெடுக்க முடியும் என முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிக்கு இணைவினால் எதனையும் சாதிக்க முடியாது என்பது உணர்த்தப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் அரசுடன் இணைந்து செயற்படுவதன் ஊடாகத் தமிழர்களின் தனித்துவத்தைப் பாதுகாக்க முடியாததொரு சூழல் சிறுகச் சிறுக உருவாகுவதைக் காண முடிகின்றது.

எதிர்கட்சியாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட உறுதிமொழியைப் பற்றி நல்லாட்சியின் கோதாவில் நாட்டில் ஆட்சி புரியும் தலைமைப் பீடம் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை என்பது மக்களின் சந்தேகமான எழுந்துள்ளது. ஆனால் நல்லாட்சியின் கோதாவில் ஆட்சிபுரியும் தலைமைப் பீடம் உண்மையில் அவ்வாறானதொரு உறுதிமொழியை எதிர்க்கட்சியாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கு வழங்கியதா? என்பது பற்றி யாராலும் உறுதி செய்ய முடியாதிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்குக் கருத்தறிவித்திருந்தார்.

எனவே இங்கு அடிப்படையில் முக்கியமானதொரு சந்தேக நிலை எழுகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முன்வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்கொண்டுள்ள முக்கியமான மறுதலிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உருவாகியுள்ள நிலையில் இணக்க அரசியலின் ஊடாக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட முன்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தனித்துவத்தை இழக்கும் நிலைக்கு வந்துள்ளது.

அதற்கான மிகமுக்கியமான காரணமாக இருப்பது அக் கூட்டணியின் நடவடிக்கைகளில் ஒளிவு மறைவற்ற தன்மை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதே காரணமாகும்.

அக்கூட்டணியின் தலைமைத்துவமானது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்திருந்தாலும் கூட்டணியாக இயங்கும் போது ஏனைய கட்சிகளுக்கும் அக்கூட்டணியில் என்ன நடக்கின்றது என்பதைத் தெரியப்படுத்தும் மறுதலிக்க முடியாத கடமை அக்கூட்டணியின் தலைமைத் துவத்திற்கு உண்டு. இந் நடவடிக்கை முதலாவது படி நிலை ஒளிவுமறைவற்ற தன்மையாக இருக்கஇ இரண்டாவது படிநிலையில் கூட்டமைப்பு மக்களுக்கு ஒளிவுமறைவற்றதான செய்திகளை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பிருப்பதைக் கணக்கில் எடுக்க வேண்டும்.

நடைபெறுகின்ற பேச்சுக்களின் போது உண்மையில் என்ன நடந்தது என்பதை மக்களுக்குத் தெரியப் படுத்துவதன் ஊடாக மக்களே பல விடயங்களைப் புரிந்து செயற்படும் நிலை தோன்றும் போது தனித்துவத்தைப் பேணும் இடர்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

ஆனால் உண்மையை மக்களுக்குத் தெரிவிப்பது சாணக்கியமான செயல் அல்ல என்றும் அவ்வாறு தெரிவிக்காமல் தாமே தமிழ்மக்களின் சார்பில் தீர்மானங்களை எடுத்துச் செயற்படுவதே இராசதந்திரம் என்றும் கூட்டமைப்பு கருதுமானால் தவிர்க்க முடியாமல் அவ்வமைப்பு கருத்தியல் ரீதியாக மக்களிடம் இருந்து தனித்துவிடப்படுவதுடன் அரசில் இணைந்திருப்பதால் பெரும்பான்மைக் கட்சிகளின் செயற்பாட்டால் இலகுவாக ஏமாற்றப்படக்கூடிய நிலையையும் அடையும். இவ்வாறு ஏமாற்றப்படும் நிலையை இன்று எதிர்கொள்ளும் சவாலாக கூட்டமைப்பின் முன் எழுந்துள்ள போது இணைவில் தனித்துவத்தைத் தக்கவைக்க முடியாது உள்ளகப் பூசல்களால் இழுபறி நிலை தோன்றுவது தவிர்க்கமுடியாததாகி விட்டது.

மாவட்டம்

## பெண் அரச வெளிக்கள அலுவலருக்கு மோட்டார் சைக்கிள்கள்

ஹலீம்

அரச திணைக்களங்களில் பணியாற்றும் 450 பெண் அரச வெளிக்கள ஊழியர்களுக்கான மோட்டார் சைக்கிளகள் வழங்கப்பட்டன.

நீண்டகாலமாக காத்திருந்தே இவற்றை அவ்வலுவலர்கள் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் இச் சைக்கிள்களுக்கென அரச அலுவலர்கள் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய்களை அரச கணக்கில் வைப்பிலிட்டுருந்தனர்.

மோட்டார் வண்டிகளை வழங்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு:புஸ்பகுமார தலைமையில் கடந்த 16ம் திகதி இன்று திருகோணமலை சங்கமித்தவில் இடம்பெற்றது இந் நிகழ்வில் பிரதம அதிதியாக திருமலை மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ருப் அவர்கள் கலந்து கொண்டார்.



மாவட்டம்

## முதியவர்கள் 107 பேருக்கு அடையாள அட்டை சட்ட உதவி ஆணைக்குழு நடவடிக்கை

தேசிய அடையாள அட்டை இல்லாத முதியவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவைகள் நடைபெற்றுள்ளன.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் திருக்கோணமலை நிலையமும் குச்சவெளி பிரதேச செயலகமும் இணைந்து சலப்பையாறு மற்றும் புல்மோட்டைப் பகுதிகளில இரண்டு நடமாடும் சேவைகளை கடந்த திங்கள் (16), செவ்வாய் (17) ஆகிய தினங்களில் நடாத்தியிருந்தது.

இந் நடமாடும் சேவையில் சாதாரண நடைமுறைகளின் கீழ் தேசிய அடையாள பெற்றுக்கொள்ள முடியாத 107 முதியவர்களுக்கு அவற்றை வழங்குவதற்குரிய விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழுவின் திருக்கோணமலை நிலையத்தின் திட்ட உத்தியோகத்தர் டேவிட் மைக்கல் மற்றும் குச்சவெளி உதவிப் பிரதேச செயலாளர் செல்வி எஸ். அமலினி ஆகியோர் முன்னின்று நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





மாவட்டம்

## மாவட்ட அறநெறிப் போட்டிகளில் விஸ்வநாதசுவாமி அறநெறிப் பாடசாலை பெரு வெற்றி

அச்சுதன்

இந்துசமய அறநெறிப் பாடசாலைகளின் 25வது ஆண்டு நிறைவை ஒட்டி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆக்கத் திறனை வெளிக் கொணர்தலுக்காக நடாத்தப்பட்ட மாவட்ட மட்டப் போட்டிகளில் திருக்கோணமலை அருள்மிகு விஸ்வநாத சுவாமி (சிவன்) அறநெறிப் பாடசாலை பேச்சுப் போட்டியில் 16 இடங்களையும் கட்டுரைப் போட்டியில் 10 இடங்களையும் சித்திரப் போட்டியில் 12 இடங்களையும் தமதாக்கிக் கொண்டுள்ளார்கள்.

திருக்கோணமலை மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் பண்ணிசையும் பஜனையும் போட்டியிலும் நாடகப் போட்டியிலும் முதலாவது, பரதநாட்டியப் போட்டியில் இரண்டாவது, வில்லுப்பாட்டு போட்டியில் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளதுடன், பேச்சுப் போட்டியில் தரம் 1ல் முதலாவது, மூன்றாவது மற்றும் தரம் 4ல் மூன்றாவது, தரம் 5ல் முதலாவது மற்றும் இரண்டாவது, தரம் 6ல் முதலாவது, இரண்டாவது தரம் 7ல் முதலாவது இடத்தையும், தரம் 10ல் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்கள்.

இப் போட்டிக்களுக்கான தேசிய மட்டப் போட்டி இன்று (21) கொழும்பு இராமநாதன் பெண்கள் பாடசாலையில் நடைபெற உள்ளதாக திருக்கோணமலை பிரதேச செயலாளர் காரியாலயத்தை சேர்ந்த இந்துசமய அறநெறிப் பாடசாலைகளுக்கு பொறுப்பான திருமதி சுமணலதா சரத்பாபு தெரிவித்தார்.



## பிணையளிக்கப்பட்டவரின் எதிர்கால நலனுக்கு உதவுங்கள்

### த.தே.கூ முக்கியஸ்தர் நித்தி மாஸ்டர் வேண்டுகோள்

அச்சுதன்

எமது தமிழ் மக்களின் உரிமை-களுக்காக இளம் வயதிலேயே படிப்பைத் துறந்து, பாசத்தை இழந்து விடுதலைப் போராட்டத்துக்குத் தங்களை அர்ப்பணித்து போராடிய வேளையில் துரதிஷ்டமாக கைதுசெய்யப்பட்டு பத்து, பதினைந்து ஆண்டுகள் சிறையில் வாடி, எத்தனையோ சித்திரவதைகளை அனுபவித்து கடுமையான சாத்விகபோராட்டத்தின் பின்னர் இன்று பிணையில் விடுதலையாகி சிறைவாசத்தை விட்டுவெளியில் வந்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், நாளையஉலகம் என்னாகுமோஎன்றகேள்விக்குறியில் உள்ளனர். எனரெலோவின் நிர்வாகசெயலாளரும் திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தருமான நித்தி மாஸ்டர் தெரிவித்தார். இவர்களுக்குப் பொருளாதார உதவி இன்றியமையாதது ஆகும்.

எனவே விடுதலையான இவ்வாறான எமது உறவுகளுக்கு தனியார் நிறுவனங்களிலும், அரசாங்க திணைக்களங்களிலும் தொழில் வாய்ப்புக்கள் வழங்க எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள் முன்வரவேண்டும்.

அத்துடன் இவர்களின் எதிர்கால வழக்கு விசாரணைகளுக்கு தேவையான நிதி உதவிகளையும் மற்றும் இவர்களின் பிள்ளைகளின் கல்விக்கான செலவுகளையும் தமிழ் அமைப்புக்கள் மேற்காள்ள முன்வர வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்புத்தடை நீக்கம்

## மாணவர்கள் வகுப்புக்களுக்கு சமூகமளிக்கலாம் என அறிவிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை வளாகத்தின் இரண்டு மாணவர் குழுக்களிடையே ஏற்பட்ட கைகலப்பை அடுத்து மறுஅறிவித்தல் வரை கலை கலாசார கற்றை நெறியின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

விதிக்கப்பட்டிருந்த வகுப்புத் தடை நீக்கப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை முதல் இரண்டாம் முற்றும் மூன்றாம் வருட மாணவர்கள் வகுப்புகளுக்கு சமூகமளிக்க முடியும் என அறிவிக்கப்-பட்டுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ.பகீரதன் குறிப்பிட்டார்.

இந்த மாணவர்கள் தொடர்பில் பல்கலைக்கழக மட்டத்திலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற-போதிலும், மாணவர்களால் முன்வைக்கப்-பட்ட மேன்முறையீட்டை கவனத்திற்கொண்டு அவர்களின் வகுப்புத் தடையை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் விடுதிகளில் இருந்து வெளியேறியிருந்த மாணவர்களுக்கும் மீண்டும் விடுதிகளுக்கு திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 850 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறையிலிருந்த கைதி தப்பி ஓட்டம்

மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்த கைதியொருவர் கடந்த புதன்கிழமை தப்பியோடியுள்ளதாகவும் அவரை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் சிறைச்சாலை சாவல் அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்படி கைதி கொள்ளைச் சம்பவமொன்றில் ஈடுபட்டமை தொடர்பில் மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு, மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 85மில்லியன் ரூபாய் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கிவைப்பு



இவ்வாண்டு வாழ்வின் எழுச்சித்திட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்காக 84 மில்லியன் ரூபாய் நிதி மட்டக்களப்பு மாவட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் பி.குணரட்ணம் தெரிவித்தார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாழ்வின் எழுச்சித்திட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்களை வழங்கி வைக்கும் வைபவம் கடந்த புதன்கிழமை மண்முனைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இங்குள்ள மக்களின் வறுமையை போக்கி அவர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு வாழ்வதார தொழில் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

அந்தவகையில், கடந்த ஆண்டு 55 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வாழ்வதார உபகரணங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று, இந்த வருடமும் 84 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த வாழ்வாதார தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு



களுவாஞ்சிகுடி, பழுகாமத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஒரு பிள்ளையின் தந்தையான 26 வயது ஜெயதீபன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலை குறித்த நபர் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குடும்பத்தினர் காவல்துறையினருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விவசாயிகளுக்கான பழக்கன்றுகள் வழங்கி வைப்பு

**வவுணதீவு**

கிராமிய மட்ட காணி பயன்பாட்டு மாதிரி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பழ மரக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பத்தரைக் கட்டைக் கிராமத்தில் கடந்த புதன்-கிழமை இடம்பெற்றது.



காணி உபயோக கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் மா, தோடை, பலா உள்ளிட்ட பழ மரக் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி வைத்தார்.

இதன்மூலம், 60 குடும்பங்களுக்கு தலா 15 பயன் தரும் பழ மரக் கன்றுகளும் மற்றும் நிலக்கடலை, சோழன் போன்ற சேனைப் பயிர் விதைகளும் வழங்கப்பட்டன.

இதில், உதவி பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு மற்றும் நிருவாக உத்தியோகத்தர் ஜெ. ஜெயந்திரன், காணி பண்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் என். குமாரதாஸ் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்பு செய்திகள்

## 130 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்

### அரசாங்கம் விபரங்களை மறைக்கின்றதா??

நா.உ சீனித்தம்பி யோகேஸ்வரன்



மட்டக்களப்பு கித்துள் ஸ்ரீ கிருஸ்ணா வித்தியாலயத்தில் மலர் வெளியீடும், சாதனையாளர் கௌரவிப்பும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போது கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அரசாங்கம் அறிவித்ததன் பின்னர், மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 130 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்ததென்று அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று-கையில், "கிழக்கு மாகாணத்தில் மாவிலாறுப் பகுதியில் ஆரம்பித்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் உக்கிரமடைந்து கிழக்கு மாகாணம் முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்னர் மக்கள் மீள்குடியமர்தப்பட்டனர். இக்காலப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 130 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானவர்கள் படுவான்கரைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் மறைக்க முற்படுகிறது. காணாமல் போனவர்களின் உறவினர்கள் பலர் தமது உறவினர்களை யார் அழைத்துச் சென்றார்கள் என விவரமாக ஆணைக்குழுக்கள் முன்னிலையில் சாட்சியமளித்து-ள்ளார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட-வர்களுக்கு எதிராக அரசாங்கம் விசாரணை நடத்துவதுடன், அழைத்துச் செல்லப்பட்டவர்-களுக்கு என்ன நடந்தது என்று தகவல் வெளியிட வேண்டும் எனவும் கூறினார்.

## இரு கொள்ளைச்சம்பவங்கள்

**ஏறாவூர், வவுணதீவு**

ஏறாவூர் மற்றும் வவுணதீவு ஆகிய கொள்ளைச்சம்பவங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பிரிவு பொறுப்பதிகாரி கே.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரிவுக்குட்பட்ட தளவாய் பகுதியில் மூவர் பொல்லு தடிகளுடன் சென்று சட்டத்தரணி ஒருவரை தாக்கிவிட்டு அவரின் மனைவியின் தாலிக்கொடியை அபகரித்துச்சென்றுள்ளனர். வீட்டிக்கு வந்த மூன்று பேர் வெளியில் ஒளிர்ந்த மின் குமிழை அணைத்துவிட்டு இந்த கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக கே.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

வவுணதீவு பிரிவுக்குட்பட்ட கரவெட்டிப்பகுதியில் மூடியிருந்த வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த நான்கு கையடக்க தொலைபேசிகள், மூன்று பவுண் தங்க நகைகள், பத்தாயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிட்டுச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## விபத்தில் காவல் அதிகாரி படுகாயம்

மட்டக்களப்பிலிருந்து ஏறாவூரை நோக்கி பயணம் செய்த போது சாரதிப் பயிற்சி வான் ஒன்றில் மோதி படுகாயமடைந்த காத்தான்குடி காவல் நிலையத்தில் பணியாற்றும் பன்குடாவெளியைச் சேர்ந்த காவல் உத்தியோகத்தரான ஆர்.றொபின் (வயது 27) என்பவர் செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்திய-சாலைக்கு மாற்றப்பட்டார். விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளும் வானும் சேதமடைந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீட்டின் தொடர்ச்சி – 2

குறைக்கப்பட்டுள்ளன. உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், பால்மா, நெத்தலி, டின்மீன், பருப்பு, காஸ் மற்றும் மண்ணெண்ணை ஆகியவற்றின் விலையே குறைக்கப்படும். உருளை கிழங்கு 75-85 ரூபாய், பெரிய வெங்காயம் 85-95 ரூபாய், உலர் உற்பத்தி பால்மா 400 கிராம் 295 ரூபாய், குழந்தைகளுக்கான பால்மா 100 ரூபாவால் குறைப்பு, டின் மீன் 125 ரூபாய், நெத்தலி 410 ரூபாய், பருப்பு 1 கிலோகிராம் 169 ரூபாய், கருவாடு 1 கிலோகிராம் 1,100 ரூபாய், கடலை 169 ரூபாய்

- தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, 04 சதவீதமாக அதிகரிப்பு.
- மத்தல விமான நிலையம் சரக்குகளை கையாளும் கேந்திரமாக மாற்றப்படும்.
- பயன்படுத்தப்பட்டபின் இறக்குமதி செய்யப்படும் சலவை இயந்திரம், அலைபேசி மற்றும் தொலைக்காட்சிகளுக்குத் தடை.
- வெளிநாட்டு தூதரகங்களில் சேவையாற்று - கின்றவர்களுக்கு முறையாக பயிற்சி பெற்றுக் - கொடுத்தல், அவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி செலவை அரசாங்கம் ஏற்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.
- களனி ரயில் தண்டவாள புனரமைப்பு 1,500 மில்லி.
- இலஞ்ச ஊழில் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.
- கண்டி, மாத்தறை, நல்லூரில் மூன்று புற்றுநோய் வைத்தியசாலைகள் அமைக்கப்படும்.
- 1000 இரத்தம், கூழ்மப் பிரிப்பு மத்திய நிலையங்களை உருவாக்க 5,000 மில்லியன்
- ஆங்கிலம், தமிழ் நாடகங்கள் மற்றும் திரைப்படங்களுக்கு வரி விலக்களிப்பு.
- வீதி விபத்துகளுக்கு 10,000 ரூபாய் தண்டம் விதிக்கப்படும்.
- 2016ஆம் ஆண்டிலிருந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு புதிய ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.
- 75 வயது வரையான சகல பிரஜைகளுக்கும் வைத்திய காப்புறுதி வழங்குமாறு சகல காப்புறுதி நிறுவனங்களிடமும் கோருகின்றேன்.
- தனியார் துறை முதலீட்டுடன் தென், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலைகளை முகாமைத்துவம் செய்வதற்கு விசேட பிரிவு, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை பாதுகாப்பதற்கு பிரிவொன்று உருவாக்கப்படும். அதன் மூலமாக அதன் உரிமம் மாற்றம் பெறாது.
- காவல் நிலையங்களின் எண்ணிக்கையை 428 இலிருந்து 600 ஆக அதிகரிப்பதற்கு 1,000 மில்லியன்
- 2 வருட காலத்துக்குள் காவல் அதிகாரிகளின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கு 3,000 ரூபாய் வழங்கப்படும்.
- பதுளை, திகன மற்றும் புத்தளம் ஆகிய இடங்களில் உள்ளூர் விமான நிலையங்கள்
- கொழும்பு கடற்கரை வீதியிலிருந்து பாணந்துறை வரையில் அதிவேக நெடுஞ்சாலை அமைக்க 15,000 மில்லியன்
- சகல பல்கலைக்கழகங்களுக்கும் றுகைை வசதி வழங்கப்படும். இதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- கல்விக்கு 90,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.41 சதவீதமாகும்.
- பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக 250 மில்லியன்
- அநுராதபுரம், யாழ்ப்பாணம், குருநாகல் வைத்தியசாலைகளுக்கு 3,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும். மின்னேரியாவில் சிறுநீரக வைத்தியசாலை நிர்மாணிப்பதற்கு 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- மாலேம்பே மாபொல பல்கலைக்கழகம் என்ற பெயரில் புதிய பல்கலைக்கழகத்தை உருவாக்கும் யோசனையை முன்வைக்கின்றேன். அதற்காக 3,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.
- கிளிநொச்சியில் பொறியியல், விஞ்ஞானப்பீடம் மற்றும் வவுனியாவில் விவசாயபீடம் உருவாக்கப்படும்.
- பல்கலைக்கழக மாணவர்கள், மடிக்கணினி கொள்வனவு செய்வதற்காக 30,000 ரூபாய் கடன் வழங்கப்படும்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான முதலீடு 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படும்.
- பாடசாலை சீருடைக்காக வவுச்சர் முறைமை அறிமுகப்படுத்தப்படும்.
- வகுப்பொன்றில் மாணவர்களின் எண்ணிக்கை 35ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் இதழ்களுக்கான இறக்குமதி வரி முழுமையாக நீக்கப்படும்.
- 1,000 பாடசாலைகளுக்கான நூலகங்கள், ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக 15,000 மில்லியன் ரூபாய் வழங்கப்படும். கவனிக்கப்படாத பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக 30 ஆயிரம் ரூபாய் மில்லியன் ஒதுக்கப்படும்.
- கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் புதிய ஆசிரியர்களுக்கு 05 வருடங்களுக்கு கட்டாயம் பயிற்சி பெற வேண்டும். பிரதேச மற்றும் கிராமிய பாடசாலைகளுக்காக ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைசார் ஆசிரியர்கள் நியமனம்.
- சகல பாடசாலைகளுக்கும் தேவையான சுகாதார வசதிகளை 2016ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்

05:03 °ஆ - தனியார் துறையினருக்கு குறைந்தபட்சம் மாதாந்தம் 2,500 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்குமாறு கோருகின்றோம்.

05:03 °ஆ - கடன் அட்டைகளை பயன்படுத்தி உள்ளூர்ப் பொருட்களை கொள்வனவு செய்யப்படும்போது, அறவிடப்படும் 1.5 சதவீதமான முத்திரை வரி குறைக்கப்படும். வெளிநாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்யும்போது 2.5 சதவீத வரி அறவிடப்படும்.

- நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன அனுமதிப்பத்திரங்கள் ஒழிக்கப்படும். அதேபோல், அரசாங்கத்தின் சகல வாகனங்களுக்கும் வரி கட்டப்பட வேண்டும்.
- சகல ஊழியர்களுக்கும் சம்பள கணக்கு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை.
- மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிக்கான விலை மதிப்புக்கட்டணம் 2,500 ரூபாய் ஆகும். காருக்கு 15,000 ரூபாய் விலை மதிப்புக்கட்டணம்.
- எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும்.
- திவிநெகும வங்கி, தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைக்கப்படும்.
- ஆடை, பாதணிகள் மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்ட 15 பொருட்களுக்கான இறக்குமதி வரி விலக்களிக்கப்படும்.
- காரைநகர், கல்முனை மற்றும் சிலாபம் உள்ளிட்ட மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய 470 மில்லியன் காலி கோட்டை அபிவிருத்திக்காக 500 மில்லியன்
- மண்ணெண்னை விலை 10 ரூபாவினாலும் சமையல் எரிவாயு விலை 150 ரூபாவினாலும் குறைக்கப்படும்.
- நாடாளுமன்றத்துக்கு அண்மையில் சர்வதேச கண்காட்சி மத்திய நிலையத்தை நிறுவுவேன்
- விருந்தோம்பல் துறையுடன் இணைந்துகொள்வதற்கு விரும்புகின்ற இளைஞர்களுக்கு பயிற்சிப்பாடம் அறிமுகப்படுத்தப்படும். ஆகக்கூடுதலாக 15,000 ரூபாய் பெறுமதியான பாடத்திட்டத்துக்கு அரசாங்கம் 50 சதவீதம் செலுத்தும்.
- கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அரசாங்கக் காணிகளில் வீடுகளை நிர்மாணித்து குறைந்த விலையில் வழங்குவதற்கான முறைமை மேற்கொள்ளப்படும். அதற்காக அரசாங்க அதிகாரிகளுக்கு கடன் வழங்கப்படும்.
- உருக்கு, ஓடுகள், மாபிள் ஓடுகள் மற்றும் மலசலகூட உபகரணங்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படும்.
- கட்டட மற்றும் நிர்மாண பயிலுநர்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும்.
- நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்த இறக்குமதி செய்யப்படும் உபகரணங்களுக்கான வரி விலக்களிக்கப்படும்.
- நிர்மாணப்பணிகளுக்காக வருகின்ற வெளிநாட்டு நிறுவனங்கள் உள்ளூர் நிர்மாண நிறுவனங்களுடன் இணைந்து செயற்படவேண்டும்.
- வீடு, சொத்துகளுக்கான வரம்மை ஏற்படுத்துவதற்காக சட்டத்தில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் கொண்டு வரப்படும்.
- புதிய கிராம வீட்டுத்திட்ட முறைமை உருவாக்கப்படும். அதற்காக 4,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும். வீடொன்றுக்கு 03 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்படும்.
- சேரிகளில் வாழும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக, தனியார் துறையுடன் இணைந்து 15 இலட்சம் வீடுகள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- பயன்படுத்தப்படாத காணிகளானது வீடுகள் நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்படும்.
- காணிக்காக வங்கி உருவாக்கப்படும்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிகளை நிறுவுவதற்கு 25 மில்லியன் ரூபாய் நிதி.
- இறக்குமதி அபிவிருத்திக்காக விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டை பாதுகாப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படும்.
- எரிபொருள் சந்தை உருவாக்கப்படும்.
- புதிய இறக்குமதிப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கு முதலீட்டு ஊக்குவிப்புச் சபை நடவடிக்கை எடுக்கும்.
- வெளிநாட்டவர்களுக்கு குத்தகை அடிப்படையில் காணி வழங்கப்படும்போது, அறவிடப்படும் வரி விலக்களிக்கப்படும்.
- போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்புக்காக 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
- யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான முரண்பாடுகளை இல்லாமல் செய்வதற்கு 03 வருடங்களுக்கு 4,000 மில்லியன் ரூபாய் வழங்கப்படும்.
- ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக நிறுவனமொன்று உருவாக்கப்படும்.
- அரச நிறுவனங்கள் அனைத்தையும் 2018ஆம் ஆண்டு ஒரு வலயமைப்புக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீனவ மற்றும் விவசாய வலயத்தை உருவாக்குவதற்கு 2,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- தங்கம் இறக்குமதிக்கான 50 உரிமப்பத்திரங்களை அறிமுகப்படுத்துவேன்.
- மாணிக்கக்கற்கள் ஏல விற்பனை இலங்கைக்குள் இடம்பெறுவதற்கு யோசனை ஒன்றை முன்வைக்கின்றேன்.
- அலங்காரமீன் கைத்தொழிலில் இளைஞர்கள் ஈடுபடுவதற்கு உந்துவேன்.
- வவுனியாவில் புதிய பொருளாதார வலயம் உருவாக்கப்படும். கிராமிய விவசாயத்துக்கு உதவும் வகையில் சிறிய குளங்கள் மற்றும் ஏரிகள் புனரமைக்கப்படும். அதற்காக 2,000 ரூபாய் ஒதுக்கப்படும்.
- கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கிராம சேவகர் பிரிவு கொத்தணிக் கிராமமமாக செயல்படுத்தப்படும். இதில் பொதுவசதிகள் அபிவிருத்தி செய்யப்படும். ஒரு கிராமத்துக்கு 1,500 ரூபாய் ஒதுக்குமாறு யோசனை முன்வைக்கின்றேன்.
- பாக்கு சேகரிக்கும் வலயம் உருவாக்கப்படும். அந்த தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கு வணிக ரீதியில் பயிர் செய்வதற்காக அரசாங்கம் நிவாரணம் வழங்கும்.
- தேங்காய் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- தேயிலை தொழிற்சாலை மதீப்பீட்டைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சிலோன் ரீ என்ற பெயர் தொடர்ந்து இருப்பதற்கு அந்தப் பெயரை பொறிப்பது கட்டாயமாக்கப்படும்.
- உள்ளூர் கோழி இறைச்சி உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட புதிய சந்தைக்கு கோழிகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- மீனவர்களின் காப்புறுதிக்காக ஒரு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.
- உள்ளூர் பால் உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதற்கு 1,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும். 400 பக்கெட்டின் ஆகக் குறைந்த சில்லறை விலை 325 - 295 வரை குறைக்க நடவடிக்கை எடுப்பேன்
- உள்ளூர் பால் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு மற்றும் இறக்குமதியை குறைப்பதற்கு நான் மதிக்கின்றேன். எனினும், பால் விலை கூடியதுடன், யோக்கட் உள்ளிட்ட பொருட்களின் விலை குறைந்தன.
- பழவகை மற்றும் மரக்கறி கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு நிவாரணம் வழங்கப்படும். இவற்றுக்குத் தேவையான உபகரணங்களுக்கான இறக்குமதி வரி விலக்களிக்கப்படும்.
- நெல் விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணங்கள் வழங்கப்படும். பெரு மற்றும் சிறு விவசாயிகளை மட்டும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.
- விவசாயிகள் மற்றும் நுகர்வோர் கூடுதலான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும்.
- 2014ஆம் ஆண்டு அரிசி அறுவடை குறைந்திருந்தது. உரப் பாவனையினால் சிறுநீரக நோயாளர்களின எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக இன்னும் வாதப்பிரதிநிதிவாதங்கள் இடம்பெறுகின்றன.
- அரிசி ஏற்றுமதி வர்த்தகத்தை நோக்காகக்கொண்டு அரிசி உற்பத்தியாளர்களுக்கு உதவியளிக்கப்படும். அதற்காக வெளிநாட்டுச் சந்தையை அறிமுகப்படுத்துவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படும்.
- கீரி சம்பாவுக்கு 50 ரூபாய், சம்பா நெல்லுக்கு 40 ரூபாய், நாட்டரிசி நெல்லுக்கு 38 ரூபாய் ஆகக்குறைந்த விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனூடாக அரிசி ஒரு கிலோகிராம் 65 ரூபாய்க்கு நுகர்வுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.
- விவசாய அறுவடையின் போது, விலைக் குறைப்பைத் தடுப்பதற்கு உயர்ந்த தரத்திலான களஞ்சியசாலைகள்
- புத்துயிராக்கம் இல்லாத இடங்களை தனியார் பிரிவுகளுக்கு பெற்றுக்கொடுத்து, அதனூடாக அதனை மேம்படுத்துவதற்காக 1,000 மில்லின் ரூபாய் ஒதுக்கப்படுகின்றது.
- பல்பொருள் அங்காடிகளில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கு சிறிய இடத்தை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன்
- சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக்கர்கள் கடனை பெறும்போது

17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

இந்தியா

## இந்தியர்களுக்கு நீண்ட முத்தம் பொருத்தமற்றது

### திரைப்படத் தணிக்கைக்குழு

புதிய ஜேம்ஸ்பாண்ட் படமான ஸ்பெக்டரில் (Spectre) வரும் நீண்ட முத்தக் காட்சிகள் இந்தியாவில் உள்ளவர்களுக்கு பொருத்தமற்றவை என்று இந்தியாவின் திரைப்பட தணிக்கைக் குழு தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் வெளியின்று திரையிடப்படவுள்ள இந்தப் படத்தில் இரண்டு இடங்களில் சில காட்சிகளை மத்திய திரைப்பட தணிக்கைக் குழு நீக்கியுள்ளது.

இந்தத் திரைப்படத்துக்கு அளிக்கப்பட்டுள்ள யூஏ (UA) சான்றிதழின் விதிமுறைகளுக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தணிக்கைக் குழு தெரிவித்துள்ளது.

12 வயதுக்குட்பட்ட சிறார்கள் பெரியவர்களின் கண்காணிப்பில் பார்க்கக்கூடிய படங்களுக்கே இந்த யூஏ சான்றிதழ் அளிக்கப்படும்.

ஒரு சில செக்கண்டுகளே காட்சிகள் வெட்டப்பட்டுள்ளதாக இந்தப் படத்தை வெளியிடுகின்ற சோனி பிக்சர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ்

## குண்டுவெடிப்புச் சூத்திரதாரி கொல்லப்பட்டார்

### உத்தியோகபூர்வமாக பிரான்ஸ் அறிவிப்பு



பிரான்சின் பாரிஸ் நகர தாக்குதலில் மூளையாக செயல்பட்ட தீவிரவாதி அப்துல்ஹமீட் அபாவுட் கொல்லப் பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரிசில் அபாவுட் பதுங்கி இருப்பதாக கூறப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பை சுற்றி வளைத்து தீவிரவாத தடுப்பு காவல்துறையினரும், இராணுவ வீரர்களும் கடந்த புதன்கிழமை அதிரடி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலின்போது, அபாவுட் கொல்லப்பட்டாரா, கைது செய்யப்பட்டாரா என்பது பற்றி உறுதியான தகவல் வெளியாகமல் இருந்த நிலையில் அவர் கொல்லப்பட்டதாக அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகியுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் 129 உயிர்களை பலிவாங்கிய தொடர் தாக்குதலுக்கு மூளையாக இருந்து திட்டம் தீட்டியவர், சிரியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதக் குழுவிடம் பயிற்சி பெற்று பெல்ஜியம் நாட்டு காவல்துறையால் தேடப்படும் தீவிரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள அபாவுட் என்று அண்மையில் தெரியவந்தது.

சீனா

## கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த சீனா உறுதி





ஐஎஸ் முஸ்லிம் தீவிரவாத அமைப்பினரால் இந்தவாரம் கொல்லப்பட்ட சீனப் பிரசையின் கொலைக்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்க சீன அரசு தயாராகி வருகின்றது.

கடத்தப்பட்ட இந்த இருவரும் தீவிரவாதிகளின் மரணதண்டனைக்கு உள்ளாகி உயிரிழந்-துள்ளது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இதனையடுத்து தமது பிரசையின் கொலைக்காகக் கடும் சீற்றம் அடைந்துள்ள சீனா தமது நாட்டு பிரசை ஒருவர் கொலைக்கு பொறுப்பான ஐ எஸ் அமைப்பின் பயங்கரவாதிகளை சட்டத்தின் முன் நிறுத்த சூளுரைத்துள்ளது.

தமது பிரசைகள் எங்கே, எப்போது, எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பது பற்றி எவ்விதத் தகவல்களும் தமக்குக் கிடைக்கவில்லை என இரு நாடுகளும் அறிவித்துள்ளபோதும் அவர்கள் கொலை செய்யப்பட்டு -ள்ளனர் என்பதை மட்டும் உறுதிப்படுத்தக் கூடியதாக இருப்பதாக அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

சிரியா

## இரஸ்யாவுடன் இணைந்தது பிரான்ஸ்

## சிரியாவில ஐஎஸ் கட்டுப்பாட்டுப் பகுதி ரக்காவில் உக்கிர தாக்குதல்

சிரியாவில் இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) குழு வின் கோட்டையான ரக்கா நகரில் கடந்த மூன்று தினங்களால் ,டம்பெற்றுவரும் உக்கிர வான் தாக்குதல்களில் அந்த அமைப்பின் குறைந்தது 33 உறுப்பினர்கள் பலியாகி இருப்பதாக சிரியா தொடர்பில் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் குழு குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனை மையமாகக் கொண்டு இயங்கும் சிரிய மனித உரிமை கண்காணிப்புக் குழு வெளி யிட்டிருக்கும் தகவலில், பிரான்ஸ் மற்றும் ஏனைய நாடுகளின் போர் விமானங்கள் ஐ.எஸ். சோதனைச் சாவடிகள் மீது நடத்திய தாக்குதல்களி லேயே பெரும்பாலான போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

பாரிஸில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதல்களில் 129 பேர் கொல்லப்பட்ட சம்பவத் திற்கு பின்னர் அந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்ற ஐ.எஸ். குழுவை ,லக்கு வைத்து பிரான்ஸ் போர் விமானங்கள் தாக்குதல்களை அதிகரித்துள்ளன.

தமிழ்நாடு

## நேற்றுக் காலைவரை தமிழகத்தில் வெள்ளத்திற்குப் பலி 110

தமிழகத்தில் பெய்துவரும் கடும் மழையுடன் கூடிய வெள்ளப் பெருக்கு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை நேற்றுக் காலைவரை 110ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த 28ஆம் திகதி வடகிழக்கு பருவமழை ஆரம்பித்த நிலையில், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய 4 மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின.

கடலூரில் மாத்திரம் 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக உத்தியோக பூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொடர்ந்து மீட்புப் பணிகளும், நிவாரண உதவிகளும் இடம்பெற்று வருகின்றன

## உச்ச சக்தியுடன் புதிய பக்டீரியா

இதுவரை கண்டுபிடித்து -ள்ள நோயெதிர்ப்பு மருந்துகள் எதற்கும் கட்டுப்படாத ஒரு புதிய வகை பாக்டீரியா கிருமியை சக்திவாய்ந்த மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்து- ள்ளனர்.


விலங்குகளிடத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கொலிஸ்டின் என்ற உச்ச நோய் எதிர்ப்பு மருந்துக்குக்கூட கொஞ்சமும் கட்டுப்படாத தன்மை இந்த புதிய

இந்தக் கிருமி சீனாவில் மனிதர்களிடத்திலும் பண்ணை கிருமியிடத்தில் காணப்படுகிறது.

சிரியா

## சவூதி,கட்டார் ஐஎஸ்சிற்கு ஆதரவு

### சிரிய சனாதிபதி பஷீர் குற்றச்சாட்டு



சிரியாவில் செயல்படும் ஐ எஸ் தீவிரவாத அமைப்புக்கு துருக்கி, சவுதி அரேபியா மற்றும் கட்டார் உள்ளிட்ட பல நாடுகள் ஆதரவு அளிப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷீர் அல் அஸத் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இஸ்லாமிய அரசு என்று தம்மைக் கூறிக் கொள்ளும் தீவிரவாதிகள் வளர்வதற்கு சிரியா ஒரு களமாக உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலியத் தொலைக்காட்சி ஒன்றில் உரையாற்றும் போதே சிரிய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே சிரியாவில் சனாதிபதி ஆதரவுப் படைப்பிரிவும் கடும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாகச் சுயாதீன சர்வதேச ஊடகங்களின் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐஎஸ் பயங்கரவாத அமைப்பிற்கு எதிரான தாக்குதல்கள் என்ற போர்வையில் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் தாக்குதல்கள் கண்மூடித்தனமாக நிகழ்வதாகத் தெரிவித்துள்ள அச்செய்திகள் சர்வதேசப் படைகளின் வான் தாக்கு-தலிலும் மக்கள் சாவடைவதாகத் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா

## தனக்குத்தானே தண்டம்

### அமெ.அதிகாரி டேவிட்



அமெரிக்காவை சேர்ந்த் டேவிட் கிளார்க் என்ற காவற்துறை அதிகாரி தனக்குத்தானே தண்டனை அளித்துள்ளார்.

இவரின் வாகனத்தை இவரின் சாரதி அங்கவீனர்களுக்காக ஒதுக்கப் பட்டிருந்த பகுதியில் நிறுத்தி வைத்துள்ளார். தவறு நடந்துள்ளதை உணர்ந்த அந்த காவல்துறை அதிகாரி தனக்குத்தானே 30 டொலர் தண்டப்பத்திரமொன்றை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU



# தாயகச் செய்திகள்

## 64 கிலோமீற்றரில் கண்ணிவெடிகள்




வடக்கில் இன்னும் 64 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணி -வெடிகள் அகற்றப்படாமல் இருப்பதாக நேற்று கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப் -பட்டுள்ளது.

கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே கண்ணிவெடி வயல்கள் இன்னமும் மீதம் இருப்பதாகவும் அவற்றை பரிசீலிக்கும் நடவடிக்கை ஆரம்பித் துள்ளதாகவும் அங்கு கூறப்பட்டுள்ளது.

## மக்களால் நையப்புடைக்கப்பட்ட காதல் மன்னன் மூதூரைச் சேர்ந்தவர்

திருமணம் செய்துகொள்வதாக ஆசை வார்த்தை கூறி, பெண்களை காதலித்து ஏமாற்றி அவர்களிடமிருந்து நகைகளை கொள்ளையடித்து வந்த நபரை, பிரதேச மக்கள் நையப்புடைத்து காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

தோப்பூர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த அப்துல் கலீம் (வயது 36) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே, இவ்வாறு நையப்புடைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு அலைபேசியின் மூலம் அழைப்பை ஏற்படுத்திய நபர், ஆசை வார்த்தைகள் கூறி அவரை காதலிப்பதாக கூறியுள்ளார்.

பின்னர், அப்பெண்ணை வவுனியாவுக்கு அழைத்துச் சென்று, அவரிடமிருந்த நகைகளை வாங்கிக்கொண்டு அதற்கு பதிலாக போலி நகைகளை கொடுத்துள்ளார்.

நகைகளை திருப்பித்தருமாறு கேட்ட போது, அந்த நகைகளில் தாலி செய்து திருமணம் செய்து கொள்வதாக கூறிவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

நடந்தவற்றை குடும்பத்தாருக்கு தெரியப்படுத்தி பெண், அவருடைய நெருங்கிய நண்பியொருவருக்கும் இது குறித்து கூறியுள்ளார். தப்பிச் சென்றவனை எப்படியாவது பிடிக்கவேண்டும் என்று எண்ணிய பாதிக்கப்பட்ட பெண்ணின் நண்பி, அதேநபருக்கு அலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி, ஆசை வார்த்தை கூறி, அந்த நபரை தான் காதலிப்பதாக கூறியது மாத்திரமல்லாது, அவரை கொக்குவிலுக்கு வருமாறும் அழைத்துள்ளார்.

எதிர்பார்த்தைப்போன்று, சந்தேக நபர் கொக்குவில் பகுதிக்கு வந்தபின்னர், அங்கு தயாராக இருந்த இளைஞர் குழுவினர், சந்தேக நபரை பிடித்து மின்கம்பத்தில் கட்டி நையப்புடைத் -துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற காவல்துறை சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர், இவ்வாறு பல பெண்களை ஏமாற்றி வந்துள்ளமை விசாரணைகளின் போது தெரிய -வந்துள்ளதாக தெரிவித்த காவல் -துறையினர்இந்நபரால் பாதிக்கப்பட்ட பெண்கள், யாழ்ப்பாணம் காவல் நிலைய தொலைபேசி இலக்கமான 021 222 2222 என்ற இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாட்டை தெரிவிக்க முடியும் என்றும் அறிவித்துள்ளனர்.

## தாடி வளர்த்திருந்ததால் கைது யாழ்ப்பாணத்தில் சம்பவம்

வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரின் மகன் காவல்துறையால் கைது செய்யபட்டு தாக்குதலுக்கு உள்ளாக்கபட்டுள்ளதாக தெரிவிக்கப் -பட்டுள்ளது.

ஈபிடிபி கட்சியின் வடமாகாண சபை எதிக்கட்சித் தலைவர் தவராசாவின் மகனும் அவரது நண்பரும் இவ்வாறு எட்டு மணிநேரத் தடையையும் தாக்குதலையும் காவல்துறையிடம் இருந்து அனுபவித்ததாக எதிர்கட்சித் தலைவர் ஊடகங்களுக்குத் தெரிவித்து -ள்ளார்.

ஏன் அவர்களைக் கைது செய்துள்ளீர்கள் என வினவிய போது இளைஞர்கள் இருவரும் தாடி வளர்த்திருந்ததால் சந்தேகத்தின் அடிப்படையில் கைதாகினர் எனக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயத்தினைக் காவல்துறையின் உயரதிகாரிகளுக்கு முறைப்பாடாக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருப்பதாக தவராசா தெரிவித்துள்ளார்.

## சட்டச்சிக்கலை எதிர்கொள்ளும் அருட்தந்தை இம்மானுவேல்



உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் இலங்கைக்கு வருவதற்கு சட்டரீதியான சிக்கல் காணப்படுவதால் அவருக்கு சட்டரீதியான நிவாரணமொன்றைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தடைசெய்யப்பட்ட உலகத் தமிழர் பேரவை அமைப்பின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் இலங்கைக்கு வரமுயற்சிப்பதாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறியிருந்தார்.

பிரிக்கப்படாத ஒன்றிணைந்த இலங்கைக்கு ஆதரவு வழங்கும் எந்தவொரு நபரும் இலங்கைக்கு வந்துசெல்ல முடியும். அருட்தந்தை இமானுவேல் இலங்கை வருவதற்கு சட்டச்சிக்கல் உள்ளது. எனவே அவருக்கு சட்டரீதியான நிவாரணமொன்றைப் பெற்றுக்கொடுப்பது பற்றி அரசு கவனம் செலுத்தியுள்ளது.

## வடக்கிற்கும் வருவார் சமந்தா பவார்



ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க பிரதிநிதி சமந்தா பவர், இன்று இலங்கை வரவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு இதனை தெரிவித்துள்ளது.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே அவர் இலங்கை வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று இலங்கை வரும் சமந்தா பவர் எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் இலங்கையில் தங்கிருப்பார்.

இதன்போது அவர் பல்வேறு சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கிலும் பல நிகழ்வுகளில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

## எமது விடுதலைக்காகப் பதவி இழந்தேனும் போராடுவோம் எனச் சொன்ன த.தே.கூவினர் எங்கே?

### பிணையில் வெளிவந்த தமிழ் அரசியல் கைதிகள் கேள்வி




விடுதலையின்றி நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் ஆதங்கங்களை வெளிப்படுத்தும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று இன்றய தினம் யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்றது. இரண்டு தினங்களுக்கு முன்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் இருவர் இம்மாநாட்டில் கலந்து கொண்டு விடுவிக்கப்படாது சிறைகளில் வாடும் கைதிகளது ஆதங்கங்கள் எதிர்பார்ப் -புக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

வீரசிங்கம் சுலக்சன் மற்றும் பொன்னுத்துரை கணேசன் ஆகிய இருவருமே இணைந்து மேற்படி ஊடக மாநாட்டை நடாத்தியிருந்தனர்.

சாவின் விளிம்பில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வேண்டுகோள்

பயங்கரவாதத் தடைச்சட்த்தின் கீழ் பல பலவருடங்கள் தடுத்து வைக்கப்பட்டு இரு தினங்களுக்கு முன் பிணையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் என்ற வகையில் தற்போது சிறையில் சாகும் வரையான உண்ணாவிரதப் போராடட்த்தில் ஈடுபட்டிருக்கும் எமது சக தமிழ் அரசியல் கைதிகளின் மன ஆதங்கங்களை ஒட்டுமொத்த தமிழ சமூகத்திற்கும் சர்வதேசத்திற்கும் தெளிவு படுத்த வேண்டிய கட்டாய கடப்பாடு எமக்குண்டு.

அந்த வகையில் 67 வருடகால இலங்கை அரசியலில் ஆட்சிப் பீடம் ஏறும் அனைத்து சிங்கள பேரினவாத அரசாங்கங்களும் தமிழ் இனத்தை போலி வாக்குறுதிகள் மூலம் ஏமாற்றும் அரசியல் தந்திரங்களை மட்டுமே கையாள்கின்றனர்.

இருந்தாலும் சனவரி 8ம் திகதி இலங்கையில் நல்லாட்சி ஒன்று ஏற்படும் அதற்கு சகல தமிழ் மக்களும் ஆதரவு வழங்க முன்வர வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அழைப்பு விடுத்திருந்தனர். அதன் பெயரிலேயே மைத்திரிபால சிறீசேன தமிழ் மக்களின் வாக்குகளலால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஆனால் தமிழர்களிற்கு நல்லாட்சி என்ற கூறப்படும் இவ்வாட்சி மூலம் என்ன நன்மை கிட்டியது? தமக்குரிய விடுதலையை எதிர்பார்த்து எதிர்பார்த்து பல வருடங்களின் பின்பு இன்று மன விரக்தியில் சாவின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலேயே இவ் நல்லாட்சி அரசாங்கம் ஒரு நியாயமான தீர்வினைப் பெற்றுத் தரமுன்வராதபோதுஇ தமிழரின் இனப்பிரச்சினையில் எவ்வாறு தமிழ் மக்கள் கௌரவமாக வாழக்கூடிய தீர்வொன்றை இவ் அரசாங்கத்திடம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும். இலங்கையில் ஜனவரி 8 நடந்தது. ஆட்சி மாற்றம் ஒன்று அல்ல மாறாக வெறும் ஆள்மாற்றம் மட்டுமே என்பது இப்போது புலனாகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயாவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களும் முதலில் நாம் உண்ணா விரதம் இருந்த சமயத்தில் சிறைச்சாலைக்கு வந்து ஜனாதிபதி தமிழ் அரசியல் கைதி[illegible] திகதிக்குள் கைதிகள் தொடர்பிலான அனைத்துப் பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படும் ஜனாதிபதி தன்னிடம் உறுதியளித் -துள்ளதாக கைதிகளிடம் நேரில் தெரிவித்து நாங்கள் அவரை முழுமையாக நம்புகின்றோம்.

நீங்களும் நம்புங்கள் என்று கூறி உண்ணாவிரத்தினை முடித்து வைத்தனர். இவ்வாக்குறுதி சில வேளை ஜனாதிபதியால் நிறைவேற்றப்படாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பேரும் பாராளுமன்றத் பதவிகளைத் துறந்து வீதியில் இறங்கி அரசாங்கத்திற்கு எதிராக நாமே போராடுவோம். நீங்கள் மீண்டும் உண்ணா விரதமிருக்கத் தேவையில்லை என்று கூறியவர்கள் நவம்பர் 7ற்குப் பின் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது தலைமறைவாகிவிட்டனர்.

அரசியல் கைதிகளாகிய நமக்கு எமது விவாகரத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையினை நம்ப வைத்துக் கழுத்தறுத்த இந்த □நல்லாட்சி□ அரசாங்கத்துடன் இன்னும் சுமூகமான உறவினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மேற்கொள்வதன் பின்புலம் என்ன? பேரம் பேசும் சக்திகியினை எமக்களியுங்கள், பேரம் பேசும் சக்திகியினை எமக்களியுங்கள் என்று கூறி தமிழ் மக்களிடம் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கை அரசிடம் பேசிய பேரங்கள் என்ன? நமது மாண்பு மிகு வடக்கு முதலமைச்சர் அவர்கள் அண்மைக்காலத்தில் ஊடகங்கள் மூலம் தெரிவித்திருந்த கருத்து சில தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பணப்பெட்டிகளை தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் பெற்றிருந்தனர் என்பதை ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டிருந்தார். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் பேசிய பேரமா என தமிழ் மக்கள் அனைவரையும் எண்ண வைக்கின்றது.

இந்த தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அறிக்கைகளை விட முழுமையான செயற்பாடுகளையே தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் எதிர்பாரத்தோம். தற்போது தண்ணீர் மற்றும் மருத்துவ சிகிச்சை போன்ற அனைத்தையும் துறந்து தமது விடுதலையை வலியுறுத்தி வாழ்வா சாவா என்ற உச்சக் கட்ட போராட்டத்திற்கு கைதிகள் கையறு நிலையில் தள்ளப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை அது நீக்கப்படவில்லை. அனால் நாம் உண்ணாவிரதம் ஆரம்பித்த பின்னர் கூட தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் அச் சட்டம் நீக்கப்பட இலங்கை அரசுக்கு ஐ.நா அழுத்தக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நாவை நோக்கி முன்வைக்கவில்லை.

இந்நிலையில் ஒரு அரசியல் கைதியேனும் உயிரிழக்க நேரிட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் நிபந்தனையின்றி ஆதரவு வழங்கி இந்த அரசை ஆட்சிப்பீடமேற்றி தொடர்ந்தும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே ஏற்க வேண்டும்.

இந்த ஊடக சந்திப்பால் எத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டாலும் நாம் அதனை முழு அளவில் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். மீண்டும் எம்மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கைது செய்யப்படலாம், எங்கள் பிணை இரத்தாகலாம் மீண்டும் சிறையிலடைக்கவும்படலாம் ஆனாலும் சிறையில் சாவோடு போராடும் எமது சக அரசியல் கைதிகள் அனைவரதும் விடுதலைக்காக நாம் எதனையும் எதிர்கொள்வோம் என்று தெரிவித்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## கலையழகி

அமைதியான சுபாவம்
ஆடை அலங்காரம் முன்
சுமை தாங்கும் இடையாள்
சுழியோடும் விழியாள் !

கலை ஆடும்நடையாள்
கார்ஆமகக் குழலாள்: ஆலை
இலையொத்த உண்டி: சுருங்கி
இருக்கின்ற அழகி:

வாழைமடல் மேல் மேனி:
வண்ண மலர்வதனம் நானி
வருமழகைக் கண்டால்
காதல் கவிதைவருமெனக்கு!

பல்வரிசை மின்ன அவள்
புன்னகைத்தல் போது
பூக்க ளெல்லாம் கூட
பொலிவிழந்து பேசும்!

அழகென்றால் அழகு அவள்
அழகுக்கே அழகு: தமிழ்
அழகி பேரழகி எழிலரசி
என் கவிதைக்கு கரு அவளே!

கவிக்குயிலான் - சேனையூரான்

## சூரிய காந்தி

மழைக் காலம் வந்துவிட்டால்
மனதிலோ பட்டாம்பூச்சி
மன்னவன் மடியிலோ
கிடந்திட ஓர் ஆசை.........

நித்தமும் காண்பவரை
மாரிகாலம் வந்துவிட்டால்
காண முடியாத ஏக்கம்
என்னுள்ளே எத்தனையோ நாட்களாய்....

தினமும் உன்னை காண்பதற்காய்
பனியில் குளிர்ந்து
மஞ்சள் பொடி பூசி என் இதழ்
விரிந்து காத்திருக்கின்றேன் உனக்காக...

என்னவரைக் கண்டவுடன்
எழுந்திடும் ஆசைகளோ ஏராளம்
நீ சுற்றித் திரியும் திசையெல்லாம்
நானும் உன்னை சுற்றி வருவேன்
எந்நாளும்......

உன் வருகையை எண்ணி எண்ணி
தவிக்கின்றது என் உள்ளம்
என்றாவது ஒரு நாள் திரும்பி பாரப்பாய்
என்னை - உன் மீது
ஒரு தலையாய் காதல் கொண்ட
என்னை ..............

வே. மேனுகா, வரோதய நகர்

## இனிய காலை

காலை விடிந்ததெனக்
கூவிய சேவலும்....
காரிருள் அகன்றிடக் கண்ட
காக்கையும் கா... கா.... என்றிட

சோலை இளம் கிளிகள் - அங்கே
சுகராகம் - தானிசைக்க
வாழை மடல் தாவியெங்கும்
மைனாக்கள் - மையல் கொள்ள...

ஆதவன் வருகை கண்டு
அலை கடல் மேலெழுந்து
கரை மேவி நுரை சிந்த
மணல் கீறும் நண்டுகளும் - ஆங்கே

காண்டா மணியொலிக்க
அல்ல... என்றொரு மணியொலி கேட்க
சொர்ப்பனம் கலைந்து - நித்திரை
விட்டெழுந்து... காலைக் கடன் முடித்து
வாயிலில் கோலமிட்டு - பின்

வெள்ளைக் - கலையுடுத்தி
தூக்கிய தோளில் - புத்தகப் பை....
நீர்ப் போத்தல் - கையெடுத்து
மெல்ல நடை பயின்று - சாலை ஓரம்

பள்ளிச் சிறார்கள் - அங்கே
புள்ளி மான் - போல
துள்ளி ஓடிக் - கல்விக் கூடம்
சென்றிடக் கண்ட - இக் காலை

மல்லிகைவானன்,



## விட்ட வழி

திருமலை சுந்தா

என்னண்ணை பெரியண்ணை
இந்த பக்கம் புதிசாய்
உம்மோடு பேசி சிரிச்சது
கணகாலம் ஆயிடிச்சு

உண்மையைச் சொல்லும்
உமது மகளும் என்ன
வியாதி வந்து உறவை
அறுத்து விட்டு போனவளாம்

வடிவாய் தானே வளர்த்தீர்
என்ன குறையும் விட்டீர்
பருவம் வந்த போது
பாராமல் விட்டதோ தானோ

காலமறிந்து விதைக்க
தவறியதன் காரணத்தை
சொல்லாமல் சொல்லியோ
தூரவும் போட்டா?

எனக்கும் இருக்குதுகள்
நானும் அலையிறன்தான்
விட்ட வழி எதுவோ
மெய் தானே அண்ணை

## தமிழ்த் தாய்

வீ.பிரவீனா
கும்புறுபிட்டி

எழுந்ததும் வந்தாள் எனை நோக்கி
அவள் கண்கள் இரண்டையும் அனலாக்கி
அவள் கொண்ட பார்வையோ அனலாக
நான் நின்ற நிலையோ சிலையாக
வந்தது சிற்பமா? அல்ல

என் உயிர் போனது அற்பமா மெல்ல!
கொண்ட நிலை தெரியாது
வந்த நிலை புரியாது

மெல்லமாய் வினவினேன் அவளை
செல்லமாய் குலவினாள் அவளோ!

நிந்தன் தமிழ் பற்று கண்டு வந்த
தங்க தமிழ் தாயே நானென்று!

## இராஜராஜ சதுர்வேதி மங்கலம் (கந்தளாய்)

### இலக்கிய பார்வை



**உலகின்** ஒவ்வொரு நிலப்பரப்பின் வரலாறும் அங்கு வலிமையுடன் நிலைபெறும் மக்கள் கூட்டத்தினரால் எழுதப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பழமையில் வலிமையுடன் இருந்த மக்கள் கூட்டம் காலப்போக்கில் வலிமை குன்றிப்போவதும், சிலவேளைகளில் முற்றாக மறைந்து போவதும் உண்டு. அதுபோலவே புதிதாகக் குடியேறிய மக்கள் கூட்டம் வலிமை பெற்று நிலைபெறுவதோடு புதிய ஒழுங்குகளை அங்கு உருவாக்கி விடுவதும் உண்டு. இந்த மாற்றங்களை வரலாற்றுப்பக்கங்கள் நெடுகிலும் நாம் காணக்கூடியதாய் இருக்கும். இலங்கையில் உள்ள திருகோணமலை மாவட்டத்தில் இன்றைய நிலையில் மிகச்சிறிய அளவில் தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசம் கந்தளாய். இப்பிரதேசம் இன்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சுயாட்சியுடன் கூடிய நிர்வாகப் பலமுள்ள பாரிய பிராமணக் குடியிருப்பாக இருந்ததை மீட்டுப்பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கந்தளாயில் இருந்த பிராமணக் குடியிருப்பு சோழப்பேரரசின் ஆட்சியின் கீழ் வந்தபோது "ஸ்ரீ ராஜராஜ சதுர்வேதி மங்கலம்" என அழைக்கப்பட்டதை கல்வெட்டு ஆதாரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இந்தக் குடியிருப்பின் அடிப்படை அம்சங்களையும், அது சிறப்புற்றிருந்த காலத்தில் கொண்டிருந்த செல்வாக்கினையும் புரிந்து கொள்ள கீழ்வருவனவற்றை சுருக்கமாக ஆராய்வது அவசியமாகும்.

- ❖ ஈழத்தில் பிராமணர்கள்
- ❖ சோழப்பேரரசில் பிராமணர்கள்
- ❖ இராஜராஜ சதுர்வேதி மங்கலம்

**ஈழத்தில் பிராமணர்கள்**

பண்டைய இந்திய சமூகத்தில் நிலவிய நான்கு வர்ண (சமூக) முறையில் ஒன்றாக பிராமணர்கள் கருதப்படுகின்றார்கள். இவர்கள் வேதங்களை முறையாகப் பயின்று இறைவழிபாடு நடத்துவதை கடமையாகக் கொண்டவர்கள். வேதகாலத்தில் உருவாகிய இவ்வர்ணப்பிரிவுகள் ஒருவருடைய குணம், நடத்தை, பண்பு என[illegible] பின் வந்த காலங்களில் இச்சமூகப் பிரிவுகள் இறுக்கமான கட்டமைப்புகளோடு, மரபுவழியாக அடையப்பெறும் சாதியாக உருமாற்றம் பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பிராமணர்கள் அதிகாரத்துடன் கூடிய சமூக, அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாக இருந்து வந்திருக்கின்றார்கள். இதற்கு அவர்கள் சோதிடம், வானிலை, மதச்சடங்குகள், வழிபாட்டு முறைகள் என்பனவற்றில் கொண்டிருந்த தேர்ச்சி காரணமாக இருந்தது. இதனால் பிராமணர்கள் அரச ஆலோசகர்களாகவும், போரியல் வல்லுனர்களாகவும், ஆளுமை மிக்க நடுநிலை வகிப்பாளர்களாகவும் வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் செயல்பட்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் பிராமணர்கள் பற்றிய வரலாற்றுப்பதிவுகள் இருவழிகளில் நமக்குக் கிடைக்கின்றது. ஒன்று இலக்கியவழி வந்த வரலாற்றுத் தொகுப்பு நூலான மகாவம்சம்.

தொடரும்.. .. ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரனின் நகர்வு வெற்றி பெறுமா??

நிலாந்தன்

அரசியல் கைதிகளுக்கு என்று ஓர் அமைப்பு எதுவும் கிடையாது. கைதிகள் தாமாகப் போராடத் தொடங்கும் போது அதை அரசியல்வாதிகள் தத்தெடுப்பதே வழமை. இம்முறை வடமாகாண முதலமைச்சர் இது விடயத்தில் கூடுதலான அக்கறையைக் காட்டுவதாகத் தெரிகிறது. கைதிகளும் அவரை ஒப்பீட்டளவில் அதிகளவில் நம்புவது போலத் தெரிகிறது.

கைதிகளுக்கென்று ஓர் அமைப்பு எதுவும் கிடையாது என்று அவரும் கூறியிருக்கிறார். அரசியல் கைதிகளுக்கென்று ஏன் ஓர் அமைப்பு உருவாக்கப்படவில்லை? முன்பு அரசியல் கைதியாக இருந்து விடுவிக்கப்பட்ட ஓர் அரசியல் செயற்பாட்டாளர் சொன்னார் "இப்போதுள்ள அரசியல் கைதிகளில் அநேகமானவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்டவர்களே.

தேசத்துரோகம் அல்லது தேசிய பாதுகாப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களே. குறிப்பாக புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது அந்த இயக்கத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் உதவியவர்களே. எனவே 2009 மேக்கு முன் கைதிகளுக்கு என்று அமைப்பு எதையும் உருவாக்கினால் அந்த அமைப்பையும் புலிகளோடு சம்மந்தப்படுத்தி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அதன் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய ஓர் அரசியல் இராணுவச் சூழலே நிலவியது. இது காரணமாக யுத்த காலங்களில் அரசியல் கைதிகளுக்கு என்று ஓர் அமைப்பை உருவாக்க அச்சப்படும் ஒரு சூழலே நிலவியது" என்று.

ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் இது விடயத்தில் ஏன் அமைப்பு ரீதியாகச் சிந்திக்க முடியவில்லை? ஆனால் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பை வழங்கத் தயாரற்றிருக்கும் அரசாங்கமோ எல்லாவற்றையும் அமைப்பு ரீதியாகவே சிந்திக்கின்றது செயற்படுத்துகின்றது. அரசாங்கம் அவர்களை அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுகிறது. அவர்கள் சட்டப்படி குற்றம் சாட்டப்பட்டவர்கள் அல்லது குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் என்ற வகைக்குள்தான் அடங்குவர் என்றும் கூறுகிறது.

அதாவது அரசாங்கம் அரசியல் கைதிகளின் அரசியலை நீக்கப்பார்க்கிறது. அவர்களுடைய அரசியலை அது குற்றம் என்று கூறுகிறது. எந்த அரசியலுக்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்களோ அந்த அரசியலை அது குற்றம் என்று கூறுகிறது. ஏனெனில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அந்த அரசியலை பயங்கரவாதம் என்று அழைக்கின்றது. அதாவது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாத தடைச்சட்டம் பயங்கரவாதமாக ஒரு குற்றமாகப் பார்க்கிறது.

**பல ஆண்டுகளாக குடும்பத்தைப் பிரிந்து தவிக்கும் கைதிகளைப் பொறுத்தவரை புனர்வாழ்வோ பிணையோ அல்லது வேறு எதுவாயினும் சிறையை விட்டு வெளியே வந்தால் சரி என்ற தவிப்பே மேலோங்கிக் காணப்படுகின்றது.**

எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்திற்கூடாக இப்பிரச்சினையை நோக்கின் அது ஒரு குற்றமாகவே பார்க்கப்படும். இதை மறுவளமாகச் சொன்னால் அரசியல் கைதிகளின் பிரச்சினையை ஒரு சட்ட விவகாரமாக அணுகுவது என்பது பயங்கரவாத தடைச்சட்டத்திற்கூடாக அணுகுவதுதான்.

சிரேஸ்ட சட்டத்தரணியான வி.புவிதரன் இது பற்றிக் கருத்துக் கூறும் போது "பயங்கரவாத தடைச்சட்டமானது தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை குற்றவாளிகளாகக் காண்கின்றது" என்று சொன்னார். எனவே கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டம் என்பது அவர்கள் கைது செய்யப்படக் காரணமாக இருந்த ஓர் அரசியல் போராட்டத்தின் தவிர்க்கப்படவியலாத ஒரு பகுதிதான். இதை நடைமுறை வார்த்தைகளில் கூறின் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டம் எனப்படுவது பயங்கரவாத தடைச்-சட்டத்திற்கு எதிரான ஒரு போராட்டம்தான்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் இது ஒரு அரசியல் விவகாரம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். கைதிகளும் அவர் மூலமாக தமக்கு நல்லது நடக்கும் என்று நம்புவதாகத் தெரிகிறது. அவர் ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியாக இருப்பதும் வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாகவும் வெளிப்படையாகவும் அபிப்பிராயங்களைத் தெரிவித்து வருவதும் கைதிகளுக்கு அவர் மீதான நம்பிக்கைகளை அதிகப்படுத்தியிருக்கலாம்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரன் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இச்சிறிய தீவில் நிதீபரிபாலன கட்டமைப்பில் பொறுப்பான பதவிகளை வகித்திருக்கிறார். குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தைத் தன்னுள் கொண்டிருக்கும் நீதி பரிபாலன கட்டமைப்புக்குள் ஒரு நீதியரசராகவும் இருந்திருக்கிறார். ஒரு நீதிபதியாக இருந்த காலகட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர் தீர்ப்புக்களும் வழங்கியிருக்கிறார். இப்பொழுது தான் வழங்கிய தீர்ப்புக்கள் உட்பட இலங்கைத்தீவின் நீதிபரிபாலன கட்டமைப்புத் தொடர்பாக மறுவாசிப்புச் செய்யவேண்டிய ஓர் அரசியல் தலைமைப் பொறுப்பை அவர் வகித்து வருகின்றார்.

ஒரு நீதியரசராக இருந்த காலகட்டத்தில் எந்த ஒரு அரசியல் விவகாரத்தை சட்டவிவகாரமாக அவர் பார்க்கவேண்டியிருந்ததோ அதையே இப்பொழுது அதன் ஆமான பொருளில் ஓர் அரசியல் விவகாரமாக அணுக வேண்டியிருக்கிறது. முன்பு நீதியரசராக இருந்தவரையிலும் அவர் அந்த நீதிபரிபாலன கட்டமைப்புக்கு உட்பட்டவராகக் காணப்பட்டார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக தனக்கு வாக்களித்த மக்களின் பயம், காயம், துக்கம் என்பவற்றுக்கூடாக எல்லாவற்றையும் பார்க்கவேண்டியிருக்கிறது.

தனிய சட்டக் கண்கொண்டு எதையும் பார்க்க முடியாத ஒரு நிலை. எனவே கடந்த இரண்டாண்டுகால பட்டறிவின் பிரகாரமும் கற்றுக் கொண்டவைகளின் பிரகாரமும் அவர் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்தும் இலங்கைத்தீவின் நீதி பரிபாலன கட்டமைப்புக் குறித்தும் மறுவாசிப்புச் செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு கோட்பாட்டுத் தளத்தில் மறுவாசிப்புச் செய்யப்படும்போதே இனப்படுகொலைக்கு எதிரான தீர்மானம், கைதிகளின் விவகாரம், மகாணசபைக்குரிய அதிகாரங்கள் உள்ளடங்கலாக கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் வெளிப்படையாகப் பேசிவரும் அரசியலும் அதன் கோட்பாட்டு முழுமையைப் பெறும்.

அண்மையில் வியட்னாமியத் தூதுவரைச் சந்தித்த போது தான் ஒரு நீதியரசர்தான் அரசியல்வாதி அல்ல என்றும் அவர் கூறியிருந்தார். பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு நிகரான சட்டங்கள் ஏற்கனவே லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்ததுண்டு. இவற்றில் பெரும்பாலானவை கெடுபிடிப்போர் காலகட்டத்திற்கு உரியவை. மேலும் இந்தியாவிலும், இவை போன்ற சட்டங்கள் உண்டு. ஐரோப்பிய நாடுகளிலும் உண்டு.

எது பயங்கரவாதம் என்பதைக் குறித்த முடிவுறாத விவாதத்தின் பின்னணியில் அனைத்துலக அரங்கில் இதுபோன்ற சட்டங்கள் பல உண்டு. ஆனால் ஒரு கண்டிப்பான நீதிபதியாக இருந்த விக்கினேஸ்வரன் அரசியலுக்கு வந்த பின் தனது மக்களுக்குரிய நீதியை விட்டுக் கொடுக்காத கண்டிப்பான தலைவராகவும் பார்க்கப்படுகிறார். எனவே அவர் முன்பு நீதியரசராக இருந்த ஒரு நீதி பரிபாலன கட்டமைப்பையும் குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தை மறுவாசிப்புச் செய்யும் போதும் தனது மக்களின் நோக்கு நிலையில் இருந்து விமர்சிக்கும் போதும் உலகம் அதை உற்றுக் கேட்கும். அதற்கு ஒரு முக்கியத்துவமும், கவனிப்பும் இருக்கும்.

இலங்கைத்தீவின் நவீன நீதிபரிபாலன வரலாற்றில் அவருடைய மறுவாசிப்பு தவிர்க்கப்படவியலாத ஓர் அத்தியாயமாகத் திகழும். பயங்கரவாத தடைச்சட்டத்தைப் போன்ற சட்டங்களைக் கொண்டிருக்கும் உலகின் ஏனைய நாடுகளும் அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். இது விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும், சட்டப்புலமையாளர்களும், சட்ட நிபுணர்களும், சட்டச் செயற்பாட்டாளர்களும், சட்டவாளர்களும், விக்கினேஸ்வரனை பலப்படுத்த வேண்டிய ஒரு கால கட்டம் இது.

அரசுத் தலைவர் மைத்திரிபாலவை கடந்த கிழமை வடமாகாணசபையினர் சந்தித்த போது கைதிகளின் விவகாரமும் பேசப்பட்டுள்ளது. இது விடயத்தில் விக்கினேஸ்வரன் பலமடைவதை அரசாங்கம் அனுமதிக்குமா? அவருடைய கோரிக்கைகளை ஏற்று கைதிகளுக்கு பொது மன்னிப்பை வழங்கினால் அது விக்கினேஸ்வரனை பலப்படுத்திவிடும். எனவே இது விடயத்தில் பாராட்டுக்கள் விக்கினேஸ்வரனுக்குப் போய்ச் சேர்வதை அரசாங்கம் விரும்புமா? ஏன் அதிகம் போவான்? அவருடைய கட்சிக்குள்ளேயே ஒரு தொகுதியினர் அதை விரும்புவார்களா?

**எதிர்காலத்தில் உருவாக்கப்படக்கூடிய எந்தவொரு விசாரணைப் பொறிமுறையிலும் உள்நாட்டு நிதிக்கட்டமைப்பின் பங்களிப்பு எந்தளவிற்கு இருக்கவேண்டும் என்ற கேள்விக்கான விடையையும் தெரிவிக்கவேண்டும்...**

அச்சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த அரசுத் தலைவர் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் உரிய ஆவணங்களை வழங்குமாறு கோரியிருப்பதாக செய்திகள் வெளிவந்தன. கைதிகளின் பிரச்சினை இப்பொழுதுதான் மேலெழுந்திருக்கிறது என்பதல்ல. அது விக்கினேஸ்வரன் அரசியலுக்குள் வரமுன்னமே இருந்தது. அவர் நீதிபதியாக இருக்கும் பொழுதே இருந்தது. எனவே, அது ஒரு புதிய பிரச்சினை அல்ல. அதைப்பற்றி இனிமேல் தான் அரசுத்தலைவர் கற்கவேண்யிருக்கிறது என்பது எதைக் காட்டுகிறது?

மேற்படி சந்திப்பு நடந்த அதே நாளில் கைதிகளில் ஒரு தொகுதியினர் புனர்வாழ்வுக்குச் சம்மதித்துவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசியல் கைதிகளை புனர்வாழ்வுக்கு அனுப்புவது என்பது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். அது அவர்களை குற்றச் செயல்களில் இருந்து விடுதலை செய்ததாக அர்த்தமாகாது என்று சிரேஸ்ட சட்டத்தரனி வி.புவிதரன் கூறுகிறார்.

புனர்வாழ்வு என்ற நடைமுறையை அவர் கேள்விக்குள்ளாக்குகிறார். குடிப்பழக்கம், போதைப்பெருள் பழக்கம் போன்றவற்றால் இயல்பு வாழ்வு பிறழ்ந்த நபர்களுக்கே புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். தமது அரசியல் நம்பிக்கைகளுக்காகப் போராடியவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படுவதை எப்படி விளங்கிக் கொள்வது? சரணடையும் வரை அல்லது கைது செய்யப்படும்வரை அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையும் அவர்களுடைய நம்பிக்கைகளும் பிறழ்வானவை என்ற ஓர் எடுகோளின் அடிப்படையில்தான் புனர்வாழ்வு வழங்கப்படுகின்றது.

ஆயின் புனர்வாழவு மூலம் அவர்களுடைய அரசியல் நம்பிக்கைகளை மாற்ற முடியுமா? என்று புவிதரன் கேட்கிறார். அப்படிப் பார்த்தால் எதிரான அரசியல் நம்பிக்கைகளைக் கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் புனர்வாழ்வுக்குட்படுத்தலாமா? என்றும் அவர் கேட்டார். புனர்வாழ்வு என்ற கருதுகோளை விமர்சித்த அவர் யாரால் யாருக்குப் புனர்வாழ்வு? என்று கேள்வி எழுப்பினார். மேலும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட ஒருவர் மறுபடியும் கைது செய்யப்படமாட்டார் என்ற உத்தரவாதம் எதுவும் இல்லை என்பதை சட்டத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால் பல ஆண்டுகளாக குடும்பத்தைப் பிரிந்து தனிமையில் தவிக்கும் கைதிகளைப் பொறுத்தவரை புனர்வாழ்வோ பிணையோ அல்லது வேறு எதுவுமோ எதுவாயினும் சிறையை விட்டு வெளியே வந்தால் சரி என்ற தவிப்பே மேலோங்கிக் காணப்படுகின்றது. இதை ஒரு சட்ட விவகாரமாகப் பார்க்க வேண்டுமா அல்லது அரசியல் விவகாரமாகப் பார்க்கவேண்டுமா? என்ற கோட்பாட்டு விவாதங்கள் எல்லாவற்றுக்கும் அப்பால் கைதிகள் தமது குடும்பங்களோடு இணைவது என்பது அதிகம் கவனிப்புக்குரிய ஒரு மனிதாபினமான பிரச்சினையாகவும் காணப்படுகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் விளைவுகளில் இதுவும் ஒன்று என்று சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நீதிக்கான நீண்ட காத்திருப்பும் இழுபடும் விசாரணைகளும் கைதிகளின் உளவுரணைப் பாதிக்கின்றன. எல்லாவற்றையும் விட முக்கியமாக எந்த ஓர் அரசியலுக்காக அவர்கள் கைது செய்யப்பட்டார்களோ அந்த அரசியலானது அதாவது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. எனவே எந்த ஒரு நம்பிக்கையின் பிரகாரம் அவர்கள் காத்திருப்பார்கள்? இதுவும் அவர்களைத் தளரச் செய்வதாக இது விடயத்தில் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

இத்தகையதோர் பின்னணியில் அரசியல் கைதிகளின் விவகாரத்தில் விக்கினேஸ்வரனின் நகர்வுகள் வெற்றிபெறுமாக இருந்தால் அது கூட்டமைப்புக்குள்ளும் தமிழ் மக்கள் மத்தியிலும் அவரைப் பற்றிய படிமத்தை மேலும் மிளிரச்செய்யும். ஏற்கனவே கூட்டமைப்புக்குள் மேலெழுந்த இரண்டு முக்கிய அதிருப்தியாளர்களான வடமாகாண சபையைச் சேர்ந்த ஒரு பெண் உறுப்பினரையும் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரையும் கட்சித் தலைமையானது ஏதோ ஒரு விதத்தில் வேகம் தணியச் செய்துவிட்டது. ஆனால் விக்கினேஸ்வரனை அப்படிச் செய்ய முடியுமா? அவருடைய மூப்பும் அவருக்கு இருக்கும் அங்கீகாரமும் ஒப்பீட்டளவில் அவரைப் பாதுகாக்கக் கூடியன.

ஆனால் கூட்டமைப்புக்குள் காணப்படும் அதிருப்தியாளர்களுக்கு தலைமைதாங்க அவர் இன்றுவரையில் தயாராகக் காணப்படவில்லை.

லண்டனில் புலம்பெயர்ந்த தமிழர்களை ஒரு மண்டபத்தில் சந்தித்து அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஆற அமரப் பதில் சொன்னது போல தனக்கு வாக்களித்த மக்களையும் ஒரு வீரசிங்கம் மண்டபத்திலோ அல்லது வேறெந்த பொது இடத்திலோ அவர் சந்திக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் கருத்துருவாக்கிகளாகக் காணப்படும் புலமையாளர்களையும் செயற்பாட்டாளர்களையும், ஊடகவியலாளர்களையும், படைப்பாளிகளையும் அவர் அடிக்கடி சந்திக்க வேண்டும்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக அவர் எந்த ஒரு நீதிபரிபாலன கட்டமைப்பின் கீழ் உயர் பொறுப்பில் இருந்தாரோ அந்த நீதிபரிபாலன கட்டமைப்பின் சர்ச்சைக்குரிய சட்டங்களும் நடைமுறைகளும் தனக்கு வாக்களித்த மக்களின் கூட்டு உரிமைகளுக்கு எதிராகவே காணப்படுகின்றன என்பதை வெளிப்படையாகப் பேச வேண்டும். அப்படிப் பேசுவதிலிருந்தே அரசியல் கைதிகளுக்கான முழுமையான விடுதலைக்குரிய போராட்டம் தொடங்குகிறது.

அதுமட்டுமல்ல எதிர்காலத்தில் உருவாக்கப்படக்கூடிய எந்தவொரு விசாரணைப் பொறிமுறையிலும் உள்நாட்டு நீதிக்கட்டமைப்பின் பங்களிப்பு எந்தளவிற்கு இருக்க வேண்டும் என்ற கேள்விக்குரிய விடையும் அங்கிருந்துதான் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 80

# தலைமைத்துவம்

(வி. என். சந்திரகாந்தி)



உலகில் அனைவர் மத்தியிலும் அனைத்து நேரங்களிலும் நடைபெற்றுக் - கொண்டிருக்கும் ஒரு போட்டியென்றால் அது தலைமைத்துவத்திற்கான போட்டி என்றே கூறவேண்டும். மற்றொரு விதமாக கூறுவதென்றால் உலகம் தலைமைத்து-வத்தை மையமாக கொண்டே சுழன்று கொண்டிருக்கின்றது. வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்று கூறுவர். அது ஒரு பிள்ளை தன்னை ஒத்த சிறுவர்களுடன் விளையாடும் போது வெளிப்படுத்தும் தலைமைத்துவ பண்பை அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்-படுவதாகும். மிருகங்கள் மத்தியில் கூட தலைமைத்துவ பண்புகள் விருத்தி பெற்றுள்ளன. தாவர பட்சணிகள் அனைத்துமே தத்தமக்குள் ஒரு தலைமைத்துவத்தை ஏற்று கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. அனிமல் பிளனெட் (Animal Planet) தொலைக்காட்சி சேவையை பார்ப்பவர்கள் அம்மிருகங்களின் வழிநடாத்தல் திறனை பார்த்து வியந்திருப்பார்கள். இரையை வேட்டையாடி சீவிக்கும் மிருகங்களிடம் குடும்பங்களாக வாழும் தலைமைத்துவ பண்பு அதிகம் காணப்படுகின்றது. அதே நேரத்தில் திட்டமிட்டு ஒன்று சேர்ந்து. வேட்டை-யாடுதலில் கடைப்பிடிக்கப்படும் தந்திரம் வியக்கவைப்பதாகும். சிங்கம் காட்டு மிருகம் அனைத்திற்குமே ராஜா என்று கூறப்படுவதன் காரணம். அதன் தலைமைத்துவ பண்புகள் தான்!

இனி அடுத்தகட்டமாக தலைமைத்துவ பண்புகள் என்றால் அவை யாவை என்று பார்ப்போம். பிரதானமாக சிறந்த தலைவன் ஒருவனுக்கு ஐந்து அடிப்படை தகைமைகள் அத்தியாவசியமாகின்றன. அவையாவன. திட்டமிடல், செயற்படுத்தல், ஒன்றிணைத்தல், கட்டளையிடல், கட்டுப்படுத்தல் என்பனவாகும்.

திட்டமிடல் என்பது எதிர்காலத்தில் சம்பவிக்ககூடிய அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை முற்கூட்டியே கணித்து எய்தப்படக்கூடிய இலக்கை எப்படி வெற்றி கொள்ளலாம் என தீர்மானித்தலும் அதன் பிரகாரம் வழிமுறைகளை தெரிவு-செய்தலுமாகும். முகாமைத்துவத்தில் தந்திரம் உபாயம் என்ற சொற்கள் இப்போ அதிகம் பேசு பொருளாக உள்ளன. ஒரு இலக்கை அடைவதற்கான உபாயத்தை முற்கூட்டியே ஊகிக்க கூடிய ஒருவனே சிறந்த தலைவன் ஆகின்றான். திருவள்ளுவர் ஒரு தலைவன் கடைப்-பிடிக்கவேண்டிய உபாயங்களை தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலமறிதல், இடனறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் ஆகிய ஆறு அதிகாரங்கள் மூலம் எடுத்துரைக்கின்றார்.

ஒரு இலக்கை எய்த முடிவெடுக்க முன்னர் அது பற்றி எண்ணித்தீர்மானிக்க வேண்டும். தீர்மானித்து விட்டு பிறகு யோசிப்போம் என்பது தவறான வழிமுறையாகும். ஒரு செயலின் வலிமை தனது வலிமை , எதிரியின் வலிமை, இரு சாராருக்குமான துணையின் வலிமை, ஆகிய நான்கினையும் அளந்தறிந்த பின்பே செயலில் இறங்கவேண்டும். அதே போன்று இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்க வல்லான் என்பதை தீர்மானிக்க வல்லவனே சிறந்த தலைவன் ஆவான். செயற்படுத்தல் எனப்படுவது வகுக்கப்பட்ட இலக்கை நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளாகும். இந்நாட்களில் இதற்கு உறுதுணையாக கணிக்கப்படக்கூடியவை மனித வலுவும் இயந்திரவலுவும் ஆகும். தொண்டர்களாக தெரிவு செய்யப்படக்-கூடியவர்கள் தலைவன் மேல் அன்புடை-யவனாக தலைவனுக்கு வேண்டியதை



அறியும் அறிவும் கருமத்தை செய்கையில் கலங்காமையும் பேரவா இன்மையும் உடையவனாகவும் இருத்தல் அவசியம். அதே போன்று பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் குறைந்த நேரத்தில் அதிக பயனை விளைவிப்பனவாக இருத்தல் வேண்டும். ஒன்றிணைத்தல் என்பது தாபனத்தின் இலக்கை அடையக்கூடிய வகையில் மனித, இயந்திர வலுக்களை சரியான முறையில் நிர்வகித்தல் ஆகும். கட்டளையை மேற்கொள்ளல் என்பது. பொதுவாகவே தொண்டர்கள் சரியான முறையில் தாபனத்தின் இலக்கை தெரிந்து கொண்டோ புரிந்துகொண்டோ இருக்க மாட்டார்கள். ஒவ்வொரு சமயமும் அவர்கள் ஆற்ற வேண்டிய கருமங்கள் பற்றி நியாயப்படுத்தவும் இயலாது. அச்சமயங்-களில் அவர்கள் ஆற்ற வேண்டிய செயற்பாடுகளை கட்டளை வடிவத்தில் வழங்க வேண்டும்.

கட்டுப்படுத்தல் என்பது ஒரு தாபனத்தின் இலக்கை நோக்கிய செயற்பாடுகள் சரியான திசையில் செல்கின்றனவா என்பதை அவதானித்தலும் தவறும் சந்தர்ப்பங்களில் நெறிப்படுத்தலுமாகும்.

மேற்கூறிய ஐந்து தகைமைகளும் தலைமைத்துவத்திற்கான அடிப்படை தகைமைகளாகும். அதே சமயம் ஒரு தலைவனுக்கு தனிநபர் தகைமைகளும் அதிகம் வேண்டப்படுகின்றன. துணிச்சல் ஒரு பிரதானமான அம்சமாகும். நல்லொழுக்கம் உடைமை, அறத்தின் மேல் பற்று, பணிவு ஆகியவை மற்றவர்களை நன்கு கவரும். நீதி நியாயம், ஆகியவற்றின் வழி நடத்தல் வேண்டும். தாபனத்தின் இலக்கு பற்றி நல்ல தெளிவு இருத்தல் வேண்டும். உறுதியான திட்டத்துடன் துணிவுடன் மற்றவர்களை வழிநடத்தினால் தான் தாபனம் முன்னேற்ற பாதையில் நகர்ந்து கொண்டிருக்கும். தொண்டர்கள் தான் வேலை செய்ய அமர்த்தப்பட்டு-ள்ளார்களே நான் சுழல் நாற்காலியில் சுற்றிக்கொண்டிருந்தால் எல்லாமே நல்ல முறையில் நடைபெறும் என்று எதிர்பார்க்க கூடாது.

ஒவ்வொரு விடயத்தையும் அக்கறையுடன் நோக்க வேண்டும். மற்றவர்களை அன்புடன் அரவணைத்து வேலைவாங்க தெரிந்திருக்க வேண்டும். இனிய சுபாவமும் இன்சொல்லும் மற்றவர்களை கவரும். அப்படியான தலைவனின் கட்டளைக்காக தொண்டர்கள் எப்போதும் ஆயத்தமாக காத்திருப்பார்கள். தொண்டர்களின் தனிப்பட்ட பிரச்சனைகளில் பரிவும் புரிந்துகொள்ளும் மனப்பாங்கும் இருக்க வேண்டும். அவர்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கு சித்தமாக இருக்க வேண்டும்.

பொறுப்புக்கள் என்று வரும் போது அவற்றை தட்டிக்கழிக்க கூடாது. பிறர் மேல் தவறுகளை போடுதலும் ஆகாது. ஒரு தொண்டர் ஆற்றும் எந்த கருமமும் தலைமைத்துவத்தின் மேற்பார்வை-யிலேயே நடைபெறுமாதலால் எந்த தவறுக்குமே தலைமைத்துவமே பொறுப்பு வகிக்கவேண்டும். மேலும் கடினமான பொறுப்புகளை தொண்டர்கள் மீது சுமத்தாமல் தானே ஏற்று செய்தல் வேண்டும். இந்நாட்களில் அனைத்து முயற்சிகளும் நிறுவன மயப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கான தலைமை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியே மேலே ஆராயப்பட்டது. ஆனால் பலதுறைகள் சரியான தலைமைத்துவத்தினை எதிர்நோக்கி-யுள்ளன. முக்கியமாக அரசியலில் பெரும் போட்டாபோட்டி நிலைமை அவதானிக்கப்படக்கூடியதாக உள்ளது. இன்று நேற்று அல்ல அன்றுதொட்டே பல நாடுகள தலைமைத்துவத்திற்கான போட்டியில் ஈடுபட்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது. அதனால் தான் இருபெரும் உலக மகா யுத்தங்கள் நடந்து முடிந்துள்ளது. ஐம்பெரும் வல்லரசுகள் மற்றொரு உலக யுத்தத்திற்கு முகம் கொடுக்க கூடிய ஆயுத தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளன. இந்தியா, பாக்கிஸ்தான், கொரியா உள்ளிட்ட பல நாடுகள் அணு பரிசோதனைகளில் வெற்றி பெற்றுள்ளன. இந்நாடுகளில் எல்லாம் அரசியல் நடவடிக்கைகள் சீராக இருக்க வேண்டுமாயின் நல்ல தலைமைத்துவத்தின் வழிகாட்டல் அவசியத்தின் மேல் அவசியமாகும். அல்லாத பட்சத்தில் இலட்சக்கணக்கான உயர் அழிவுகளை உலகம் மீண்டும் எதிர்நோக்க வேண்டியதாகிவிடும்.

அடுத்து பட்டினிச்சாவு பல நாடுகளை ஆக்கிரமித்துள்ளது. விவசாயம் மருத்துவம் இரண்டு துறைகளுமே சரியான தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஈடுகொடுக்க கூடிய வகையில் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமாயின் புதிய திட்டங்கள் அமுலாக்கப்படவேண்டும். சோமாலியா உட்பட பல கறுப்பு இன மக்கள் வாழும் நாடுகள் உணவுப்பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ளன , சத்துணவு பற்றாக்குறை காரணமாக பல கறுப்பின மக்கள் நோய்வாய்பட்டு சாகும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்கு வேண்டிய சத்துணவு கிடைக்கும் வண்ணம். செயலாற்றுவதுடன் அத்தியாவசிய மருத்துவ உதவிகளையும் வழங்க கூடிய தலைமைத்துவம் உருவாக வேண்டும்.

உலக பொருளாதாரம் வீழ்சியடைந்துள்ளமை பல பிரச்சனைகளுக்கும் அடிப்படையாக உள்ளது. வங்கித்துறை சீரமைக்கப்பட வேண்டும் ஏழை மக்களும் பண உதவி பெற்று முயற்சிகளில் ஈடுபடக்கூடியதாக புதிய தலைமைத்துவம் உருவாக வேண்டும் வேறுபாடு இன்றி அனைத்து மனிதர்களுக்குமே அடிப்படை வசதிகளான் உணவு, உடை , இருப்பிடம் ஆகியன கிட்டவெண்டும். இவ்வுலகில் ஒரு சாரார் ஆடம்பரத்தின் உச்சியில் இருக்க மறுசாரார் ஏழ்மையில் துவழ்வதானது என்ன நியாயம்.?

குறிப்பு :-

மலைமுரசு நவ.14-20, 2015 வார இதழில் பிரசுரமான "வாழ்வியல் - "79" கட்டுரைக்கான தலைப்பு "மனவுமுறிவுகள்" என்றும் "மனவுறிகள்" என்றும் தவறாக இரண்டு இடத்தில் அச்சாகி உள்ளன. சரியான தலைப்பு "மனமுறிவுகள்" ஆகும். தவறுக்கு வருந்துகின்றோம்.

---

# "மீனுடன் வந்தது யார்??"




திருகோணமலையில் டொக்யாட் வீதியில் இடம்பெற்ற ஓர் சம்பவம்.......

குடும்பஸ்தரான அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர் வசிப்பது பெரிய விளாங்குளம் எனும் இடத்தில்....

கிறிஸ்தவரான அவர் கடவுள் பக்தியில் சிறந்து விளங்கினார். தான் தொடங்கும் அனைத்து வேலைகளுக்கு முன்பும் அவர் இயேசு பிரானை நினைவு கூறாமல் தொடங்கியதாக சரித்திரம் இல்லை. எவ்வளவு இறை பக்தி உள்ளதோ அவரிடம் அதே அளவுக்கு அவருக்கு பயமும் காணப்பட்டது. மயான வழியாக ஒருபோதும் மாலை ஆறு மணிக்குப் பின்னர் செல்லமாட்டார். ஆனால் அவரைச் சுற்றி இருக்கும் எவரும் இவ்விடயத்தை நம்ப மாட்டார்கள். ஏனெனில் தன்னை ஒரு பயந்துறந்தவராக வெளிக்காட்டிக் கொண்டார்.

அவர் வேலை செய்வது திருகோணமலை நகரப்பகுதி. வாரத்தில் ஒரு நாள் அவருக்கு இரவு நேர வேலை கிடைக்கும். வேலை முடிந்து எப்படியும் நள்ளிரவு ஒரு மணி இரண்டு மணியளவிலேயே வீடு செல்வார்.

அன்று அப்படித்தான் இரவு நேர வேலையை முடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்த வழியில் உப்புவெளி உட்துறை முக வீதியில் வைத்து நல்ல தடித்த கறுத்த உருவம் ஒன்று தனது இடுப்பளவு உயர மீனுடன் இவர் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் முன்பு நின்று மறித்து, ஐயா என்னை ஒருக்கால் செல்லும் வழியில் அறக்கி விடுவீர்களா? என மறித்து கேட்டது.

இவருக்கு கால்கள் நடுங்கத் தொடங்கின. மறுக்க முடியாத வாறு சைக்கிளின் முன் நின்றிருந்தது அந்த உருவம். வேறு வழியின்றி ஏற்றிக் கொண்டார். பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது என யாரோ சொல்லியது ஞாபகம் வர பக்கவாட்டு கண்ணாடியைக் கூட பார்க்க வில்லை. சரியாக இலங்கை செஞ்சிலுவை சங்கம் தாண்டியதும். ஐயா இங்க தான் என்னை இறக்கிவிடுங்க என கூறியது அந்த உருவம்.

உடன் சைக்கிள் நின்றது. சைக்கிளில் பாரம் குறைந்ததை உணர்ந்ததும் முறுக்கிக் கொண்டு சென்று விட்டார் அவர்.

மறு வாரமும் இதே போல் நடந்தது. இவருக்கோ ஒன்றும் புரியவில்லை. உண்மையில் அது யார் எனும் கேள்வி மனதை அரித்தது. யாரிடமும் இது குறித்து சொல்லவும் முடியவில்லை நடந்து வருவதை ஊகிக்கவும் முடியவில்லை.

மறு வாரம் தனது வேலையை சற்று தாமதித்து தாமதித்தே சென்றார். எனினும் நேரம் செல்லவில்லை. சரியாக அவரது வழமையான நேரத்திற்கே வேலை முடிந்தது. அன்றும் அதே போல நின்றிருந்தது அந்த உருவம். அதே அளவு மீனுடன்....

ஏற்றிக் கொண்டார். பின்னால் பார்க்க-வில்லை. இதுவரை காலமும் அவருடன் முட்டுப்பட்டதும் கூட இல்லை. ஆனால் உண்மைக்கு இவரது சைக்கிளில் அந்த பருத்த உருவம் அவருடன் ஒட்டிக் கொண்டு இருந்தால் மாத்திரமே இடம் போதுமானதாக இருக்கும் என எண்ணிக் கொண்டார். சரி என்றைக்கு நான் மாட்டு-வேனோ தெரியவில்லை என நினைத்த-வாறு சென்று கொண்டிருந்த வேளையில் பக்கவாட்டு கண்ணாடி மெல்ல திரும்பியது.

பின்னால் இருக்கும் அந்த உருவம் தன்னை பார்க்கச் செய்தது. இவர் மறுத்தார். பிரார்த்தனை மனதில் ஓடியது. கடித்து இரத்தம் உறிஞ்சும் சத்தம் கேட்டது. அசை போட்டு சாப்பிடும் சத்தமும் கூடவே பெரும் இரைச்ச-லானது. சைக்கிளின் வேகம் குறைந்தது. குறைந்தது... எனினும் வேகம் முற்றாக நிறுத்தப்படுமுன் அது இறங்க வேண்டிய இடம் வந்தது. முன்னால் பெரும் வெளிச்சத்துடன் ஒரு பேரூந்து வந்து கொண்டிருந்த வேளை தன் சைக்கிளில் இருந்து பாரம் குறைந்து வேகம் கூடியதை உணர்ந்தார். அன்று போய் படுத்தவர் தான் ஒரு கிழமை நெருப்பாய் கொதித்தது உடம்பு. அன்றுடன் வேலைக்கு செல்வதை நிறுத்திக் கொண்டார் அவர்.

(தன்யா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்

ராஜேஷின் இயக்கத்தில்

# "தூங்காவனம்"

### கமலஹாசன் மற்றும் திரிஷா நடிக்கும்





கமல்ஹாசன், த்ரிஷா, பிரகாஷ்ராஜ், யூகி சேது, மதுஷாலினி உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் தூங்காவனம்.

பணத்திற்காக எந்த வேலையையும் செய்யக்கூடிய காவல்துறை அதிகாரியாக கமல். போதைப் பொருள் கடத்தி வருபவராக பிரகாஷ் ராஜ் நடித்திருக்கிறார். அவரிடம் இருந்து பல கோடி விலைமதிப்புள்ள போதைப் பொருளை கடத்துகிறார் கமல், அதை மற்றொரு காவல்துறை அதிகாரியான த்ரிஷா பார்த்து விடுகிறார். கமலின் மகனை பிரகாஷ்ராஜ் கடத்தி, அவனை பணயக் கைதியாக வைத்துக் கொண்டு, திருடிய போதைப் பொருளை கேட்கிறார். மகனை மீட்கும் கட்டாயத்தில் இருக்கும் கமல் போதைப் பொருளை திருப்பி கொடுக்க நினைக்கிறார். ஆனால் அவர் பதுக்கி வைத்த இடத்தில் போதைப் பொருள் காணாமல் போகிறது. இதனால் குழம்பி போகும் கமல், எப்படி தன் மகனை மீட்டார்? அந்த போதைப் பொருளை எடுத்தது யார்? கமல் போதைப் பொருளை கடத்துவதற்கு காரணம் என்ன? என்பதே பரபரப்பான மீதிக்கதை.

விஸ்வரூபம் படத்திற்கு பிறகு செண்டிமெண்ட் கதைகளில் நடித்து வந்த கமல் ஆக்ஷனில் மிரட்டுகிறார். த்ரிஷா முதன் முறையாக காவல்துறை வேடத்தில் நடித்திருக்கிறார். திரிஷாவின் நடிப்பில் இப்படம் முக்கிய இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை. இவர்கள் இருவரின் நடிப்பையும் தூக்கி சாப்பிட்டிருக்கிறார் பிரகாஷ்ராஜ். கமலை ஆட்டி வைக்கும் காட்சிகளில் வெகுவாக ரசிகர்களை கவர்ந்து கைதட்டல்களை பெறுகிறார்.

படத்தில் ஒரே ஒரு பாடல், வைக்கவே முதலில் தைரியம் வேண்டும். தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் படமாக இயக்கியிருக்கிறார் இயக்குனர் ராஜேஷ். விறுவிறுப்பான திரைக்கதை படத்திற்கு பலம்.

மொத்தத்தில் படம் முடியும் போது இவ்வளவு சீக்கிரம் படம் முடிந்துவிட்டதா, என்றளவிற்கு தூங்காவனம் தூங்காமல் செல்கிறது.




### வெற்றியின் களிப்பிலும் சந்தோசமின்றி த்ரிஷா

தூங்காவனம் படத்தின் தெலுங்கு பதிப்பு வெளி வந்தது. இப்படத்தின் ஸ்பெஷல் ஷோ ஒன்று ஆந்திர நட்சத்திரங்களுக்கு நேற்று திரையிடப்பட்டது. அப்போது நிகழ்ச்சி முழுவதும் சந்தோஷமாக இருந்த த்ரிஷா, நடிகர் ராணாவின் வருகையில் சிறிது நேரம் டல் ஆனார். முகத்தில் சிரிப்பு காணாமல் போக, ராணாவை பார்த்து ஹாய் என்று கூறி அங்கிருந்து த்ரிஷா நகர்ந்துள்ளார்.

த்ரிஷா, ராணா இருவரும் காதலிப்பதாக ஒரு செய்தி முன்பு பரவியது குறிப்பிடத்தக்கது.



### 100 கோடியையும் தாண்டி மன்னனான வேதாளம்

தமிழ் சினிமாவின் வசூல் மன்னனாக வேதாளம் படத்தின் மூலம் அடுத்த கட்டத்தை எட்டியுள்ளார்அஜித். மழையிலும் குறையாத கூட்டம் என வசூல் அள்ளி வருகின்றது இப்படம். இந்நிலையில் சமீபத்தில் சினி உலகம் நேயர்களுக்காக பேட்டியளித்த இயக்குனர் சிவாவிடம் படத்தின் வசூல் குறித்து கேட்ட போது 'வசூல் பற்றி எல்லோரும் ரூ100 கோடி என்று கூறுகிறார்கள். இந்நேரம் அதையும் தாண்டி சென்றிருக்கும், மேலும், தொலைப்பேசியில் பேசிய அனைத்து விநியோகஸ்தர்களும் அஜித் சார் நன்றாக இருக்க வேண்டும் என்று தான் கூறுகிறார்கள்' என நெகிழ்ச்சியாக கூறினார்.

### சேதுபதிக்கு அடித்த அதிர்ஷ்டம்

நீண்ட நாட்களாக ஒரு ஹிட் படம் கொடுப்பதற்கு போராடி வந்தவர் விஜய் சேதுபதி. அந்த வகையில் நானும் ரவுடி தான் சூப்பர் ஹிட் ஆகி அவரின் திரைப்பயணத்தை மீண்டும் உச்சத்தை கொண்டு சென்றது. இந்நிலையில் இப்படத்தில் நயன்தாராவுடன் டூயட் பாடிய அவர் தன் அடுத்த படத்தில் த்ரிஷாவுடன் டூயட் பாடவுள்ளாராம். இப்படத்தையும் விக்னேஷ் சிவன் தான் தனுஷ் நிறுவனத்திற்காக எடுக்கவுள்ளதாக கூறப்படுகின்றது.



### அது குறித்து எந்த நிபந்தனையும் இல்லை



தடையறத் தாக்க, என்னமோ ஏதோ, புத்தகம் திரைப்படங்களில் நடித்த ராகுல் ப்ரீத் சிங், அந்த திரைப்படங்கள் எதிர்பார்த்த வெற்றி பெறாததால் தெலுங்கு திரைப்படங்களில் தீவிர கவனம் செலுத்தினார். அத்துடன், ஒரு திரைப்படத்தில் லிப் லாக் முத்தக்காட்சியில் நடித்து ஆந்திராவிலுள்ள இளவட்ட ரசிகர்களை சூடேற்றி விட, தொடர்ந்து பல திரைபடங்களில் ஒப்பந்தமானார். இதையடுத்து உதட்டு முத்தக்-காட்சியில் நடிக்க நான் தயார். அந்த விடயத்தில் எந்த நிபந்தனையும் என்னிடம் இல்லை இனி அவ்வாறே நடிக்கப் போகிறேன் என தெரிவித்துள்ளார்.

### வேணாம் என்றாராம் ஸ்ருதி



புலி திரைப்படத்தில் நடித்ததுக்காக தனக்கு தரவேண்டிய 20 இலட்சம் இந்திய ரூபாயை, நடிகை ஹ்ருதி ஹாசன் விட்டுக்கொடுத்துள்ளாராம்.

தயாரிப்பாளர்களுக்காக தனது சம்பள பாக்கியை ஸ்ருதி விட்டுக்-கொடுத்துள்ளதாக கூறப்படுகின்றது. ஏற்கெனவே, விஜயும் தனது சம்பளத்தில் சில கோடிகளை விட்டு கொடுத்துள்ளதாக கூறப்படும் நிலையில் ஸ்ருதியும் மீதிப் பணத்தை வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## மின்னல் வேகத்தில் சார்ஸ் செய்யும் ஸ்மார்ட் ஃபோன்

உலகத் தரம் வாய்ந்த ஸ்மார்ட் கைப்பேசிகளை வடிவமைத்து அறிமுகம் செய்யும் Huawei நிறுவனம் தற்போது அதிவேகத்தில் (Ultra Fast) சார்ஜ் ஆகக்கூடிய மின்கலங்களை வடிவமைத்து வருகின்றது.

இவை சாதாரண மின்கலங்களிலும் பார்க்க 10 மடங்கு வேகமாக சார்ஜ் ஆகக்கூடியதாக இருப்பதுடன், சில நிமிடங்களில் 50 சதவீதம் வரை சார்ஜ் ஆகும் தன்மை கொண்டவை.

அதாவது 600 mAh மின்கலம் ஒன்றினை 68 சதவீதம் சார்ஜ் செய்வதற்கு 2 நிமிடங்கள் போதுமாக இருக்கும் எனவும், 3000 mAh மின்கலம் ஒன்றினை 48 சதவீதம் வரை சார்ஜ் செய்தவற்கு 5 நிமிடங்கள் போதும் எனவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## வயாகராவில் நீரிழிவிற்கான மருந்து




ஆண்மையை அதிகரிக்க பயன்படுத்த வயகரா மாத்திரையானது தற்போது நீரிழிவு நோயையும் தடுக்கும் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. உடலில் இன்சுலின் உற்பத்தி குறைபாட்டின் காரணமாக ஏற்படும் நீரிழிவு நோயானது டைப் 1 மற்றும் டைப் 2 என இருவகைப்படும்.

இதில், சில்டெனாபில், பிளாசாபோ என்ற வயகரா மாத்திரைகள் டைப் 2 நீரிழிவு நோயை தடுக்கும் திறன் கொண்டது, இது உடலின் இன்சுலின் உற்பத்தியை சீராக்கி நீரிழிவு நோய் வராமல் தடுக்கிறது. இது உடலின் தசைகளை தளர்வுபடுத்தி ரத்த ஓட்டத்தை சீராக்குகிறது.

சுமார் 42 ஆயிரம் பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கு பிறகு, இந்த மாத்திரைகள் இன்சுலின் உற்பத்தியில் சிறப்பாக பங்காற்றியுள்ளது என தெரியவந்துள்ளது.

OTHER

## விளம்பர சிரமத்திற்கான மாற்றீடு




கூகுள நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட அன்ரோயிட் இயங்குதளத்தில் செயல்படுவதற்கான அப்பிளிக்கேஷன்களை அந்நிறுவனம் கூகுள் பிளே ஸ்டோரினூடாக வழங்கிவருகின்றது. இலவசமான மென்பொருட்களில் விளம்பரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது வழமையாகும். இந்த விளம்பரங்களினால் பயனர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்ப்பதற்காக இனி வரும் காலங்களில் தரவிறக்கம் செய்வதற்கு முன்னர் எந்தெந்த அப்பிளிக்கேஷன்கள் விளம்பரங்களினை கொண்டிருக்கின்றன என்பது பற்றி பயனர்களுக்கு தெரிவிக்கும் வசதியினை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

## மழை நேரத்தில் கவனிக்க வேண்டியவை



மின்சார ஒயரிங் வேலைகளை அரசு உரிமம் பெற்றுள்ள மின் ஒப்பந்தக்காரர் மூலமாக மட்டுமே செய்ய வேண்டும். ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற தரமான மின்சார சாதனங்களை மட்டுமே வாங்க வேண்டும்.

குளிர் சாதனப் பெட்டி, கிரைண்டர் போன்ற வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கு, நில இணைப்புடன் கூடிய மூன்று பின் சாக்கெட் உள்ள பிளக்குகள் மூலமாக மட்டுமே மின் இணைப்பு வழங்க வேண்டும். உடைந்த சுவிட்சுகளையும், பிளக்குகளையும் உடனே மாற்ற வேண்டும்.

தொலைக்காட்சி ஆண்டனாவை வீட்டின் அருகே செல்லும் மேல்நிலை கம்பிகளுக்கு அருகில் கட்டக்கூடாது. ஈரமான இடங்களில் சுவிட்சுகளை பொருத்த கூடாது.

மழையாலும், காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின்சார கம்பி அருகே செல்லக்கூடாது. மின்வாரிய அலுவலகத்துக்கு உடனே தகவல் அளிக்க வேண்டும்.

மின்வாரியத்தின் மேல்நிலை மின்சார கம்பிகளுக்கு அருகில் உள்ள மரக்கிளைகளை வெட்டுவதற்கு மின்சார வாரியத்தின் அலுவலர்களை அணுக வேண்டும்.

மின்சாரத்தினால் ஏற்பட்ட தீயினை தண்ணீர் கொண்டு அணைக்க முயற்சிக்க கூடாது.

தீ விபத்து மின்சாரத்தால் ஏற்பட்டது எனில், உடனே மெயின் ஸ்விட்சை நிறுத்திவிட வேண்டும்.

இடி அல்லது மின்னலின் போது வெட்ட வெளியில் இருக்க கூடாது. இடி அல்லது மின்னலின் போது தஞ்சம் அடைய அருகில் எதுவும் இல்லாதபட்சத்தில், மின் கம்பிகள், மின் கம்பங்கள், மரங்கள், உலோக கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும்.


தொலைக்காட்சி. மிக்ஸி, கிரைண்டர், கணனி, தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது.



## Blue Tooth தரவுப் பரிமாற்றம்

குறுகிய தூரங்களுக்குள் மொபைல் சாதனங்கள் ஊடாக வயர்லெஸ் முறையில் தரவுப் பரிமாற்றம் செய்வதில் ப்ளூடூத் ஆனது முக்கிய பங்கு வகிக்கின்றது.

தற்போது இதன் வேகத்தினை 100 சதவீதத்தினால் அதிகரிக்கவுள்ளதாக Blue tooth Special Interest Group எனும் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.



## தகவல்களை திருடும் அப்பிளிகேஷன்

Ad Blocking apps மூலம் மொபைல் சாதனங்கள் ரகசியமாகக் கண்காணிக்கப்படுவதுடன், தகவல்கள் திருடப்படுவதை அப்பிள் நிறுவனம் கண்டுபிடித்-துள்ளது.

அதனால் இதுபோன்ற அப்ளிகேஷன்களை தனது ஆப்ஸ் ஸ்டோர் தளத்திலிருந்து அப்பிள் நீக்கியுள்ளது. இதை அப்பிள் நிறுவனமே அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

எனினும் இவ்வாறு நீக்கப்பட்ட சில அப்ளிகேஷ-ன்களை ஆப்ஸ் ஸ்டோர் தளத்தில் மீண்டும் பதிவேற்றம் செய்வதற்கான விண்ணப்பங்கள் மறுபடி கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

## அதி வேகம் கொண்ட இணைய இணைப்பு

சமகாலத்தில் இணைய இணைப்பானது மனித வாழ்வில் இன்றி அமையாததாக மாறிவருகின்றது. இதன் ஒரு அங்கமாக ஐக்கிய ராச்சியத்தில் இணைய சேவையினை வழங்கிவரும் நிறுவனங்களுள் ஒன்றான Gigaclear Trialing ஆனது 5GBPS வேகம் கொண்ட இணைய இணைப்பினை வழங்கவுள்ளது.

பரீட்சார்த்த ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இச்சேவையின் ஊடாக முதன் முறையாக 10,000 வீடுகளுக்கு இணைய இணைப்பு வழங்கப்படவுள்ளது. தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வழங்கப்படும் இணைய இணைப்புக்களின் ஊடாக 1,500MB வீடியோ கோப்பு ஒன்றினை தரவிறக்கம் செய்வதற்கு 8 நிமிடங்கள் வரை எடுக்கும், இதனை மேற்குறித்த நிறுவனம் 2 நிமிடங்களில் தரவிறக்கம் செய்யக்கூடியதாக மேம்படுத்தியிருந்தது.




## பெப்சி ஸ்மார்ட் ஃபோன் விரைவில்

உயிர்க்கொல்லி நோய் எபோலாவை குணப்படுத்தும் மருந்தினை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நைஜீயா, சாட், சியாராலோன் போன்ற நாடுகளில் பரவிய "எபோலா" என்ற உயிர்க்கொல்லி நோய் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பறித்தது. இந்நிலையில், இந்த நோயை குணப்படுத்துவதற்காக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள், சாட் 3 எபோ-இசட் என்ற மருந்தினை கண்டுபிடித்துள்ளனர், இதில் அடினோ வைரஸ் என்ற கோல்டு வைரஸ் உள்ளது.


## நீரிலிருந்து உப்பை பிரித்தெடுக்க வழி

அமெரிக்காவின், இல்லினாய்ஸ் பல்கலையைச் சேர்ந்த பொறியாளர்களும், விஞ்ஞானிகளும் இணைந்து, "நனோ போர்ஸ்" என்ற, நுண்ணிய பொருளை கண்டுபிடித்துள்ளனர்.

இதிலுள்ள சிறிய ஓட்டைகளில், அளவுக்கு அதிகமான நீரைச் செலுத்துவதன் மூலம் அந்த நீரில் உள்ள உப்பு, வடிகட்டப்பட்டு, குடிநீராக நமக்கு கிடைக்கும். இதற்கு, மிகவும் குறைவாகவே செலவாகும் என, அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொறியாளர்கள் பயன்படுத்தும், "நானோ மீற்றர்" என்ற ஒரு வகை அட்டையிலிருந்து, நானோபோர்ஸ் (Nanoforce) வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பெப்சி ஸ்மார்ட் ஃபோன் விரைவில்



பெப்சி நிறுவனம் ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளது. 5.5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டதும், 1.7GHz வேகத்தில் செயல்படும் Octa Core Processor இனை உடையதுமான கைப்பேசியினை அந்நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

மேலும் பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும், 13 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா, 3000 mAh மின்கலம் என்பவற்றினையும் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயும் காதல் கோபுரங்கள்

சிறுகதை

திருமலை. வீ. என். சந்திரகாந்தி

'விஜயாவை சந்திப்பதை, கதைப்பதை விடு, அவளை நீ கலியாணம் முடிப்பதை நாங்கள் அனுமதிக்கப்போதில்லை' அம்மா அப்படி சொல்லிவிட்டா.

விஜயாவை நான் ஆரம்பகாலத்தில் சந்தித்தபோது தேவ கன்னி போல .. நெருங்க முடியாத நெருப்பாக அவள் இருந்தாள். எனது நினைவிலும் கனவிலும் ஒளி வெள்ளம் போல ஊடுருவி அந்த ஆனந்த வெள்ளத்தில் என்னை தெப்பம் போல மிதக்க வைத்தாள்.

அவளில்லாமல் நான் வாழ்வது அரிதிலும் அரிது என்பதை அவளது பெண்மைக்கேயுரிய போராயுதங்கள் எனக்கு நாழிகைக்கு நாழிகை எச்சரிக்கை விடுத்துக்கொண்டிருந்தன.

பல நாட்கள் அவள் பின்னால் அலைந்தேன் அந்த ரதியின் கடைக்கண் பார்வைக்காக தவமிருந்தேன். அத்துடன் அந்த பூமகள் பார்வை என்பக்கம் திரும்பியது மெல்ல...

'மச்சான்... நீ விஜயாவை மணம் செய்வதை எங்களுடைய உயர் சமூக மட்டம் என்றைக்குமே அனுமதிக்கபோவதில்லை. இதனால் உனக்கு மட்டுமன்றி விஜயாவுக்குமே என்றுமே பிரச்சனையாகத்தான் இருக்கும் இந்த நிலையிலேயாவது நீ அவளை விட்டு விடுவதே நல்லது.' எனது உயிருக்குயிரான நண்பன் கூட கூறிவிட்டான்.

விஜயா நல்லவள். அதனால்தான் அவள் தனது தகுதியின்மைகள் பற்றி வெளிப்படையாவே பேசுகின்ற சுபாவம் கொண்டவளாக இருந்தாள். எந்த நிலையிலும் தனது ஏழ்மையை மனதில் கொண்டு பெண்மையை பயன்படுத்தி என்னை வலையில் வீழ்த்த எத்தனிக்கவில்லை.

இன்று விடுமுறைதினம். பத்து மணிக்கெல்லாம் புதின பத்திரிக்கைகள் அனைத்தும் வாசிகசாலைக்கு வந்து விடும். அங்கு சென்றால் அவளை சந்திக்கலாம். எப்படியும் இன்று ஒரு தீர்க்கமான முடிவு எடுத்துவிட வேண்டும்.

விடுமுறை தினமாதலால் நகரத் தெருக்கள் வெறிச்சோடி கிடந்தன. பிச்சை எடுக்கும் ஏழ்மை நிலையிலும் காதலால் இணைந்த ஒரு நடுத்தர சோடியை இந்த நகரில் கவனிக்காதவர்கள் இருக்கமாட்டார்கள்.

நல்ல முறுக்கேறிய உடல் வளம் கொண்ட அவன் அழுக்கடைந்த நாலு முழ வேட்டியை மடித்துக் கட்டியபடி குடி போதை கிறக்கம் கண்களில் துலங்க நெஞ்சை நிமிர்த்தி ராஜ திமிருடன் நடந்து செல்வதும் அவள் சில நாட்களாகவே அவன் வயப்பட்டு பின்னால் சுற்றுவதும் எவர் கவனத்தையும் திருப்பவே செய்யும்.

நகரின் பிரதான வீதியை நான் தாண்டும் போது இருவரும் என்னை கடந்து சென்றார்கள்.

வாசிகசாலையை சென்றடைந்தபோது விஜயா வந்திருக்கவில்லை. சில மணி நேரம் பத்திரிக்கைகள் படித்தபடி அங்கு தாமதித்தேன். எப்படியும் வந்துவிடுவாள்... நிச்சயமாக வந்துவிடுவாள்....

அந் நாட்களிளெல்லாம் விஜயாவை அண்மித்தவுடன் எனது நெஞ்சு படபடக்கத் தொடங்கிவிடும். எப்படி இவளை என்னால் கவர முடிந்ததென எண்ணி ஆச்சரியமடைந்தேன். நான் நாட்டிவிட்ட காதல் பயிருக்கு அவள் நீருற்றினாள். படிப்படியாக எனது அச்சத்தை தெளிவித்தாள். தன்னை நெருங்க இடம்கொடுத்தாள். எனது பதற்றத்தை அர்த்தமற்றதாக்கினாள். அவளை அண்மிக்க அவளுடன் காலத்தை கழிக்க வெறி கொண்டேன்.

மதியம் பன்னிரெண்டு மணி.

இதன்மேல் விஜயா வரமாட்டாள். விடுமுறைதினங்களில் விஜயா வாசிகசாலைக்கு வராவிட்டால் மாலையில் கடற்கரையில் என்னை எதிர்கொள்வாள். வாசிகசாலையில் பேசி கதைக்க முடியாததாகையால் அவசியம் கருதி அந்த ஏற்பாடு.

வாசிகசாலை படியை தாண்டி சிறிது தூரமே நடந்திருப்பேன்... எனது முறை மச்சாள்... எனக்கு மிக இளையவள் எதிரே வந்து கொண்டிருந்தாள். என்னைக் கடக்கும் சமயம் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறினாள்.

'இவையளுக்கெல்லாம் தங்களுடைய உறவுக்குள்ளாக உள்ள பெண்கள் கண்ணுக்குள் குத்துகிற மாதிரி இல்லை. ஆருக்கும் பின்னால் அலைந்து திரிந்து பிடிச்சாத்தான் பொம்பிளையாகப்படுகிறது.' தோளை உயர்த்தி தலையை சுழற்றிய வேகத்தில் அவளது இரட்டை பின்னல் எனது முகத்தை சீவிச்சென்றது.

மச்சாளுக்கும் நான் தன்னை தவிர்த்து விஜயாவை விவாகம் செய்ய எண்ணுவது அறவே பிடிக்கவில்லை. விஜயா என்னை ஒத்த வயதினள். ஆனால் மச்சாள் ஆறுவயதாகிலும் இளையவள். நேற்று வரை பாடசாலை போய்க்கொண்டிருந்தவள். ஒத்த வயதாக இருந்தால் விஜயாவை விரட்டிவிட்டு என்னைக் காதில் பிடித்து தன் வீட்டு மூலையில் இருத்தியிருப்பாள்! சொல்ல முடியாது.

விஜயா சுயநலக்காரி அல்ல. எனக்காக எதையும் செய்ய தயாரான பெண்தான் அவள்.

ஒரு கட்டத்தில் அண்மிக்க முடியாத தீப்பிழம்பாக இருந்த அவளை நெருங்க நெருங்க அச்சுடர் தண்ணென ஒளி பாய்ச்சும் நிலவாக மாறி போதையூட்டியது.

'நான் உம்மைத்தான் மணமுடிப்பேன்' போன்ற பல உறுதி மொழிகளை இருவரும் பரிமாறிக்கொண்டோம். திருமண பதிவோ மத ரீதியான அங்கீகாரமோ காதலில் கட்டுண்டு காதோடு கதை பேசும் மொழிக்கு முன்னால் செயலிழந்து விடுகின்றன...

நான் எங்க செல்ல அழைத்தாலும் விஜயா வந்தாள்... எந்த எல்லைக்கும் வந்தாள்... என்னை நம்பினாள்!

விஜயாவை சந்திக்காமல் வாசிகசாலையால் வீடு வந்தபோது மதியம் ஒரு மணி. தங்கை உணவை மேசைக்கு எடுத்துவிட்டு காத்திருந்தாள்.

உணவு பரிமாறியபடி அவள் பேசினாள்.

'அண்ணா... சிறிது நேரம் முன்பதாக ஒரு மாப்பிள்ளையின் பெற்றோர் வந்திருந்தனை. என்னை பெண் பார்க்கவேண்டும் என்று அடம்பிடிக்க தொடங்கிவிட்டினம். அப்பாவாலும் மறுத்து கூற முடியவில்லை. பெண் வடிவாக இருந்ததால் சீதனத்தில் 'கறாராக' இருக்கப்போவதில்லை என்று கூறி அப்பாவை சம்மதிக்க வைச்சிட்டினம். நிதி நெருக்கடியாக இருக்கிறதாலை அப்பா இறங்கி வந்தார் என்று அம்மா எனக்கு சமாதானம் கூறினா. அண்ணாவை கேட்காமல் இந்த ஏற்பாட்டுக்கு நான் தயாரில்லை என்று மறந்துவிட்டேன்.'

தங்கை பாவம். என்னை நம்பியிருக்கிறாள். எனது வாழ்கையை தியாகம் செய்தாகிலும் அவளுக்கு நல்லதொரு வரனைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

ஒரு கணம் அந்த ஏழ்மை நிலையில் உள்ள நடுத்தர வயது சோடியை மனம் எண்ணிப்பார்க்கின்றது. அங்கு நிபந்தனைகளோ நிர்ப்பந்தங்களோ கிடையாது. ஏழ்மையின் மத்தியில் உள்ள ஒரு காதல் சாம்ராஜம். எனக்கு தான் விஜயாவை மணம் முடிக்க கொடுத்து வைக்கவில்லை போன்று இருக்கின்றது.

எனது சுபீட்சமான எதிர்காலத்தை எண்ணி ஏங்கும் அம்மா... எனது நன்மையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட எனது நண்பன்... தனது வாழ்க்கையை எனது கைகளில் ஒப்படைத்துவிட்ட தங்கை என்மீது உரிமை பாராட்டும் எனது மச்சாள்.

மாலை நான்கு மணிக்குமேல்... கடற்கரையில் விஜயாவைச் சந்தித்தேன். அலைகள் மோதி பிரியும் வெண்மணற் பரப்பில்... சீறிப்பாயும் நீருக்கு போக்கு காட்டியபடி அவள் என்பின்னால் ஓடி வருவதும் என்னை தோளில் தள்ளிவிடுவதுமாக குழந்தையாக மாறி குதூகலித்து விளையாடினாள்.

இன்று எப்படியும் விஜயாவுக்கு எனது மறுப்பை தெரிவித்துவிட வேண்டும். காதலிக்கும் ஆண்கள் எல்லோரும் கட்டாயம் விவாகம் செய்யவேண்டும் என்று சட்டமா இருக்கின்றது. ஒரு இளமை வேகம் இனம் புரியாத கவர்ச்சி ஒரு உத்வேகம் சில தூண்டுதல்களை ஏற்படுத்துகின்றன. அந்த இளமை துடிப்பு தணியும் போது ஆணைப்போல பெண்ணும் தனக்கு எது சரி எது பிழை என்பதை சிந்திக்கவே தலைப்படுவாள். விஜயா தனது சமூக அந்தஸ்து... நிதி நிலைமை ஆகியவை பற்றி விளக்கங்கள் அற்றவளல்ல. நான் கூறினால் புரிந்து கொள்வாள்.

விடுமுறை தினமாதலால் மக்கள் கூட்டம் பெருவெள்ளமாக அலைமோதியது. எங்களுக்கு முன்னால் சனத்திரள் மத்தியில் சிறியதொரு சலசலப்பு. திரும்பி பார்த்தேன். நான் நகரில் சந்திக்கும் நடுத்தர வயது காதல் சோடி! இரண்டு 'காவல்துறையினர்' அவனை தரதரவென இழுத்துச்சென்று 'ஜீப்' வண்டி ஒன்றில் ஏற்றினார்கள். அவனிடம் போதைவஸ்து பழக்கம் இருந்திருக்க வேண்டும். அந்த நடுத்தரவயது ஏழைப்பெண் தலையில் இரு கைகளாலும் அடித்து ஓலமிட்டபடி அந்த ஜீப் வண்டியின் பின்னால் ஓடினாள். நானும் அண்மித்தேன்.

'ஜீப்' வண்டி போய்விட்டது. அவள் தனது காதலை இழந்து விட்டாள். அந்த வேக்காட்டில் அவனை திட்டினாள்.

திரும்பி விஜயாவை பார்த்தேன். அவள் யாரோ ஒரு குழந்தைக்கு விளையாட்டு காண்பித்தபடி இருந்தாள்.

தன் காதலனால் ஏமாற்றப்படும் நிலையில் எந்த ஒரு பெண்ணும் ஆத்திரமுற்று பிரயோகிக்ககூடிய யதார்த்தமான கருத்துச் செறிவு அந்த ஏழைப்பெண்ணின் சொற்பிரயோகத்தில் இருந்தமை எனக்கு உறைக்க செய்தது.

'ஏய் பாவி மனுஷா... ஒரு வயிற்று சோற்றுக்காக உனக்கு பின்னால் வந்தேனே... இப்போ இரண்டு வயிறுகளை பட்டினி போட்டு போகிறியே... நீயும் ஒரு ஆண்மகன்தானா...?

எனது மனசாட்சி என்னை சுட்டெரிக்கின்றது.

---

சாதாரணவனின் மனது

# அப்பாவின் அழகிய ராட்சசியுடன் ஓர் கலந்துரையாடல்

சஞ்சயன் செல்வமாணிக்கம்

இன்று ஞாயிற்றுக்கிழமை. காலை 06.30 மணியிருக்கும், ஆழ்ந்த தூக்கத்தில், கனவுலகில் இலியானாவுடன் ஒரு குத்துப்பாட்டுக்கு டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தேன்.



அப்போது தொல்லைபேசி ஒலித்து என் நித்திரையையும், கனவையும் குழப்பியது. யார் அழைத்தது என்று பார்ப்பதற்கு முன்பாகவே அந்த அழைப்பு நின்று போயிற்று. மீண்டும் கண்கள் மூடிக்கொள்ளும் போது தொல்லை பேசி மணியொலித்தது.

எடுத்து "ஹலோ" என்ற தூக்கக்கலக்கத்தில் கூறினேன்.

மறுபுறத்தில் அப்பாவின் அழகிய ராட்சசி எங்கள் உரையாடல் இப்படியிருந்தது.

"தம்பி என்னடா காய்ச்சலா?"
"இல்லை"
"அப்ப தடிமலா (ஜலதோஷம்)?"
"இல்லை அம்மா"
"சரி.. சரி .. குளிகைள் எல்லாம் போட்டியா"
"போடுவம்"

எனக்கோ தூக்கம் தாங்கமுடியாதிருந்தது. ஆனால் அவரோ விடுவதாயில்லை.

"டேய், உன்ட தம்பீட மகளுக்கு இன்றைக்கு பிறந்த நாள், மறக்காதே"

அது என் நினைவில் இருக்கவில்லை என்றாலும் "ஓம் ஓம்" என்று சமாளித்தேன். (மதுரா, பெரியப்பாவை மன்னிப்பாயாக)

அம்மா தொடந்தார்..

நேற்று மச்சாள் வீடு வந்ததையும், அவரின் மகளுக்கு கல்யாணம் நடைபெறவிருக்கும் கதை, ஏனைய பல கதைகளைகள் என்று கூறினார்.

நான் தூங்கியபடியே ம்..ம்..ம் என்று பதிலளித்துக்கொண்டிருந்தேன்.

அதை அவர் அதானித்திருக்கவேண்டும்

"டேய் என்ன நித்திரயில இருந்து கதைப்பது போல கதைக்கிறாய்" என்றார்

"அம்மா, என்னை நித்திரை கொள்ள விடுங்கோ" என்றேன்.

"என்ன நித்திரையோ, நீ 48 வயதாகியும் இன்னும் திருந்தேல்ல, படிக்கிற காலத்திலயும் எழும்பமாட்டாய், அப்பா இருந்திருந்தால் நீ திருந்தியிருப்பாய்" என்று ஒரு பெரிய லெக்கசரே அடித்தார்.

அப்பா என்ன யமனே வந்தாலும் என்னை நித்திரையால் எழுப்புவது முடியாத காரியம் என்பதை அம்மா அறியமாட்டார்.

மீண்டும் அமைதியாக இப்படிச் சொன்னார்.

நண்பர்களே இனித்தான் கிளைமாக்ஸ் வருகிறது. அவதானமாய் வாசியுங்கள்

"தம்பி நேரம் 11 மணியாகிவிட்டது, எழும்புடா, போய் முகம் கழுவி சாப்பிடு ராசா" என்றார்.

அம்மா இலங்கை நேரத்தையும், நோர்வே நேரத்தையும் குழப்பிக்கொள்கிறார் என்பது புரிந்து.

"ஓம் ஓம்".. காலைக்கடன்களை முடித்துவிட்டு உங்களுக்கு தொலைபேசி எடுக்கிறேன் என்றேன்."

"சரி" என்று தொலைபேசியை வைத்தார். (மகன் தனது சொல்லை இப்பவாவது கேட்கிறானே என்று நினைத்துப் பெருமைப்பட்டிருப்பார்)

இப்போது நோர்வேயில் நோர்வேயில் நேரம் 11:15 ஆகிறது. நான் இன்னும் எழும்புவது பற்றி யோசிக்கவே இல்லை.

அம்மாவும் எனக்கு தொலைபேசி எடுத்ததையும், நான் மீண்டும் அவருடன் பேசுவேன் என்றதையும் மறந்திருப்பார்.

வாழ்க, அப்பாவின் அழகிய ராட்சசியின் மறதி!

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரன் மாமி உடைத்தது மண்குடமே – மாவை

# விக்கி மருமகள் உடைத்த குடம் பற்றி ஆராய்வோம் – சம்பந்தன்

மட்டு – நேசன்

**"முதலமைச்சரை நீக்க வேண்டுமென்ற கருத்து** சுமந்திரனின் கருத்தாக இருக்கலாம். ஆனால் அதுவே கட்சியின் முடிவாக இருக்காது. இந்நிலையில் சுமந்திரனின் கருத்துக் குறித்து அவரிடம் விளக்கம் கேட்கப்படும். ஆகவே இதனை யாரும் விமர்சிப்பதில் அர்த்தம் இல்லை" இவ்வாறு மொழிந்திருக்கிறார் மாவை.

மற்றவர்கள் விமர்சிப்பது ஒருபக்கம் இருக்கட்டும். இதுவரை எந்த விடயத்துக்கு சுமந்திரனிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என்பதை மாவை தன்னை விட அர்த்தம் தெரியாதவர்களுக்கு புரிய வைக்க வேண்டியுள்ளது.



01. கட்சியில் யாரிடம் அனுமதி பெற்று அரசுத்தரப்பினரோடு கிரிக்கெட் ஆடினார்?

02. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று தமிழரசுக்கட்சி கருதுகின்றதா? கருதவில்லையாயின் தென்னிந்தியத் திருச்சபை தொடர்பான வழக்கொன்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட போது புலிகளைப் பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்டமை தொடர்பாக அவர்மீது கட்சி எடுத்த நடவடிக்கை என்ன?

03. புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடும் சுமந்திரன் ஸ்ரீலங்கா படையினரைக் கௌரவிக்கும் வகையில் ஓர்கிட் மலரைத் தனது கோட்டில் சூடிக் கொண்டு பாராளுமன்றம் சென்றாரே. இந்நடவடிக்கையானது கட்சியின் நிலைப்பாட்டின் வெளிப்பாடா?

04. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட வடக்கு மாகாணசபையின் சகல உறுப்பினர்களும் இணைந்து ஏகமனதாக இறுதியுத்தத்தில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்று தீர்மானம் நிறைவேற்றினர். இதை விமர்சிக்கும் உரிமையை இவருக்கு யார் கொடுத்தது? இப்படியான வீட்டோ அதிகாரம் நிச்சயமாக மாவைக்கு இல்லைதான். சுமந்திரனைத் தவிர வேறு யாருக்கு இவ்வாறான அதிகாரம் வழங்கப்-பட்டுள்ளது?

05. வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றம் இனச்சுத்திகரிப்பு என்ற தீர்மானத்தை கட்சி உத்தியோக பூர்வமாக எடுத்துள்ளதா? அவ்வாறில்லையாயின் இப்படியெல்லாம் உளற அவரால் எப்படி முடிகிறது? சமாதானம் நிலவிய கால கட்டத்தில் மீண்டும் மெல்லத் தளிர்த்த தமிழ் - முஸ்லீம் உறவுகளைச் சீர்குலைக்கும் முகமாக வரலாறு தெரியாத வகையில் உரையாற்றியமை தொடர்பாக கட்சி எடுத்த நடவடிக்கை என்ன? முஸ்லிகளின் வெளியேற்றம் நியாயப்படுத்த முடியாதது தான். எனினும் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களால் இது இருதரப்பு விவகாரம் என்ற நிலையை அடைந்தது. வீரமுனைப் பிள்ளையார் ஆலயம், திராய்க்கேணி, அட்டப்பள்ளம் முதலான இடங்களில் கொத்துக் கொத்தாக தமிழர்கள் குறிப்பாக ஆண்கள் முஸ்லிம்களால் படுகொலை செய்யப்பட்டமை தமிழரின் விகிதாசாரத்தை குறிப்பாக இனப் பெருக்கத்தைப் பாதிக்கும் செயல்கள் என்ற விடயத்தை தேசியப்பட்டியல் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட போது அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த மாவை அறியாரா? நிலைமை இவ்வாறிருக்க ஒரு தலைப்பட்டமாக இனச்சுத்திகரிப்பு என்ற பதத்தை ஏன் சுமந்திரன் பயன்படுத்தனார்.

06. கட்சியிடம் ரிக்கற் கேட்டு விண்ணப்பிக்கவில்லை முதல்வர். கூட்டமைப்பிலுள்ள சகல கட்சிகளும் ஒரு மனதாக கையொப்பமிட்டு வலிந்து கேட்டதால்தான் போட்டியிடச் சம்மதித்தவர். உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த ஒருவரை அவமானப்படுத்தும் வகையில் தன்னைத்தானே பி.எம்.டபிள்யூ. கார் என்று சொல்லிக் கொள்ளும் சட்டத்தரணி சுமந்திரன் வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்ய கட்சியின் எந்தப் பிரிவு அனுமதித்தது?

07. சுமந்திரன் சொன்னது போன்று முரண்பாடான ஒரு கருத்தை அனந்தி சொல்லியிருந்தால் அவர் மீது கட்சி எத்தனை வாரம் அல்லது நாள், மணித்தியாலம், நிமிடம், செக்கனில் நடவடிக்கை எடுத்திருக்கும்?

நடக்கப்போவது எதுவுமே இல்லை. பிறகெதற்கு பந்தா பேச்சு? மாவையை எவருமே கணக்கில் எடுப்பதில்லை. எடுத்திருந்தால் வல்வை நகரசபை, வலி கிழக்கு, வலி தென்மேற்கு காரைதீவு முதலான உள்ளூராட்சிச் சபைகளில் குழப்பம் நிகழாதிருந்திருக்கும். இவரது எச்சரிக்கை கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகத்தையே கட்டுப்படுத்தவில்லை, இந்நிலையில் சம்பந்தன் ஐயாவின் முழுமையான ஆசீர்வாதம் பெற்ற சுமந்திரனை கேள்வி கேட்கவோ ஏன் முறைத்துப் பாரக்கவோ முடியாது "என்ன என்னிடம் விளக்கம் கேட்கப் போகிறீரோ? என்று சுமந்திரன் கேட்டால்" இந்தப் பத்திரிகைகளுக்கு பகிடியும் தெரியாது வெற்றியும் தெரியாது" என்று தலையைச் சொறிந்து கொண்டு சொல்லும் நிலை தான் அவருக்கு ஏற்படும்.

இளைஞர் பேரவைக்கால மாவைக்கும், 50 வருடத்துக்கு மேல் கட்சியில் அங்கத்துவம் உள்ள பேராசிரியர் சிற்றம்பலத்துக்கும் கொடுக்கும் மதிப்பு என்ன, சுமந்திரனின் உயரம் என்ன என்பதைச் சகலரும் அறிவர்.

மாவையின் செய்தி வந்த அதே நாள் வேறொரு நாளிதழில் சம்பந்தன் ஐயாவின் செய்தி வெளிவந்தது. "நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் முதலமைச்சர் வெளியிட்ட சில கூற்றுக்கள் மற்றும் அவரின் நடவடிக்கைகள் சம்பந்தமாகச் சில கேள்விகள் எழுப்பப்பட்டது உண்மை. அது தொடர்பாக அவரிடம் நாங்கள் பேசவில்லை. பேச இருக்கிறோம். விரைவில் பேச்சு இடம்பெறும்" என்றே கூறினார். இதில் எந்த இடத்திலும் சுமந்திரனிடம் கட்சி விளக்கம் கோரும் என்று அவர் கூறவில்லை. முதலமைச்சரை நீக்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டதாக எவரும் கூறியிருந்தால் அது தவறு என்றும் அவர் குறிப்பிட்டார். சுமந்திரன் மீது கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோணேச்சரப் பெருமான் ஒரு போதும் சம்பந்தன் ஐயாவின் கனவில் வந்து சொல்லாமாட்டார். இப்போதெல்லாம் யாருக்கு தேசியப் பட்டியலில் எம்.பி பதவி என்பதைக் கூட கோணேச்சரப் பெருமான் கனவில் தான் காட்டுகிறார்.

என்ன செய்வது சுமந்திரனுக்கு வாக்களித்த யாழ்.கிளிநொச்சி மாவட்ட மக்கள் 58,043 பேரும் தங்கள் தலையை மோதுவதற்குப் பலமான சுவரொன்றைத் தேட வேண்டியது தான். சும்மாவா சொன்னார் யோகர்-சுவாமிகள் "யாழ்ப்பாணத்தாருக்கு காசியில் நான் கருமாதி செய்துவிட்டேன்" என்று.

---

## வினோதங்கள்

### பிரமாண்ட மர வீடு

ஒரு மரத்தின் மேல் அமைக்கப்பட்ட பெரிய வாழ்விடம் என்றால் அது இதுதான். மேல் அடுக்காக 10 தளங்களை கொண்டுள்ளது. 3000 சதுர மீற்றருக்கு மேல் இடவசதி இருக்கிறது. பார்க்க பிரமிக்க வைக்கும் இந்த பிரமாண்ட வீடு, உயிருள்ள 6 ஓக் மரங்களின் ஆதாரத்தில் அமைக்கப்-பட்டுள்ள இந்த வீடு முழுவதுமே மரபலகைகளாலும் சட்டங்களாலுமே அமைக்கப்-பட்டுள்ளது.



இப்படியும் நடக்கலாம்

### ஏற்பட்ட தாமதத்திற்காக விருந்தளித்த பணிப்பெண்

இந்தோனேசியாவில் உள்ள ஜாவா தீவிலிருந்து கடந்த சனிக்கிழமை அன்று Lion Air என்ற பயணிகள் விமானம் பாலி நாட்டிற்கு புறப்பட இருந்துள்ளது. ஆனால், விமானம் புறப்படுவதற்கு நீண்ட நேரம் தாமதமானதால், பயணிகள் பெரும் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

விமானம் புறப்பட்ட பின் ஒலிபெருக்கியில் பேசிய துணை விமானி ஒருவர் தாமதத்திற்கு வருந்துவதாக பயணிகளிடம் மன்னிப்பு கோரியதுடன் ஏற்பட்ட தாமதத்திற்காக பணிபுரியும் விதவை பணிப்பெண் ஒருவரை பயணிகளுக்கு இழப்பீடாக விருந்தளிக்க உள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

விமானம் புறப்பட்டதிலிருந்து அது சேரும் இடம் வரை 'விமானிகளின் அறையில் முனகல் சத்தம்' கேட்டுக்கொண்டு இருந்ததாக பயணிகள் குற்றம் சாட்டினர்.

### பறவை மோதியதால் ஏற்படவிருந்த விபத்து முறியடிப்பு

கனடாவின் CNRL என்ற நிறுவனத்தின் கட்டுமான பணியில் ஈடுப்பட்டு வந்த சுமார் 130 தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு போயிங் 737 - 300 ரக விமானத்தின் என்ஜின்களில் ஒன்றில் திடீரென பலத்த வெடி சத்தம் கேட்டுள்ளது. உள்ளே இருந்த ஊழியர் ஒருவர் விமானத்தின் என்ஜினில் இருந்து கரும்புகையும் நெருப்பும் வெளியாவதை கண்டு உடனடியாக விமான நிலைய அதிகாரிகளுக்கு தகவல் அளித்ததையடுத்து விமானத்தின் என்ஜின்களில் ஒன்று பழுதாகியிருப்பதும் அதில் பறவை மோதியிருப்பதையும் உணர்ந்த விமானிகள், உடனடியாக விமானத்தை தரையிறக்கியுள்ளனர்.

### மதம் மாறியதால் நிகழ்ந்த கொடுமை

பிரித்தானியாவில் வசிக்கும் 49 வயதான ஒருவர் கடந்த 1996ம் ஆண்டு இஸ்லாம் மதத்தில் இருந்து குடும்பத்துடன் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதையடுத்து, அவர் குடியிருந்து வரும் பகுதியில் அக்கம் பக்கத்தினர் இவரை வெறுப்புடனே பாவித்து வந்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இவர் குடும்பத்துடன் மதம் மாறியது தெய்வ நிந்தனை எனவும் குற்றம்சாட்டி வந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை இவரது வீட்டினருகே சில மர்ம நபர்களால் கூரிய ஆயுதங்களால் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலை நடத்தியவர்கள் குறித்து போதிய தகவல்கள் எதுவும் இல்லை என்றபோதும், வீட்டில் பதித்திருந்த கமெராவில் இந்த காட்சிகள் பதிவாகியுள்ளதாக தெரிய வருகின்றது. மதரீதியான வெறுப்பு காரணமாகவே இந்த தாக்குதல் நடந்திருக்கலாம் என தெரிவித்திருக்கும் காவல்துறை, இந்த தாக்குதலின் பின்னணியில் வேறு எவரும் உள்ளனரா என்பதையும் விசாரித்து வருவதாக கூறப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# குழப்பங்களின் போது ஒரு முஃமின்

## குடும்பத்தில் ஏற்படும் குழப்பமும் பரிகாரமும்

நபியின் அந்தரங்க செயலாளர் என அறியப்பட்ட "ஹுதைபா இப்னுல் யமான் (ரழி) அவர்களிடம் இரண்டாம் கலீ:.பா உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் குழப்பங்கள் பற்றி நபிகள் நாயகம் அவர்கள் கூறியது பற்றி அறிக்குமாறு கேட்டபோது "ஹுதைபா அவர்கள்: ஒரு மனிதருக்கு அவரது குடும்பத்தில் ஏற்படும் குழப்பம், அதற்கு தொழுகை, நோன்பு, தர்மம், நன்மை ஏவி, தீமையைத் தடுத்தல் ஆகிய காரியங்கள் பரிகாரமாக அமையும் என்றார்கள். (புகாரி)

**ஒதுங்கி வாழுதல்:**

குழப்பங்களில் இருந்து ஒரு மு:.மின் ஈடேற்றம் பெற இது இறுதிக்கட்ட வழிமுறையாகும். முஸ்லிம்கள் மத்தியில் பல குழுக்கள், இயக்கங்கள் தோற்றம் பெற்று அவை தலைமைத்துவம் இன்றி சிதறிக் காணப்படும்போது ஒரு மு:.மின் தன்னை பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய இறுதிக்கட்ட நடவடிக்கையாகும்.

ஒரு மனிதனது செல்வம் ஆட்டு மந்தையாக இருப்பது சிறந்ததாகும் என்றதொரு காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. குழப்பங்களில் இருந்து தனது மார்க்கத்தை பாதுகாத்துக்கொள்ள அவன் அவற்றுடன் மலையடிவாரங்களையும், மழை நீர் தொட்டிகளையும் தேடி ஒதுங்குவான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

**இப்படியும் ஒரு வழிமுறை**

குழப்பங்கள் ஏற்படும் அறிந்து கொள்ளுங்கள்! குழப்பங்கள் நடந்தே தீரும். அப்போது அமர்ந்திருப்பவர் நடப்பவரை விட சிறந்தவராவார். அதன் பக்கம் நடப்பவர் அதன் அளவில் சென்றுவிட்டவரை விட சிறந்தவராவார். அறிந்து கொள்ளுங்கள் குழப்பங்கள் இறங்கினால் அல்லது நிகழ்ந்தால் யாரிடம் ஒட்டகம் இருக்கின்றதோ அவர் அவரது ஒட்டகத்துடன் சேர்ந்து கொள்ளவும்.

யாரிடம் ஆட்டு மந்தைகள் இருக்கின்றதோ அவர் தனது ஆடுகளுடன் சேர்ந்து கொள்ளவும். யாரிடம் சொந்தமான காணிகள் இருக்கின்றதோ அவர் தனது காணியில் ஒதுங்கி வாழ்ந்து கொள்ளவும்.

தொடரும் .. ..

**– எம்.ஜே.எம். நிஷ்வான் –**

# சிறிய இறைவாக்கினர்கள் வரலாறு

தன் வாழ்நாள் முழுவதும் வடநாட்டில் இறைவாக்கு உரைத்த போதிலும். இறுதியில நிலைமைமோசமானதால் தன்னையே காப்பாற்றிக் கொள்ளத் தென்னாட்டிற்கு ஓடுகிறார். அங்கு இவருக்குச் சீடர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் இந்தப்புத்தகத்தை எழுதியிருக்கக்கூடும். அவரே தன் எழுத்தில் முத்திரையைப் பதித்துள்ளார். அதாவது யூதாவை ஆண்ட அரசர்களின் பெயர்களைத் தெளிவாகத் தந்துள்ளார். ஓசேயா இறைவாக்குரைத்துக் கொண்டிருந்தகாலத்தில் தென்னாட்டை நான்கு அரசர்கள் ஒருவர்பின் ஒருவராக ஆண்டனர். உசியா (Uzziah) (783-742) யோத்தாம் (Joatham) (742-735)ஆகாசு (Ahaz) (735-715), எசேக்கியா (u;ezekiah) (715-687) இவர்களின் ஆட்சிக் காலத்தில், 742-735 வரை போதித்திரு-க்கக்கூடும்.



3. வரலாற்றுப் பின்னணி

2-ஆம் எரொபவாம் (Jerobam) (786-746) என்ற வடநாட்டின்ஒரேயொரு அரசன் பெயரை மட்டும் ஓசேயா குறிப்பிட்டுள்ளார். இவ்வரசன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவிற்று. செல்வச் செழிப்பும் மிகுந்திருந்தது (2:9). ஆனால் அரசனுடைய இறப்பிற்குப் பிறகு நாடு அனைத்தையும் இழந்தது. நாட்டில் அமைதி இல்லை. பிற நாடுகளின் தாக்குதல்கள் அதிகரித்தன. உள்நாட்டு கலகமும் அவ்வப்போது நடைபெற்றது. பதவி ஆசைப்பிடித்து, பல அரசர்கள் கொல்லப்பட்டு ஆட்சி மாறிக்கொண்டே இருந்தது. இந்நிலையில் அசீரிய மன்னன் திக்ளத் பிளேசர் (Tighlath Pilezer)(744-727), சக்தி வாய்ந்தவன், இஸ்ரயேல் மீது படையெடுத்து நாட்டைதோற்கடித்தான். இவ்வாறு தொடர்ந்து செல்கின்றது வரலாறு. இங்கு கூறப்பட்டவர்களைத் தவிர இன்னும் எத்தனை எத்தனையோ இறைவாக்கினர்கள் காணப்படுகின்றனர்.

முற்றும் .. ..

www.bible.me

# பெண்கள் பார்க்கும் விதங்கள்



ஒரு ஆணின் பார்வைக்கு கூட பலவித அர்த்தங்களை கணித்துக்கூற இயலும். ஆனால் ஒரு பெண்ணின் பார்வைக்கு என்ன அர்த்தம் என்பதை பலமுறை யோசித்தும் பதில் கிடைக்காமல் இருப்பவர்கள் ஏராளம்.

உதாரணத்திற்கு, ஒரு பெண் ரோட்டில் நடந்துசென்றால் பல ஆண்கள் தங்களது பார்வைக்கணைகளை அவள் மீது தொடுப்பார்கள். இந்த பார்வைக்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டிய ஒன்று அது காமப்-பார்வைதான்.

இதே ஒரு பெண் பார்த்தால், எப்படி எடுத்துக்கொள்வது?

ஒரு ஆணைத் தலையிலிருந்து பாதம் வரை அவளால் எளிதாக அளந்துவிட முடிகிறது. ஆனால், ஆணிற்குக் குறுகிய பார்வை இருப்பதால் பெண்ணின் உடலில் மேலும், கீழும் அவனது பார்வை அலைவதை எளிதில் கண்டுபிடித்து விட முடியும்.

ஒரு பெண்ணின் முதல் பார்வையை புரிந்து கொள்ள முடியாத திறமையுடன் ஆண்கள் இருப்பதால், பெண்கள் சராசரி ஆணின் கவனத்தை ஈர்க்க 3 முறை பார்க்கிறார்கள். கண் இமையை கீழிறக்கி, அதே சமயம் புருவங்களை தூக்கி, மேலே பார்த்து உதடுகளை லேசாக பிரிப்பது பல நூற்றாண்டுகளாக பெண்கள் பயன்படுத்தி வரும் கவர்ச்சி பார்வையாக உள்ளது.

அதிகாரத் தோரணையுள்ளவர்கள் தலையை பின்னே சாய்த்து முக்கின் ஓரமாக சாய்த்து பார்பார்கள். தங்களது முக்கியத்துவம் உணரபடவில்லை என்று உணர்பவர்களும் இப்படி பார்க்கலாம். பேசும்போது யாராவது இப்படி செய்தால், நீங்கள் அவர் கூறிய செயலை சரியாக செய்யவில்லை. அதற்கு ஹஇன்னும் புதிய உத்தி தேவை என்று அர்த்தம். புருவத்தைக் கீழிறக்கி பார்பது, மற்றவரை அடக்கவும் முரட்டுத்தனத்தை வெளிபடுத்தவும் செய்யபடுகிறது.




மாணவன் : நீங்கள செய் யாத தப்புக்கு தண்டனை தருவீங்களா சார்?



*ஆசிரியர் : நிச்சயமாக இல்லை. ஏனடா?*

மாணவன் : நான் வீட்டுப் பாடம் செய்ய வில்லை சார்.

*நான் தினமும் ஏழு கி. மீ நடந்து சென்று படித்து வந்தேன்.*

அப்படீன்னா உங்களுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரமா சார்.

வைக்கோல் சாப்பிட்டா மூக்குக்கண்ணாடி போட வேண்டி வராது.

*சும்மா அளக்காதே!!*

உண்மையா தான். எந்த மாடாவது மூக்குக் கண்ணாடி போட்டு நீ பார்த்திருக்கிறியா!!

# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வாகனப் பயணத்தில் இனிய அனுபவம் உண்டாகும். நிர்வாகத்தின் சட்டதிட்டம் உணர்ந்து செயல்படவும்.

**ரிஷபம்** : எதிர்பார்த்த நன்மை கிடைக்க தாமதமாகலாம். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். மிதமான லாபம் கிடைக்கும்.

**மிதுனம்** : திட்டமிட்ட பணிகள் நிறைவேறும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வழக்கு விவகாரத்தில் சாதகமான முடிவு கிடைக்கும். விற்பனை சிறந்து லாபம் அதிகரிக்கும்.

**கடகம்** : செயல்களில் மனிதநேயமும், நேர்மையும் நிறைந்திருக்கும். இடையூறு நீங்கி வருமானம் உயரும். பணியாளர்-களுக்கு சலுகை கிடைக்கும்.

**சிம்மம்**: புதிய முயற்சிகளில் உழைப்புக்கேற்ப பலன் கிடைக்கும். வியாபார வளர்ச்சிக்கு புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**கன்னி** : பேச்சு, செயலில் நிதானம் வெளிப்படும். வீட்டுச் செலவில் சிக்கனத்-தைக் கடைபிடிப்பது நல்லது. வருமானம் சுமாராக இருக்கும். கடனுதவி கிடைக்கும்.

**துலாம்** : பொது வி'யங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். எதிரி இருந்த இடம் தெரியாமல் விலகுவர். வியாபாரத்தில் வளர்ச்சி படிப்படியாக உருவாகும்.

**விருச்சிகம்** : தாமதித்த பணிகளை ஆள்பலம், பணபலத்துடன் நிறைவேற்று-வீர்கள். பகைவர் உங்களின் வளர்ச்சி கண்டு வியப்பில் மூழ்குவர். சலுகை கிடைக்கும்.

**தனுசு** : நிதானமுடன் செயல்பட்டால் சிரமம் வராமல் தவிர்க்கலாம். குடும்பத்திற்கான செலவு அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் விழிப்புடன் இருக்கவும்.

**மகரம்** : திட்டமிட்ட பணி எளிதில் நிறைவேறும். மனதில் தைரியம் மேலோங்கும். உற்பத்தி, விற்பனை அதிகரித்து வருமானம் உயரும்.

**கும்பம்** : உடல் நலனில் அக்கறை செலுத்து-வீர்கள். ஆன்மிக சிந்தனை மிகுந்திருக்கும். கடனாக கொடுத்த பணம் திரும்பபும். உழைப்புக்கேற்ப வருமானம் உண்டாகும்.

**மீனம்** : அன்புக்கு உரியவரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். கொடுக்கல், வாங்கலில் நிதானத்தை பின்பற்றவும். எதிரிகளிடம் இருந்து விலகி இருக்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 04

01. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
1. குருவிச்சை 2. இறுங்கு 3. அரசு

02. மாடுகளின் வால், முதுகுகளில் ஒட்டியபடி பரம்பலடையும் தாவரவித்து எது?
1. குண்டுமணி 2. நாயுண்ணி 3. நாயுருவி

03. நிமலனின் வீட்டிற்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான தூரம் 1500மீ ஆகும். இத்தூரத்தில் 2/5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை சைக்கிளிலும் சென்றான். எனில் அவன் நடந்து, சைக்கிளில் சென்ற தூரங்கள் முறையே?
1. 300மீ, 900மீ 2. 600மீ, 900மீ 3. 900மீ, 600மீ

04. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்

05. இரவில் மலரும் பூக்களினது நறுமணம் அதிகமாக இருப்பதற்கான காரணம் யாது?
1. நிலவொளி அதிகமாக இருப்பதால்
2. வண்டுகளைக் கவர்வதற்கு 3. தாம் மலருவதைத் தெரிவிப்பதற்கு

06. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை அல்லாதது எது?
1. ஈரப்பலா 2. மரவள்ளி 3. அகத்தி

07. சிறிய தாவரமொன்றை சிரட்டையினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தால் தாவரத்தின் இலை வெளிறி மஞ்சள் நிறமடையும். இதற்கு காரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. பச்சையம் உற்பத்தி செய்யப்படாமை
2. மஞ்சயம் உற்பத்தி செய்யப்படுதல் 3. சூரிய ஒளி கிடைக்காமை

08. மின்சாரத்தைச் சிக்கனமாகப்பாவிக்க பயன்படுத்தக்கூடிய மின்குமிழ்
1. மெக்குரி மின்குமிழ் 2. புளோர் ஒளிர் மின்குமிழ்
3. நிப்போன் மின்குமிழ்

09. பொதி செய்யப்பட்டுள்ள உணவுப் பொதியினுள் சிலிக்கா ஜெல் வைப்பதன் நோக்கம்
1. நிறம் மாறாது 2. சுவைக்கு
3. பொதியிலுள்ள வளியை உறிஞ்சியெடுக்க

10. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் குமார் முன்னாலிருந்து ஐந்தாவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1. 7 2. 8 3. 6

11. தேவியின் ஒரே மகளாகிய நிஷா, அக்காவுடன் கோயிலுக்கு சென்றமையால், பாடசாலைக்கு வரவில்லை எனக் கூறினாள். இது உண்மையாக இருப்பதற்கான காரணம்?
1. நிஷாவுக்கு கோயிலுக்கு செல்ல விருப்பம்
2. நிஷாவுக்கு பாடசாலை செல்ல விருப்பமில்லை
3. நிஷாவின் பெரியம்மாவின் மகளும் ஒரே வீட்டில் வசித்தாள்.

12. “அற்பமான பொருளானது சிலவேளை பயன் தரும்” என்ற கருத்தை தரும் பழமொழி எது?
1. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
2. விளையும் பயிரை முளையில் தெரியும்
3. சிறு துரும்பும் பற்குத்த உதவும்

13. கீழ் உள்ள தாவரங்களில் தண்டில் காய்க்கும் தாவரம் எது?
1. கொய்யா 2. விளிம்பி 3. வேம்பு

14. இலங்கையின் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்யும் இடம்?
1. ஜனகலாகேத்திரம் 2. சலுசல 3. ஒசுசல

15. இராட்சதப் புல் என அழைக்கப்படும் தாவரம் எது?
1. கோரை 2. கடுபுல் 3. மூங்கில்

கீழுள்ள தகவல்களைக் கொண்டு 16, 17ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | | |
|---|---|---|---|
| சீனி 250கி | - ரூபா 28 | துணி 1மீ | - ரூபா 80 |
| கோதுமை மா 500 கி | - ரூபா 32 | வர்ண நாடா 1மீ | - ரூபா 108 |

16. 1.25கிலோ கிராம் சீனியினதும், 750 சென்ரிமீற்றர் துணியினதும் மொத்த விலை யாது?
1. ரூபா 312 2. ரூபா 740 3. ரூபா 200

17. 50செ.மீ நீளமான துணிக்கு 1.5மீ வர்ண நாடா தேவைப்படின், 3.25மீ துணிக்குத் தேவையான வர்ண நாடாவை வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?
1. 9.75 2. 1053 3. 526.50



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு






சிறுவர்களுக்கான குட்டிக் கதை

### சேவலுக்குக் கிட்டாத அதிஷ்டம்

அது ஒரு அழகிய பனிக் காலம். சேவல் ஒன்று வழக்கம் போல் காலையில் எழுந்து அதற்கான உணவைத் தேட தன் நண்பர்களுடன் கிளம்பியது. அந்த சேவல் ஒரு குப்பைக் கிடங்கை கண்டது.
அந்தக் குப்பைக் கிடங்கில் ஏதாவது உணவு கிடைக்குமா என்ற எண்ணத்[illegible] ஆரம்பித்தது. அப்போது [illegible] சேவலுக்கு விலை மதிப்பில்[illegible] இரத்தினக்கல் ஒன்று கிடைத்தது[illegible] அந்த கல்லை சேவல் திருட்[illegible] திருப்பிப் போட்டது. அதைக் க[illegible] மற்றொரு சேவல் வருத்தத்து[illegible] இந்தக் கல் நமக்குக் கிடை[illegible] என்ன பயன்? ஒரு இரத்[illegible] வியாபாரியின் கைய[illegible] கிடைத்திருந்தால் அவனுக்கு இ[illegible] மதிப்பு தெரியும். நமக்கோ இ[illegible] கல்லை விட சிறிது தானியம் கிடைத்திருந்தால் அதுவே விலை மதிப்பில்லாத பொருளாக இருந்திருக்கும். இது நமக்கு உதவாது. வா வேறெங்கேயும் சென்று உணவு தேடுவோம் என கூறியவாறு வேறிடம் சென்றன அவை உணவு தேட.




எமக்குத் தேவையானதைத் தவிர்த்து
எவ்வளவு விலை மதிப்பில்லா
பொருள் கிட்டினும்,
அது பிரியோசனம் அற்றதே

### சிந்திக்க .. ..

**வெற்றியை விட தோல்விக்கு பலம் அதிகம்**
**வெற்றி சிரித்து மகிழ வைக்கும்:**
**தோல்வி சிந்தித்து வாழ வைக்கும்.**

மலைமுரசு



[illegible]டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி கீழ்வரும் மலைமுரசு [illegible]லகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
[illegible]ல்லை : 10 வயதான மாணவர்கள் மாத்திரம்
[illegible]ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

### எனது கிளி

*ரீ.சஹானா*
*தரம் - 03*

என்னுடைய செல்லப் பிராணி கிளியாகும். எனது கிளிக்கு நான் பிரபா என பெயரிட்டுள்ளேன். அது என்னுடன் கதைக்கும். காலையில் எனக்கு வணக்கம் சொல்லும். நான் கொடுக்கும் அனைத்தையும் சாப்பிடும். அப்பிள் பழத்தை விரும்பி உண்ணும். எனது அக்காவும் நானும் சேர்ந்து அதை பராமரிக்கின்றோம். ஒவ்வொரு நாளும் [illegible] பிரபா [illegible]



சி.பிரபாளினி, தரம் [illegible]
கேணியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு




**இன்றைய** உலக ஒழுங்கின் சமகால நிலவரத்தில், நவம்பர் 13 அன்று பிரான்ஸ் மீதான தீவிரவாத தாக்குதல் பற்றித்தான் அனைத்து ஊடகங்களும் செய்திகளை வெளியிட்ட வண்ணமுள்ளன. 129 க்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டும், 350 பேருக்கு மேல் காயப்பட்டும் மேலும்பல இழப்புகளுடனும் அந்த சம்பவம் போய்க் கொண்டு இருக்கிறது. எங்கு கொல்லப்பட்டாலும் அது மனித உயிர்தான். மனித உயிரின் மதிப்பு அல்லது இழப்பின் தாக்கம் என்பதை மிகவும் நன்றாகவே அறிந்த தமிழ் இனம் நாம். ஆகவே அநியாயமாகக் கொல்லப்பட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஒன்று- காரியம் ஒன்று.

சரி... இதனை இங்கே நான் சொல்வதால், அமெரிக்காவிற்கும் இதற்கும் என்ன தொடர்பு? சத்தியமா எனக்குத் தெரியாது. ஆனால் அமெரிக்காவினதும், பிரான்ஸ் நாட்டினதும் கொடிகளில் உள்ள மூன்று நிறங்களும் ஒரே மாதிரியானவை. குணங்களும் கிட்டதட்ட ஒன்று. ஆனால் வடிவங்கள் மட்டும் வேறாக இருக்கிறது என்பது மட்டும் சின்ன வித்தியாசம். அதனை விட (Statue Of Liberty) சுதந்திர தேவி சிலையை 1886 இல் அமெரிக்காவிற்குப் பரிசளித்ததும் பிரான்ஸ் தான். இதனையும் தாண்டி அமெரிக்காவிற்கும் பிரான்ஸ் இற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் இன்று நேற்றல்ல பன்னெடுங்காலமாக பல நூற்றாண்டுகள் கடந்து தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இதன் ஆரம்பங்கள் பற்றி முன்னைய அத்தியாயங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால் எங்கெல்லாமோ மனித உயிர்கள் கொல்லப்பட்டபொழுது துடித்து எழாத உலகம், பிரான்ஸ் என்றதுமே (அமேரிக்கா உட்பட) திடுக்கிட்டு எழுந்ததது ஏன்? மனித அழிவு காரணமாக இருந்தாலும், முதல் காரணம் - UNSC veto power . இதனைத் தவிர வேறெதுவும் சொல்ல முடியாது.

இன்றைய உலகை நிர்ணயிக்க கூடிய ஆகக் கூடிய சக்தி மையங்கள் ஐந்தில் பிரான்ஸ் கையிலும் ஒன்று இருக்கிறது. அந்த அதிகாரத்திற்காகத்தானும் உலகம் அவர்களுக்கு அஞ்சலிகளையும் இரங்கல்களையும் சொல்லியே ஆகவேண்டும். ஏன்? நம்ம நாட்டில தெற்கில் இருந்து கூட ஒரு ஓநாய் ஊளையிடுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

சரி அவற்றை பற்றி ஆராய தொடங்கினால் திசைமாறி நாம் போகவேண்டி வரும். அவை நிற்க.. நாம் மீண்டும் பனிப்போரின் முக்கிய சம்பவம் ஒன்றிற்குள் நுழையலாம். அட... இங்க பாருங்களேன்...! அந்த பனிப்போரின் முக்கிய சம்பவத்திட்குள் பிரான்ஸும் வந்து தொலைத்து இருக்கிறது. பிரான்ஸும் ஒரு அங்கம். இந்த சம்பவத்திற்கு.

எமது தாயக நிலத்தில், தமிழரின் பூர்வீக நிலங்களை வேற்று இனத்தவர்கள் கூறு போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது காலங்காலமாக நெடுங்காலமா நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதுவே தமிழர்கள் மனங்களில் இலங்கை குடிமகன் என்கிற மனநிலையில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. போர் மூண்டதுக்கு இதுவும் ஒரு காரணம். இன்றும் பலர் மனங்களில் ஆழ உச்சரிக்கப்படும் வாக்கு "எமது நிலம் எமக்கு வேண்டும்" ஆக எமது நிலத்தை மாற்றான் ஆள்வது எவ்வளவு பெரிய மனத்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் அனுபவித்தே இருக்கிறோம் இல்லையா?

2ம் உலக யுத்தத்தில் ஜெர்மன் எப்படியும் இருந்திருக்கலாம். அது ஒரு யுத்தம். தீர்வுக்குள் கொண்டுவரப்பட்ட யுத்தம். ஆனால் அதற்குப் பிறகு அந்த ஜெர்மன் நாட்டை துண்டாடி, ஆக்கிரமித்து கொள்ளை இட்டதில் எந்த நியாயமும் இருக்காது. முன்னர் இருந்தது ஒரு ஹிட்லர். பின்னர் அதனை ஆண்டது நான்கு ஹிட்லர் முகங்கள். (சோவியத் ஒன்றியம், அமேரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ்) இப்படி ஜெர்மன் நாட்டை ஆக்கிரமித்ததில் இருந்து ஒன்று மட்டும் புரிகிறது, உலகம் ஜெர்மன் தேசத்துக்கு மேல் எவ்வளவு பயம் கொண்டிருந்தது? மட்டுமல்லாமல் அந்த ஜெர்மன் தேசத்தை அப்படியே விட்டால், ஹிட்லர் இல்லாவிட்டாலும் அவர்களின் மனித மூளைகள் மேலிருந்த பயம்தான்.

# நிகழ்வுகள்

## கௌரவிப்பு நிகழ்வு

## தேசிய மீலாத்துன் நபி விழாவில் கிராத் ஓதும் போட்டி

முள்ளிப்பொத்தானை நிருபர்

தேசிய மீலாத்துன் நபி விழா கிராத் ஓதும் போட்டியில் கிண்ணியா காக்காமுனை தாருல் உலூம் மகா வித்தியாலத்தில் கல்வி கற்கும் ஆறாம் தர மாணவன் முஹம்மது நஸிர் முஹம்மது ஜம்சித் அகில இலங்கையில் முதலிடம் இவரை பாடசாலை அதிபர் கே எம் எம் ஹனிபா, ஆசிரியர்கள் பெற்றார் மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கம் கௌரவிப்பதை படத்தில் காணலாம்



## சிறப்பு கவியரங்கு

### நீங்களும் எழுதலாம் நிகழ்வு - 21.10.2015

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் சிறப்பு நிகழ்வான கவியரங்கும் பாராட்டு நிகழ்வும் 21.11.2015 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு திருகோணமலை யேசுவிட் கலாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் எழுத்தாளர் சூசை எட்வட் பாராட்டப் படவுள்ளதோடு நினைவுச் சின்னமும் வழங்கப்படவுள்ளது. "ஆதலினால் தமிழ் மேல் காதல் கொள்வீர்" என்னும் தலைப்பில் கவியரங்கும் மறைந்த சோபித தேரர் பற்றிய ஓர் பார்வை என்னும் பொருளில் விமர்சகர் எம்.எஸ.எம். நியாஸின் உரையில் இடம்பெறவுள்ளது.

கவிஞர் செ.ஞானராசா தலைமையில் நடைபெறவுள்ள கவியரங்கில் நிலாவெளியூர் கெஜதர்மா, சந்திரகலா, மு.யாழவன், சிவரமணி, வி.ஆர்த்திகா, ஆர்.எப்.கியாஸா, உமாராஜன் பிரதீபா, எஸ்தர் விஜித் நந்தகுமார், ரி.லலித கோபன், வே.சசிகலா, தர்சினி ஆகியோர் பங்குபற்ற உள்ளதுடன் கலைஞர்கள் பலரும் பங்குபெற உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற சூரசம்கார நிகழ்வு

ஆறு நாட்கள் அனுஷ்டிக்கப்படும் கந்த சஷ்டி விரதமானது கடந்த 12.11 அன்று ஆரம்பமாகியது. இவ்விரதமானது முருகனுக்காக பிடிக்கப்படுவது ஆகும்.

இக்கந்தசஷ்டி விரதத்தின் ஆறாம் நாள் நிகழ்வான முருகப்பெருமான் சூரனை வதம் செய்த சூரசங்கார நிகழ்வு 17.11.2015 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. பின் மறுநாள் திருக்கல்யாணமும் இடம்பெற்றது.

திருகோணமலையில் அமையப்பெற்றுள்ள முருகப் பெருமானின் ஒரு கோவிலான வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற சூரசங்கார நிகழ்வினை படத்தில் காணலாம்.



## சித்திர போட்டியில் முள்ளிப்பொத்தானை 2ம் இடம்

முள்ளிப்பொத்தானை நிருபர்

கிண்ணியா வலய பாடசாலைகளுக்கான சித்திரப் போட்டியில் முள்ளிப்பொத்தானை தாருஸ்ஸலாம் 11தர மாணவி ஏ.என்.நிலுபா வலயத்தில் இரண்டாவது இடத்தில் தெரிவானதை பாராட்டி வெற்றி பெற்ற மாணவிக்கு பாடசாலை சித்திரப் பாட ஆசிரியர் எம்.பாத்திமா பதக்கம் அணிவிப்ப-தையும் அதிபர் கோட்டக்-கல்வி அதிகாரி A.W.M சுபைர் பிரதம அதிதியாக கலந்து கொண்டதற்க்கு அமைய 7ஆம் தர மாணவ மாணவிகளினால் கையெழுத்து புத்தகம் ஒன்று கோட்டக் கல்வி அதிகாரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்-களின.ால் வெளியீடப்பட்டதை படத்தில் காணலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்படுகொலை...

குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல் போனவர்கள் குறித்து ஆராய்வதற்காக சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை கடற்படைத்தளத்தில் வதை முகாம்கள் இருந்ததை உறுதிப்படுத்தியுள்ளது.

2010க்குப் பிறகும் ஈழத்தமிழர்கள் அங்கு தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டதை நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன எனவும் அந்த அறிக்கையில் சுட்டிகாட்டப் - பட்டுள்ளது.

இதனிடையே, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் வதை முகாம்களை ஐக்கிய நாடுகள் குழு உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழ் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறு இந்திய அரசாங்கம் தற்போதாவது அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலிறுத்தியுள்ளார்.

தமிழக அரசும் இது குறித்து இந்திய பிரதமருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், திருகோணமலை வதை முகாம் குறித்து தற்போது வெளியாகியுள்ள தகவல் குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் அன்புமணி ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், இது தொடர்பில், வெளிவிவகார அமைச்சு நேற்று கருத்து வெளியிட்டிருந்தது.

இரகசிய தடுப்பு முகாம்களை அரசாங்கம் ஒருபோதும் ஊக்குவித்தது கிடையாது.

அந்தவகையில் திருகோணமலை உள்ளிட்ட ஏனைய இரகசிய தடுப்பு முகாம்கள் தொடர்பில் அரசாங்கம் முழுமையான விசாரணை நடத்த தயார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படை முகாமில் ஐ.நா. சபையின் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு சோதனை மேற்கொண்ட சம்பவம் குறித்து கடற் படையினர் கடும் அதிருப்தி - யுற்றுள்ளனர் என சிங்கள ஊடகச் செய்தியொன்று தெரிவிக்கின்றத

கடற்படையினரை மேற்கோள்காட்டி இச்செய்தியைச் சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

## வதைமுகாம்...

அருகில் அமைத்துள்ள கோடாஸ் கேம் என்ற இந்த சித்திரவதை முகாம் தொடர்பாக உண்மை மற்றும் நீதி அமைப்பு என்ற சர்வதேச அமைப்பு 2015ம் ஆண்டு ஜுன் மாதம் தகவல் வெளியிட்டிருந்தது.

இதனடிப்படையில்,2010ம் ஆண்டு வரை குறித்த முகாமின் கட்டளை அதிகாரியாக லெப்டினட் கொமாண்டர் கே.சி.வெலகெதர என்பவர் பணியாற்றி-யுள்ளார்.

இதன் பின்னர், லெப்டினட் கொமாண்டார் ரணசிங்க என்பவர் முகாமுக்கு பொறுப்பாக பணியாற்றி-யுள்ளார்.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் காணாமல் போனோர் தொடர்பான குழு வெளியிட்ட தகவலுக்கு அமைவான இரகசிய முகாம்கள் எதுவும் இல்லை என அரசாங்கம் கூறியுள்ளது என அச் செய்தி தெரிவிக்கின்றது.

## 27வது இளைஞர்...

போட்டியில் திருகோணமலை மாவட்ட அணியினர் 3 ம் இடத்தையும், ஆண்களுக்கான கூடைப்பந்து போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியினர் 1 ம் இடத்தையும் தடகள போட்டிகளிலே 20 வயதுக்கு உட்ப்பட்ட ஆண்களுக்கான 110 மீட்டர் தடைதாண்டல் போட்டியிலே திருகோணமலை மாவட்டத்தை சார்ந்த கே.டயந்தன் 2 ம் இடத்தையும் 20 வயதுக்கு மேற்ப்பட்ட ஆண்களுக்கான 110 மீட்டர் தடைதாண்டல் போட்டியிலே திருகோணமலை மாவட்டத்தை சார்ந்த ஆர். வோஸ்கிம் இகார்ன் 1 ம் இடத்தையும் 20 வயதுக்கு மேற்ப்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியிலே அம்பாறை மாவட்டத்தை சார்ந்த எம்.ஜ.மிப்றன் 3 ம் இடத்தையும் பெற்று பதக்கங்களை வென்றனர்.

## கிழக்கின் தமிழ்...

கலந்துகொண்டு உரையாற்றிய அவர், கிழக்கு மாகாணத்திற்குத் தலைமை தாங்குகின்ற அரசியல்வாதி மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொள்கின்றார். அதனால் இந்த மாகாணத்திற்கு இப்பொழுது ஒரு நோய் பீடித்திருக்கிறது.

அதனால் அந்த மாகாணம் சீரழிந்து கொண்டிருக்கின்றது. கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி முதலமைச்சரின் முன்னால் ஒரு நிராயுதபாணி. கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஒரு தலையாட்டி பொம்மை.

தற்போது அராஜக ஆட்சியை நடத்திக் கொண்டு கோலோச்சுகின்ற கிழக்கு மாகாணத் தலைமைக்கு சில அதிகாரிகள் சாமரம் வீசுகின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் எல்லோரும் சேர்ந்து தற்போதைய கிழக்கு மாகாணத் தலைமைக்கு புத்தி சொல்லி சீர் கெட்டுக் கிடக்கின்ற மாகாண நிருவாகத்தைச் சீர் செய்ய வேண்டும் என்றார்.

## பாதீட்டின் தொடர்ச்சி - 3

பிணை வழங்குவதற்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

- பெரும் வணிக நிறுவனங்களின் வரியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- மிளகாய், செத்தல் மிளகாய், கிழங்கு உள்ளிட்ட விவசாயப் பொருட்களின் ஊடாக நாட்டை தன்னிறைவு வடிவத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

- விவசாய உபகரணங்களை இறக்குமதி செய்யும்போது, வரி நிவாரணங்கள் வழங்கப்படும்.

- புதிய விவசாயக் கொள்கையை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் கவனம் செலுத்தியுள்ளனர்.

- நிகர, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு கடன் வழங்குவதற்காக இணைந்த கூட்டுத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

- சிறு பொருளாதாரத் தோட்டங்கள் மொனராகலை, புத்தளம், யாழ்ப்பாணம், வன்னி உட்பட பல இடங்களில் முன்னெடுக்கப்படும்.

- சகல நிதி நிறுவனங்களும் பரிந்துரைக்கப்பட்ட அதிகார சபையின் கீழ் வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்துகொள்ள வேண்டும்.

## நாம் அரசியல்....

தெரிவிக்கையில்,

போர் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துள்ள போதும் எமது மக்கள் இன்றும் நிவாரண உதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையிலேயே இருக்கின்றனர். 2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதிக்கு முன்னர் போரால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் உதவிகளை எதிர்பார்த்திருந்தது சரியானதே.

அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கம் எமது போராட்டத்திற்கு பின்புலமாக இருந்த மக்கள் பலம் வாய்ந்த சக்தியாக எழுச்சி பெறுவதை விரும்பவில்லை. பொருளாதார ரீதியாக நாம் எழுச்சி பெறுவதை அந்த அரசாங்கம் விரும்பவில்லை. அவ்வாறான கொடூரமான அரசாங்கம் இருந்தது. அது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் ஜனவரி 8ம் திகதிக்கு பின் ஒரு புதுக்கருத்தை உலகம் கூறுகிறது. ஏதோ நல்லாட்சியாம். ஜனநாயகம் மலர்ந்து விட்டதாம். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பம் என கூறுகிறார்கள். நல்லிணக்கம் ஏற்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் என்றால் தமது போரால், தமது இராணுவ முயற்சியால், தமது இனவழிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முதல் பொருளாதார, சமூக உதவிகளை செய்திருக்க வேண்டும்.

போர் முடிவடைந்து 6வது வருடம், நல்லாட்சி தொடங்கி 11 மாதம் முடிந்தும் கடந்த இனவழிப்பு செய்த அரசாங்கம் இருந்த போது எதிர்நோக்கிய அதே பிரச்சினையைத் தான் இந்த போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் எதிர்நோக்குகிறார்கள்.

கடந்த தேர்தலில் நாம் தோல்வியடைந்தோம். ஊடகங்கள் எமக்கு உரிய இடத்தை கொடுக்க- வில்லை. மக்கள் ஒரு குழப்பமான நிலையில் இருந்தார்கள். 2016ம் ஆண்டு எமக்கு தீர்வு கிடைக்கும் என கூறப்பட்டது. எமது உறவுகள் நிபந்தனையற்ற வகையில் விடுதலை செய்யப்படுவார்கள் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டது. எங்களுடைய தலைவர்களால் இந்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டது.

எங்களுடைய தமிழ் தலைவர்கள் என்று சொல்லக் கூடியவர்களாலே வழங்கப்பட்ட அந்த வாக்குறுதிகளுக்கு மத்தியில் அந்த தேர்தல் நடைபெற்றது. ஆனால் மக்கள் திரும்பவும் நம்பி தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து- ள்ளார்கள். இன்றைக்கு நீங்கள் படுகின்ற கஸ்டத்திற்கு பதில் சொல்வது யார்?

நாங்கள் குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை சரியாக புரிந்து கொள்ள வேண்டும். தொடர்ந்தும் நாங்கள் ஏமாற்றுப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. எம்மைப் பொறுத்தவரை எமது இனம் எதிர்காலத்தில் வளர்ச்சியடைவதற்கு எமக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு சொத்து எங்களுடைய மக்கள்.

ஈழத்தில் வாழ்கின்ற மக்களுக்கு சரிசமமாக புலம்பெயர் தேசங்களில் எமது உறவுகள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடன் எமது மக்களுக்கு நேரடியான உதவிகளை செய்வதற்கு நாங்கள் ஒரு புரிந்துணர்வுக்கு வருவோமாக இருந்தால் நிச்சயமாக எமது மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். குறைந்த பட்சம் குறிப்பிடத்தக்க நிதிகளை பெறக் கூடிய திட்டங்களை வகுத்தால் அதனை செய்ய முடியும்.

ஆனால் இந்த திட்டங்களைப் போட வேண்டிய பொறுப்பு எமது தமிழ் அரசியல் தலைமைகளிடம் தான் இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக் கூடிய அந்த தமிழ் அரசியல் தலைமைகள் இது சம்பந்தமாக எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுப்பதாக தெரியவில்லை.

## அனல்மின் நிலை...

தெரிவித்துள்ளார்.

தனது காணி தனது மனைவி ரஞ்சித மலரின் பெயரில் இருப்பதாகவும் 1983 ஆம் ஆண்டிலிருந்து அக்காணி யிலேயே வசித்ததாகவும் 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் காரணமாக தாங்கள் சொந்த நிலங்க- ளிலிருந்து வெளியேறி நலன்புரி நிலையங்களில் வசித்து வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணியைக் கையளிக்குமாறு விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில் அக்காணிக்குப் பதிலாக வேறு காணிகள் எதிர்காலத்தில் ஒதுக்கித் தரப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இக்காணியையும் பறித்துக்கொண்டு மாற்றுக் காணியையும் ஒதுக்க நேரமும் கேட்பது எவ்வகையில் நியாயமானது எனக் கேள்வி எழுப்பிய அவர் எக்காரணம் கொண்டும் காணியை விட்டு அகலப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

தமது தேர்தலுக்காக காசு சேர்க்கவில்லை, தேர்தலின் போது தமக்காக செயற்படவில்லை என ஒரு வயது போன, அனுபவம் பெற்ற, ஒரு நேர்மையான மனிதராக இருக்கக் கூடிய வடமாகாண முதலமைச்சரை குற்றம் சாட்டி அவரை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என கோரும் வேலையைத்தான் தமிழ் பிரதிநிதிகள் செய்கிறார்கள்.

ஆகவே எம்மைப் பொறுத்தவரை இன்றைக்காவது அந்த உண்மைகளை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். 2016ம் ஆண்டுக்குள் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வு தேர்தலில் கூறியபடி கிடைக்கப் போவதில்லை.

தமிழ் அரசியல் கைதிகள் எவ்வாறு திட்டமிட்ட வகையில் ஏமாற்றப்பட்டார்களோ அதேபோல அரசியல் ரீதியாகவும் நாங்கள் ஏமாற்றப்பட போகிறோம்.

கொழும்பு மேல்மட்டத்தைப் பொறுத்தவரை உண்மையான பிரச்சனைகளை விளங்கிக் கொள்ளாமல், உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யாமல், தமது சொந்த மக்களுக்கு உதவாமல் தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை கொண்டு போவதற்கு துணை போகக் கூடியவர்கள் தான் அவர்களுக்கு தேவை.

அவர்களை கொண்டு வருவதற்கு ஏதாவது செய்து அவர்களை கொண்டு வந்துள்ளனர். எங்களுடைய சொந்த விரும்பின் படியே, தமிழ் மக்களின் விருப்பத்துடனேயே அதாவது எங்களது அழிவை உலகத்திற்கு காட்டுவதற்காக துணை போபவர்களாக எங்களுடைய தலைவர்கள் இருக்கிறார்கள்.

இதை எமது மக்கள் காலப்போக்கில் புரிந்து கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. காலப்போக்கில் புரிந்து கொள்வார்கள் என நாங்கள் இருக்க முடியாது. ஏனெனில் நாங்கள் புரிந்து கொள்ளும் போது எங்களுடைய இனத்தினுடைய, தேசத்தினுடைய அத்திவாரமே இல்லாமல் போய்விடும். எமது இனம் மீட்கமுடியாத அளவு அழிக்கப்பட்டிருக்கும்.

அந்த ஒரே ஒரு காரணத்திற்காக தான் நாம் தேர்தலில் தொடர்ச்சியாக தோல்வியடைந்த போதும் எம்மால் முடிந்ததை செய்கின்றோம். இந்த உண்மையை புலம்பெயர் தேசத்தில் உள்ள எமது உறவுகள் புரிந்து கொண்டுள்ளதால் தான் அவர்கள் எம்முடாக எமது மக்களுக்கு உதவிகளை செய்து வருகிறார்கள்.

எம்மைப் பொறுத்தவரை அரசியலுக்கு அப்பால் எமக்கு இந்த தேசம் மீது பற்று இருக்கிறது. அது ஒன்று தான் எங்களுக்கும் உங்களுக்கும் இருக்கக் கூடிய ஒரே ஒரு உறவு. அந்த தேசத்தின் பற்று தான் எங்களுக்குடைய உறவு. தேசத்தின் முதுகெலும்பு எங்களது மக்கள். எமது மக்கள் இல்லாமல் தேசம் இருக்க முடியாது. தேசத்தில் இருக்கின்ற பற்றின் அடிப்படையில் தேர்தலுக்கு அப்பாலும், அரசியலுக்கு அப்பாலும் நாங்கள் உங்களுக்கு செய்ய வேண்டியதை செய்வோம் எனத் தெரிவித்தார்.

## புல்மோட்டையில் கஞ்சா....

நடைபெற்று வருவதாகவும் புல்மோட்டை காவல்துறையினர் தெரிவித்தனர்.

சந்தேக நபரை இம்மாதம் 12ஆம் திகதி மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் கைது செய்துள்ளதாகவும் சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி ஒரு வாரத்துக்கு தடுத்து வைத்து விசாரணைகள் செய்வதற்கு நீதிமன்றில் அனுமதி பெற்றுக்கொண்டதாகவும் ஒருவார தடுப்பு காவலின் பின்பு 35 வயதுடைய சந்தேக நபரை புல்மோட்டைக் காவல்துறை மீண்டும் நீதிமன்றில் [illegible] பதில் நீதிமன்ற நீதிபதி கயான் மீ ஹக[illegible] உத்தரவு பிறப்பித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஓர் அழகிய பாடமாக ஓவியம் அல்லது நடனம் அல்லது இசை எனும் பாடத்தை மாணவர்கள் தெரிந்தெடுப்பதற்கான ஒரு பரீட்சைக்கு 44 மாணவர்களைக் கொண்ட குழு ஒன்று தோற்றியது. அதன் பேறுகளுக்கேற்ப ஒவ்வொரு பாடத்திற்கும் தெரிந்தெடுப்பதற்கான தகைமைகள் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைகள் வென் வரிப்படத்தில் காணப்படுகின்றன.

**A.** ஓவியத்திற்கான தகைமைகள் உள்ள மாணவர்கள்
**B.** நடனத்திற்கான தகைமைகள் உள்ள மாணவர்கள்
**C.** இசைக்கான தகைமைகள் உள்ள மாணவர்கள்




01. இசைக்கான தகைமைகள் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை?

02. ஓர் அழகியல் பாடத்திற்கேனும் தகைமைகள் இல்ல -ாத மாணவர்களின் எண்ணிக்கை யாது?

03. எத்தனை மாணவர்கள் தமக்கு விருப்பமான எந்த ஓர் அழகியல் பாடத்தையும் தெரிந்தெடுப்பதற்கான வாய்ப்பை பெறுவர்?

04. இம் மாணவர் குழுவிலிருந்து ஒருவரை எழுமாறாகத் தெரிந்தெடுத்தால், அவர் கட்டாயம் ஓவியப்பாடத்தை தெரிந்தெடுப்பதற்கான வாய்ப்பை பெறுவர்?

05. ஓவியத்தை அல்லது நடனத்தைத் தெரிந்தெடுக்க, ஆனால் இசையைத் தெரிந்தெடுக்க, இயலாத மாணவர்களின் எண்ணிக்கை 4ஆகும் என்னும் கூற்றைத் தொடைக் குறிப்பீட்டில் எடுத்துரைக்க.

06. ஓர் அழகியல் பாடத்திற்கேனும் தகைமைகள் இல்லாத மாணவர்களுக்கும் ஓவியப்பாடத்தை தெரிந்தெடுக்க மாணவர்களின் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

## பாடம் : வரலாறு

01. பின்வருவனவற்றில் சீரிய காசியப்பனது ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வந்த வணிகன் ஒருவன் கேள்விப்பட்டிருக்க முடியாதவை?

யு- பிக்குணி சங்கம் நிறுவியமை

டி- அபயகிரி விகாரை நிர்மாணித்தமை

உ-தம்பதெனியாவில் இரண்டாம் பராக்கிரமபாகு சிம்மாசனம் ஏறியமை.

ன-ஐந்தாம்மகிந்தன் சிறைக்கைதியாகச் சோழ தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை.

ந-பாண்டு,பரிந்த என்போர் அடங்கிய குழுவொன்று இலங்கை மீது படையெடுத்தமை.

க-பராக்கிரமபாகு சமுத்திரம் கட்டப்பட்டமை.

(1)உ,னஈக (2)ய,உ,ன (3)டி,ன,க (4)உ,ந,க

02. பொலநறுவையை தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்காக இரண்டாம் கஜபாகு,முதலாம் பராக்கிரமபாகு ஆகியோருக்கிடையிலான உடன்படிக்கைப் பற்றிக் குறிப்பிடுவது,

(1)கல்பொத்த சாசனம் (2)பனாக்கடுவச் செப்பேடு
(3)அம்பகமுவச் செப்பேடு (4)சங்கமு விகாரைக் கல்வெட்டு

03. கீழ்வரும் நிறுவனங்கள் அமைக்கப்பட்ட வரலாற்று வரிசைக் கிரமம் எது?

a - ஐக்கிய நாடுகள் சபை

b - தெற்காசிய பிராந்திய நாடுகளின் கூட்டுறவு(சார் அமைப்பு)

c - சர்வதேசச் சங்கம்

d - அணிசேரா நாடுகள் அமைப்பு

(1) c,a,d,b (2) a,c,b,d (3) d,a,b,c (4) c,d,a,b


**வரலாறு - யாப்பு**
**ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார்**
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.


## பாடம் : பௌதீகவியல்


01. பின்வருவனவற்றில் எது ஒரு எண்ணிக் கணியமாகும்?
(1)கதி (2)நிறை (3)வேகம் (4)ஆர்முடுகல்

02. பின்வரும் சந்தர்ப்பங்களில் எதில் வேலை நடைபெறவில்லை?
(1) மரக்குற்றியை கயிற்றில் கட்டி இழுத்துச் செல்லல்.
(2) உயர்த்தி மூலம் சுமை உயர்த்தப்படல்.
(3) நீருள்ள வாளியொன்றை கயிற்றால் மேல் நோக்கி இழுத்தல்.
(4) பஸ் வண்டியொன்றை சிறுவன் ஒருவன் தள்ள முற்படுதல்.

03. வீட்டு மின் சுற்றில் விளக்குகளும், குதைகளும் முறையே எவ்வாறு தொடுக்கப்பட்டுள்ளன?
(1)தொடர்நிலை,தொடர்நிலை
(2)சமாந்திரநிலை, சமாந்திரநிலை
(3)தொடர்நிலை, சமாந்திரநிலை
(4)சமாந்திரநிலை,தொடர்நிலை

04. விசைத் திருப்பத்தின் அலகு யாது?
(1)யூல் (2)வோல்ற்று
(3)வாற்று (4)நியூற்றன்-மீற்றர்

05. அருகில் உள்ள கோல் சமநிலையில் இருக்க P யின் பெறுமதி
(1) 40 N (2)20 N
(3) 80 N (4) 10 N




06. வெள்ளொளிக் கற்றை ஒன்று அரியத்தினூடாக செல்லும் போது பல நிறங்களாகப் பிரிகையடையும். இவ்வாறாக பிரிகையடைந்து நிறங்களை மீண்டும் அதனையொத்த மற்றுமொரு அரியத்தை பயன்படுத்தி ஒன்று சேர்த்து வெள்ளொளிக் கற்றை ஒன்றினை பெற்றுக் கொள்ளலாம்.
இத் தரவுகளுக்கு அமைய மேற்கொள்ளக் கூடிய முடிவு யாது?
(1) ஊடுகாட்டும் தன்மையுள்ள எந்தப் பொருளினால் ஆக்கப்பட்டி -ருப்பினும் அரியங்கள் நிறப் பிரிகையை ஏற்படுத்தும்
(2) வெள்ளொளி பல நிறங்களின் சேர்க்கையாகும்
(3) அவ்வாறாக இரண்டு அரியங்களை ஒழுங்கு முறைப்படி பயன்படுத்தலானது கண்ணாடிக் குற்றி ஒன்றினை பயன்படுத்துவதற்கு ஒப்பானதாகும்.
(4) அரியம் ஆக்கப்பட்டுள்ள பொருளின் முறிவுக் குணகத்திற்கும் நிறப் பிரிகையின் அளவுக்கும் இடையில் தொடர்பு உண்டு.


**விஞ்ஞானம் (பௌதீகவியல்)**
**பல்தேர்வு**
**ஆசிரியர் . பொன்னுத்துரை தவசீதன் BSC**
மாணவர் ஒளி கல்வி அபிவிருத்தி மையம், திருகோணமலை.


## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### இணை மொழிகள்

மேலே வந்த வாக்கியங்களில் ஆற அமர, கண்ணீரும் கம்பலையும் எனும் சொற்றொடர்கள் அவ்வாக்கியங்களைப் பொருட் செறிவும் உயிர்ப்பம் உடையனவாக ஆக்குகின்றன. இவ்வாறு பயன்பட்ட சொற்றொடர்களே இணை மொழிகள் எனப்படும். இந்த இணை மொழிகளை மூன்று வகையாக வகுத்து நோக்கலாம்.

1.ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட பொருளுடைய அரு சொற்கள் இணைந்து வருதல். உ-ம் ஆசையும் பாசமும்.

2.மாறுபட்ட பொருள் குறிக்கும் இரு சொற்கள் அணைந்து வருதல். உ-ம் ஆதி அந்தம்

3.ஓசை நயம் கருதி அமைபவை இவ்வாறு அமைபவற்றுள் ஒன்று மட்டுமே பொருளுடையதாக அமையும். உ-ம் அந்தி சந்தி

**<u>தொடர்புபட்ட இரு சொற்களாக அமைபவை</u>**

1.ஆய்ந்து ஓய்ந்து
2.ஈடும் எடுப்பும்
3.ஈவு சோர்வு
4.உற்றார் உறவினர்
5.ஏமம் சாமம்
6.ஒளிப்பு மறைப்பு
7.கள்ளங் கபடம்
8.கட்டுக் காவல்
9.கல்வி கேள்வி
10.கண்ட துண்டம்
11.காய்ந்து கருகி
12.கிண்டிக் கிளறி




**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special
Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,


## Grammar

**Fill in the blanks using the words given.**

Suraj's mother bought him a computer for his twelth birthday. By fifteen he had become very good at using his computer, but (1)............ was his only hobby. His (2)........ wanted him to go out (3)........... do things, but he had (4) .......... few friends. Nothing could make (5)........... turn his computer off. In (6).......... end, his mother threatened to (7)........... off the electricity. suraj went (8)......... bed and pretended to be (9)........... but at midnight he got (10)........... to work at the computer. (11)........... had become a computer addict. (12)............ morning suraj was found lying (13)........... the floor. He had collapsed (14).......... he was very tired. Two weeks in hospital made him realise that he should not allow his computer to control his life.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| away, | his, | it, | on, | him, | because, |
| he, | very, | off | asleep, | one, | up, |
| and, | the, | mother, | to, | the | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்


விளையாட்டு முரசு

## வலைப்பந்தாட்டச் சங்கத்தின் உபதலைவியானார் சிதம்பரநாதன் சுரேந்தினி



இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தின் உபதலைவியாக தெரிவுசெய்யப்பட்டவர் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளரும் மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளரும், யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் விரிவுரையாளருமான சிதம்பரநாதன் சுரேந்தினி ஆவார். இதேவேளை, இவர் தென்கிழக்காசிய நாடுகளின் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் மத்தியஸ்தராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டயலொக் சம்பியன்ஸ் லீக் சுப்பர் சுற்று



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் டயலொக் சம்பியன்ஸ் லீக் சுப்பர் – 8 சுற்றில் றினோன் கழகம் தனது தொடர்ச்சியான வெற்றியைப் பெற, கலம்போ எவ். சி. முழுப் புள்ளிகளைப் பெறத் தவறியது. கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் கம்பளை கிறிஸ்டல் பெலஸ் அணியை எதிர்த்தாடிய முன்னாள் சம்பியன் றினோன் கழகம் 2–0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இதேவேளை இப்போட்டியைத் தொடர்ந்து நடைபெற்ற களுத்துறை புளூ ஸ்டாருக்கு எதிரான போட்டியில் முழுப் புள்ளிகளைப் பெற கலம்போ எவ்.சி. தவறியது. இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததால் கலம்போ எவ்.சி. பெரும் ஏமாற்றம் அடைந்தது. அத்துடன் இப்போட்டியில் மத்தியஸ்தரின் சிவப்பு அட்டைக்கு எம்.எச்.எம்.ரமீஸ் இலக்கானதால் அவரை அடுத்த போட்டியில் கலம்போ எவ். சி. இழக்க நேரிட்டுள்ளது.

## கார்கில்ஸ் பூட் சிட்டி ஏவ்ஏ கிண்ணம் 509 அணிகளுடன்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் கார்கில்ஸ் புட் சிட்டி எவ்.ஏ. கிண்ணம் 509 அணிகளைக் கொண்டு இன்று ஆரம்பமாகவுள்ளது.

2015ம் ஆண்டுக்கான எவ்.ஏ. கிண்ணத்தில் மொத்தம் 509 கழக அணிகள் கலந்துகொள்கின்றன. இன்று 21ஆம் திகதி ஆரம்பமாகும் கார்கில்ஸ் புட்சிட்டி எவ்.ஏ. கிண்ணம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை நடைபெறவுள்ளது.

கால்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் இவ் எவ்.ஏ. கிண்ணத் தொடருக்கு மூன்றாவது தடவையாக கார்கில்ஸ் புட்சிட்டி நிறுவனம் முழு அனுசரணையை வழங்குகின்றது.

2014ம் ஆண்டு நடைபெற்ற எவ்.ஏ. கிண்ணத் தொடரில் மொத்தம் 629 அணிகள் கலந்துகொண்டன. இதில் கொலம்போ எவ்.சி. கழகம் சம்பியனாக தெரிவானது. இரண்டாம் இடத்தை புளூ ஸ்டார் கழகம் பெற்றது.

2015ஆம் ஆண்டுக்கான எவ்.ஏ. கிண்ணத் தொடரில் இலங்கை முழுவதும் உள்ள கழக அணிகள் பங்குபற்றுகின்றன. இதில் மது மாந்தை பிரதேச கழக அணி முதல் தடவையாக எவ்.ஏ.கிண்ணத்தில் கலந்துகொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கிண்ணியா, மன்னார், முல்லைத்தீவு, மூதூர், பருத்தித்துறை, திருகோணமலை, வலிகாமம், வடமராட்சி, வவுனியா என்று வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களின் கழக அணிகளோடு முழு இலங்கையையும் உள்ளடக்கி எவ்.ஏ.கிண்ணம் நடத்தப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

## ஏ.ஐ.ஏ பிரீமியர் தொடர்


கழகங்களுக்கிடையிலான AIA பிரீமியர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் 27ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. நாடளாவிய ரீதியில் 14 கழகங்கள் பங்கேற்கும் AIA பிரீமியர் கிரிக்கெட் தொடர் 11 நாட்கள் வெவ்வேறு மைதானங்களில் இடம்பெறுகின்றது. குழுமட்ட போட்டிகள் அனைத்தும் டிசம்பர் மாதம் 16ம் திகதி வரை இடம்பெறும். முதலாவது அரையிறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 23 ஆம் திகதியும் இரண்டாவது அரையிறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 24 ஆம் திகதியும் இடம்பெறும். இறுதிப் போட்டி டிசம்பர் மாதம் 30ம் திகதியும் இடம்பெறும்.

## ரஷ்யா சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற முடியாது

ஊக்க மருந்து பயன்பாடு தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக ரஷ்யத் தடகள சம்மேளனம் சர்வதேச போட்டிகளில் இருந்து தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, அடுத்த ஆண்டு ரியோ டி ஜெனீரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய தடகள வீரர்கள் பங்கேற்க முடியாது. மேலும் எவ்விதமான சர்வதேச தடகளப் போட்டிகளையும் ரஷ்யா நடத்த முடியாது எனவும் சர்வதேச தடகள சம்மேளனத்தின் தலைவர் செபாஸ்ட்டியன் தெரிவித்துள்ளார்.

## முதல் தர தடகள வீரர் விருது

ஒவ்வொரு வருடமும் தடகள சிறந்த ஓட்ட வீரர் தெரிவு செய்யப்படுவது வழமை. அதேபோல் இவ்வருடம் 2015 ஆம் ஆண்டுக்கான தடகள வீரருக்கான விருதிற்கு சிறந்த குறுந்தூர ஓட்ட வீரர் உசய்ன் பொலட்டின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர் தவிர மேலும் இருவரின் பெயர்கள் சபையினால் முன்மொழியப்பட்டுள்ளது. இந்த விருதிற்காக மேலும் பரிந்துரைக்கப்பட்டோர் எஸ்டன் ஈடன் மற்றும் கிருஸ்டியன் டெய்லர் எனும் இருவரே ஆவர். மேலதிக தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் என அச்சபை தெரிவித்துள்ளது.



## எழுவர் தெரிவாகினர்

பங்களாதேஷ் பிரீமியர் லீக் போட்டிகளில் விளையாட இலங்கை வீரர்கள் 7 பேருக்கு அனுமதி வழங்கியுள்ளது இலங்கை கிரிக்கெட் நிறுவனம். அதன்படி ஜீவன் மெண்டிஸ், அஜந்த மெண்டிஸ், திலகரத்ன டில்ஷான், சாமர கபுகெதர, திசர பெரேரா, சசித்திர சேனாநாயக்க மற்றும் சீகுகே பிரசன்னா ஆகியோருக்கே மேற்படி இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவின் ஐ.பி.எல். பாணியில் பங்களாதேஷில் நடைபெற்றுவரும் பங்களாதேஷ் பிரீமியர் லீக் (பி.பி.எல்.) போட்டிகளில் கலந்துகொள்ள இலங்கை வீரர்களுக்கு ஆரம்பத்தில் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சொந்த தேவைக்கான தனி விமானம் வாங்கிய அதிகம் உழைக்கும் வீரர்

உதைபந்தாட்டம் தவிர விளம்பரங்களிலும் ரொனால்டோ நடித்து வருகிறார். தற்போது அவரது வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து படமும் வெளியாகவுள்ளது.

இது தொடர்பாக பல்வேறு நாடுகளுக்கு அவர் பயணம் மேற்கொள்வது வழக்கம். தற்போது அதற்காக "கல்ப்ஸ்ட்ரீம் ஜீ200" ரக விமானம் ஒன்றை 19 மில்லியன் யூரோ கொடுத்து ரொனால்டோ விலைக்கு வாங்கியுள்ளதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது ரியல்மட்ரிட் அணிக்காக விளையாடி வரும் கிறிஸ்டியானோ ரொனால்டோ, இந்த சீசன் முடிந்தவுடன் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பாரிஸ் செயின்ட் ஜெர்மனியின் அணியில் இணையவுள்ளதாக சொல்லப்படுகிறது.



உலகத்திலேயே உதைபந்தாட்டத்தின் மூலம் அதிகம் சம்பாதிக்கும் வீரர்கள் வரிசையில் ரொனால்டோவுக்குதான் முதலிடம்.

## தனது இடத்தை உறுதிப்படுத்தினார் நடால்

இலண்டனில் இடம்பெற்று வரும் தொழில்முறை டென்னிஸ் வீரர்களுக்கான கூட்டமைப்பின் உலக தொடர் இறுதிகளின் குழுநிலைப் போட்டிகளில் உலகின் இரண்டாம் நிலை வீரரான பிரித்தானிய வீரர் அன்டி மறே, தனது பெறுபேறுகளில் வீழ்ச்சியைச் சந்தித்து உலகின் ஐந்தாம் நிலை வீரரான ஸ்பெயினின் ர'.பேல் நடாலிடம் 6-4, 6-1 என்ற செட் கணக்கில் தோல்வி கண்டுள்ளார். முதலாவது செட்டை கடுமையாகப் போராடிக் கைப்பற்றிய நடால், இரண்டாவது செட்டை இலகுவாகக் கைப்பற்றியிருந்தார். இந்தப் போட்டிக்கு பின் இடம்பெற்ற அடுத்த போட்டியில் சுவிற்ஸர்லாந்தின் ஸ்டியான் வொர்விங்காவையும், டேவிட் பெடரைத் தோற்கடித்தது, அரையிறுதிப் போட்டிகளில் தனக்கான இடத்தை நடால் உறுதிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27வது இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டுப் போட்டி
# பல வெற்றிகளைக் குவித்தது கிழக்கு



இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தேசிய விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து நடத்திய 27வது தேசிய இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு விழா தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் கடந்த 13 ம் திகதி ஆரம்பமாகி 16ம் திகதி நிறைவிற்கு வந்தது.

இப் போட்டிகளில் 13 புதிய தேசிய சாதனைகள் நிலை - நாட்டப்பட்டுள்ளது.

கிழக்கைப் பொறுத்தவரை ஆண்களுக்கான கபடி போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியினர் 2 ம் இடத்தையும், ஆண்க - ளுக்கான கயிறுழுத்தல்

17


# கிண்ணியாவில் தீ விபத்து

கிண்ணியாவில் அலுமினியம் விற்கும் கடையொன்று திடீரெனத் தீப்பற்றியெரிந்ததில் பல லட்சக்கணக்கான சொத்து இழக்கப்பட்டுள்ளது.

நேற்று (20) அதிகாலை நடைபெற்ற இத் தீவிபத்தில் கடை முற்றாக எரிந்து அழிவடைந்துள்ளது.

குறித்த தீவிபத்துத் தொடர்பாக கிண்ணியா காவல்துறையினர் விசா -ரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஹலீம்



## கிழக்கின் தமிழ் அமைச்சர்களைச் சீண்டினார் அமீர்
# கௌரவ தண்டாயுதபாணி ஒரு நிராயுதபாணி
## கௌரவ துரைராஜசிங்கம் ஒரு தலையாட்டிபொம்மை







கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு முன்பாக ஒரு நிராயுதபாணி. கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஒரு தலையாட்டி பொம்மை என கிராமிய அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

ஏறாவூரில் நிகழ்வொன்றில்.....

17

# புல்மோட்டையில் 3கிலோ கஞ்சா - வைத்திருந்தவர் கைது

திருகோணமலை புல்மோட்டைப் பிரதேசத்தில் மூன்று கிலோ கிராம் கஞ்சாவை வைத்திருந்த ஒருவரை அடுத்த மாதம் 2ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு குச்சவெளி நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை (19) உத்தரவிட்டுள்ளது.

புல்மோட்டைப் காவல் பிரிவுக்குட்பட்ட மகேசன்புர பகுதியிலே குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாக கஞ்சா வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், சந்தேக நபருக்கெதிராக திருகோணமலை உயர் நீதிமன்றில் இரண்டு கஞ்சா சம்பந்தமான வழக்குகள்

17

# அல்ஹிஜ்ரா நகரில் வடிகான்களை அமைக்கப் பணிப்பு

தம்பலகாமம் ஹிஜ்ரா நகர் கிராமத்தின் வடிகான் - கள் பல வருடங்களாகத் திருத்தப்படாததால் சில நாட்களுக்கு முன்னர் பெய்த மழையில் வெள்ள நீர் வழிந்தோட முடியாது மக்கள் பெரும் துன்பமடை - ந்துள்ளனர்.

இதனையடுத்து கிராம அபிவிருத்திச் சங்கத் செயலாளர் அப்துல் ஹலீம் எடுத்த முயற்சி - யினால் பிரதேசசபைத் தலைவர் ஜே.விஸ்னு, பிரதேசச் செயலாளர் திருமதி ஸ்ரீபதி ஆகி - யோரின் முயற்சியால் வடிகான் கள் வெட்டப்பட ஏற்பாடுகள் செய்யப்- பட்டுள்ளன.



# காணாமற்போன 52 பேரில் கிழக்கின் இளைஞர்கள் பலர்



அவுஸ்திரேலியாவிற்குப் பயணம் செய்து காணாமற் போயுள்ள ஐம்பத்தியிரண்டு தமிழ் உறவுகளின் நிலை தொடர்பாகக் கடந்த ஆறு ஆண்டுகளாக எவ்வித தகவல்களும் இல்லை என பிபிசி உலகச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

அவ்வாறு புறப்பட்டுச் சென்றவர்களில் பலர் கிழக்கைச் சேர்ந்தவர்கள். அத்துடன் சில இளம் குடும்பங்களும் இப்பயணத்தில் ஈடுபட்டதை மலைமுரசு உறுதிசெய்துள்ளது.

2009ம் ஆண்டில் அக்டோபர் மாதம் 13 ஆம் தேதி இந்தியக் கடற்பரப்பில் இருந்து புறப்பட்டுச் சென்ற படகொன்றில் பயணம் செய்ததாகக் கூறப்படுகின்ற 52 பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய தகவல்களே இதுவரை தெரியவில்லை.

இலங்கையிலும் இந்தியாவிலும் அப்போது செயற்பட்டு வந்த முகவர்களின் உதவியுடன் இந்தப் பயணத்தை மேற்கொள்ளத் துணிந்திருந்த போதே, 52 பேர் காணாமல் போயிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆபத்து மிக்க அதேநேரம் பின்னர் தடைசெய்யப்பட்ட இந்த படகுப் பயணத்திற்கு, பயணி ஒருவருக்கு இலங்கைப் பணம் 25 லட்சம் ரூபா கட்டணமாகக் கேட்கப்பட்டதாகவும், முற்பணமாக ஒரு லட்சம் ரூபா செலுத்தி பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும், அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்த பின்னர் மிகுதி பணத்தைச் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் நிபந்தனை விதித்திருந்ததாகத் தெரிவிக்கப் - படுகின்றது.

ஆனால் 52 பேருடன் புறப்பட்டுச் சென்ற படகுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் போனதையடுத்து, யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வந்த முகவர் தலைமறை வாகியிருப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

அதேநேரம் இந்தியாவில் இருந்து செயற்பட்ட முகவர் கைது செய்யப் - பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் காணாமல் போன படகும், அதில் இருந்தவர்களும் எங்கு சென்றார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல், அவர்களின் குடும்ப உறவினர்கள் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் பிபிசியின் உலகத் தமிழ் செய்திச் சேவை தெரிவிக்கின்றது.




முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட
ஓவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி
திறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள்,
துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து
வகையாக ஓவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின்
விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும்
திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி,
திருகோணமலை.
0777 555 738

இவ்வாரப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 21.11.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org